
செப்டெம்பர் 05 - செப்டெம்பர் 11, 2009 September 05 - September 11, 2009 பக்கங்கள் - 28 25.00





PUPLIC LIBRARY JAFFNA.

# தமிழ்க் கட்சிகளின் அரசின் கைக்கூலிகளின் அரங்கமா?!

'தமிழ்க் கட்சிகளின் அரங்கம்' என்று கூறி மீண்டும் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றும் நாடகமா நடக்கிறது என்று தமிழ் மக்கள் கேட்கின்றனர்.

'தமிழ்க் கட்சிகளின் அரங்கம்' என்று ஒன்றுபட்டிருக்கும் ஒன்பது தமிழ்க் கட்சிகளில் ஒன்று இரண்டைத் தவிர மற்றவை தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பலவீனப் படுத்தியவை. அதை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதல்ல; தமிழ்



பேசும் உலகம் அறிந்த விடயம்.

அது மட்டுமல்ல கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் தற்போதைய பேரினவாத அரசுக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள்தான் பெரும்பாலானவர்கள்.

இந்த அரங்கத்தில் உள்ளவைகளை கட்சிகள் என்று கூறுவதிலும் பார்க்க சிறு குழுக்கள் என்றே கூறலாம். எப்பொழுதும் பேரினவாத அரசு தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக இப்படியான சிறு சிறு குழுக்களை உருவாக்கி தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை சிதறடித்து வந்ததன் விளைவே இன்று தமிழ் மக்கள் இவ்வளவு துன்ப துயரங்களையும் அனுபவிக்க முழுக் காரணம்.

தமிழ் மக்களால் தூக்கி எறியப்பட்ட இவர்களில் பலரிடம் எவ்விதமான கொள்கைகளோ, சேவைமனப்பான்மையோ, ஊர், இன, மொழிப்பற்றோ கிடையாது. பணம், பதவி, ஆடம்பர வாழ்வுக்காக எப்பக்கமும் சாயக்கூடியவர்கள். இதற்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீழ்த்துவதற்கு இப்பேர்வழிகள் ஆடிய ஆட்டம் மக்கள் அறிந்த விடயமே.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சில தவறுகள் இருந்தாலும் அவர்கள் கடைசி வரைக்கும் பேரினவாத சிங்கள அரசின் தமிழ் மக்கள் மீதான காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறைகளுக்கு எதிராக போராடியவர்கள். அத்தகைய புலிகளைக் கூட சிங்களக் கூலிப்படைகளுக்கு காட்டிக் கொடுத்த சிறு குழுக்கள் இன்று நல்ல பிள்ளைகளாக நடித்துக்கொண்டு இந்த தமிழ்க் கட்சிகளின் அரங்கில் உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக உள்ளார்கள்; அவர்கள் இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்காது என்று சிங்கள அரசுக்கு வால்பிடித்த இப் பேர்வழி களினால் ஏன் அரசுடன் பேசி தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது?

தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக (சலுகைகளுக்காக அல்ல) எந்தக் கட்சி உறுதியாக நேர்மையுடன் நின்று செயல்படுகின்றதோ அல்லது போராடு கின்றதோ அந்தக் கட்சியை பலவீனப் படுத்துவதே மாறி மாறி வந்த சிங்கள ஆட்சிகளின் வேலை.

ஜனநாயக வழிகளிலும், ஆயுதப் போராட்ட வழிகளிலும் தமிழ் மக்கள் உரிமைக்காக போராடிய பொழுதெல்லாம் எட்டப்பர் கூட்டங்கள் இருக்கவே செய்தன. இத்தகைய எட்டப்பர் கூட்டங்களை தண்டிக்கும் போது அவர்கள் போய் சிங்கள அரசுடன் சேர்ந்துகொண்டு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களைக் காட்டிக்கொடுத்ததே வரலாறு.

தமிழனுக்கும் ஒற்றுமைக்கும் வெகு தூரம். இதை பேரினவாத ஆளும் வர்க்கம் நன்கு அறிந்து வைத்துத்தான் இன்று கூட தமிழ் மக்களுக்கு எதிரான கெடுபிடிகளைச் செய்து வருகின்றது. இந்த நிலையில் தமிழ்க்கட்சிகளின் அரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படி இணைய முடியும்.

தமிழ் பேசும் மக்களுக்காக போராடி புலிகளைக் காட்டிக்கொடுத்து அவர்களை மௌனிக்கச் செய்த அரசுக்கு வால்பிடிக் கும் இந்த அரங்கில் உள்ள பெரும்பா லோர் இன்று, 'தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் நாங்கள் ஒன்பது தமிழ்க்கட்சிகள் இருக்கிறோம்; பத்தாவதாக நீங்களும் சேர்ந்தால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணலாம்' என்பதெல்லாம் வெறும் பகற்கனவு.

இந்த ஏகாதிபத்திய, மகாவம்சகால சிந்தனையுள்ள சிங்கள அரசு இனப்பிரச் சினைக்கு அரசியல் தீர்வுகாண முன்வராது. இடதுசாரிகள் என்று சொல்லிக் கொண்டு திரியும் ஒரு சிலர் கூட பெரும் பான்மை மக்களின் ஆதரவு இல்லாத பேர்வழிகளே.

வடக்குகிழக்கில் இன்று தமிழ் பேசும் மக்கள் வாழ முடியாதபடி அரசும், அரச கூலிப்படைகளும் அடக்குமுறைச் சட்டங்களைப் பிரயோகித்து அம்மக்களை எவ்வழிகளிலும் தலைநிமிர முடியாமல் செய்து வருகின்றனர். எங்கு பார்த்தாலும் கூலிப்படை முகாம்களும், சோதனைகளும் நின்றபாடில்லை.

பயங்கரவாதம் முடிவடைந்து விட்டது இனி அபிவிருத்திதான் என்று அரசும் அதன் ஆதரவு சக்திகளும் கூறினாலும் இன்னும் தமிழ் மக்கள் பீதியுடன்தான் வாழ்ந்து வருகின்றனர். திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும், புத்த சிலை களும், விகாரைகளும், தமிழ் மக்களின் பூர்வீக மண்ணில் நாளாந்தம் இடம்பெற்று வரும் இவ்வேளையில் அரசுக்கு வால் பிடிக்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்ன செய்து கொண்டு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் பேசும் மக்கள் விடுக்கும் வேண்டு கோள் என்னவெனில், இனிமேல் எந்த அரசுக்கும் வால்பிடிப்பவர்களுக்கோ தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விட்டு விலகிச் சென்று தங்களின் சுயநல அரசியல் லாபத்திற்காக வாழ்பவர்களுக் கோ மீண்டும் இடமளிக்காதீர்கள் என்பதே.

கிழக்கு மாகாண சபை என்பது எவ்வித பிரயோசனமும் அற்ற ஒரு மாயை; அவ்வளவுதான். அதனால் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையுமில்லை.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்தால் அவசரகால, பயங்கரவாத சட்டங்களோ, இராணுவ முகாம்களோ தேவையில்லை. அரசு எவ்வித தீர்வையும் முன்வைக்காமல் ஒரு சில தமிழ் உதிரிகளை விலை கொடுத்து வாங்கி ஆயுதத்தின் மூலம் புலிகளை மௌனிக் கச் செய்ததுபோல ஜனநாயக ரீதியில் மக்களால்தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் அதன் தலைவர்களையும் வாயடைக்கச் செய்யப் பார்க்கின்றது.

**- திருகோணமலையான் -**

அறுபத்தி இரண்டு வருட கால இனப்பிரச்சினையை பயங்கரவாதம் என்று ஏமாற்றிக் கொண்டும், இந்தியா மற்றும் பொய் சோஷலிஸம் பேசும் சீனா ஆகியவற்றிலிருந்து ஆயுதங்களைப் பெற்றும், லட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றும், ஐம்பதினா யிரம் தமிழ் மக்களின் அவயங்களை இழக்கவைத்தும், லட்சக்கணக்கான தமிழ் மக்களின் உடைமைகளை அழித்தும், ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை வயது பால் வித்தியாசமின்றி சிறைகளில் அடைத்து சித்திரவதை செய்தும் இன்னும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க சிங்கள அரசுக்கு விருப்பமில்லை.

தமிழனின் அழிவுக்கு முழுக்காரண மும் காலத்திற்கு காலம் வரும் எட்டப்பர் கூட்டங்களே. ஒன்பது தமிழ்க் கட்சிகள் எதற்கு? இவைகள் எல்லாம் பேரினவாத சிங்கள அரசின் தயவில் அரசியல் நடத்தும் குழுக்கள். தமிழ் பேசும் மக்களால் நிராகரிக்கப்பட்ட பேர்வழிகள். சைவத் தமிழ் மக்கள் தங்கள் இறந்தவர்களின் ஆத்மசாந்திக்காக கிரியைகள் செய்து தீர்த்தமாடும் திருகோணமலை கன்னியா வென்னீரூற்றுப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயம் அழிக்கப்பட்டு இன்று அது மீண்டும் கட்டமுடியாத நிலை யில் தடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை அங்கு புத்தவிகாரை ஒன்றைக் கட்டுவதற்கு சில புத்தகுருமார் முன்னின்றி அரசப்படை களின் உதவியுடன் செயல்பட்டு வருகின் றனர். இந்த நிலையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஒரு தமிழனாக இருந்தும் எவ்வித பிரயோசனமும் இல்லை.

இந்த அநியாயங்களை தட்டிகேட்க முடியாத அரசுக்கு வால்பிடிக்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் அடுத்த தேர்தலில் ஒரு சில எம்.பிப் பதவிகளையாவது பெறுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தங்களுடன் சேர அழைப்பது புதிய விடயமல்ல.

கேவலம் கெட்ட விலைமாது அரசியல் நடத்தும் குழுக்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு விடிவு எப்படிக்கிடைக்கும். தமிழ்க்கட்சிகளின் அரங்கம் என்று கூறி தமிழ் மக்களை மடையர்களாக்க வேண்டாம். கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தகுந்த பாடம் புகட்டியது போதாதா?

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பையும் அதன் தலைமையையும் தொடர்ந்து பாதுகாப்பதுதான் தமிழ் மக்களுக்கு உள்ள ஒரே ஒரு பலம். *

# காடுகள் என்றார்கள் கட்டாந்தரை தான்!



''போரில் மனிதர்கள் வீழ்வதைப் பார்த்திருக்கிறோம். அங்கே மரங்களே வீழ்ந்து கிடக்கின்றன. காடு என்று சொல்கிறார்கள், ஆனால் அங்கே காட்டுக்கு பதில் கட்டாந்தரைதான் தென்படுகிறது'' என்று சொல்கிறார் எம்.எஸ். நாகராஜன். உடல் ஊனமுற்றோர் மற்றும் மன நிலை பாதிக்கப்பட்டோருக்கான ஆசிய பசுபிக் விளையாட்டுப் போட்டிகளின் மேலாளர் இவர். சமீபத்தில் இலங்கை சென்று தமிழ்ப் பகுதிகளை பார்வையிட்டு வந்திருக்கிறார்.

''கண்டியிலிருந்து வவுனியா பகுதிக்குச் செல்ல நாலரை மணி நேரம் ஆகிறது. இடையில் இரண்டு ராணுவ முகாம்கள். சிங்கள இராணுவ வீரர்கள் எம்மை கடுமையாக சோதிக்கிறார்கள். அதன் பின்னே புலிகள் அரசாண்ட பகுதிக்கு எம்மை அனுமதிக்கிறார்கள்.

வவுனியாவுக்கு அப்பால் சென்றால் நிறைய வீடுகள் இருக்கின்றன. ஆனால் எதிலும் மனிதர்கள் இல்லை.

வவுனியாவிலிருந்து இரண்டு மணி நேர பயண தூரத்தில் இருக்கிறது கிளிநொச்சி. இங்கும் இதே நிலை தான். மக்களையே பார்க்க இயலவில்லை.எல்லோரும் அகதி முகாம்களில் இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது. சொந்த நாட்டிலே சொந்த மண்ணிலேயே மக்கள் அகதிகளாய் இருக்கிறார்கள்.

''இங்குள்ள அகதி முகாம்களுக்குச் சென்று பார்வையிட இராணுவத்தினரிடமிருந்து அனுமதி பெற வேண்டும். சாதாரணமானவர்கள் போய் பார்வையிட முடியாது. இந்த நகரங்களைச் சுற்றி ஏராளமான விளைநிலங்கள் இருக்கின்றன. ஆனால் எதிலும் விவசாயம் நடைபெறவில்லை. காரணம் அந்த விளைநிலங்களில் கண்ணிவெடிகள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது. அதனால் மக்கள் அந்த நிலங்களில் நடக்கவே பயப்படுகிறார்கள். கண்ணிவெடிகளை நீக்க இராணுவம் இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அங்கிருந்து ஏ9 வீதி மார்க்கமாய் ஓமந்தை, புளியன்குளம் வழியாகச் சென்றால் யாழ்ப்பாண நகரம் வருகிறது. இங்கு மக்களைப் பார்க்க முடிகிறது. இந்த மக்களின் நிலை பரிதாபகரமாய் இருக்கிறது. கன்னம் ஒட்டி, உடல் மெலிந்து, வயிறு காய்ந்து, பேசவே பயந்து வாழ்கிறார்கள். ஒருகாலத்தில் மிடுக்காய் செல்வச் செழிப்பாய் வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள்.

அவர்களை இப்போது பார்க்கும்போது நம்மையும் அறியாமல் கண்ணீர் வருகிறது. நாங்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகிறோம் என்றதும் அவர்கள் கண்களில் ஒரு நம்பிக்கை ஒளி தெரிகிறது. எமது விசாரிப்புகளுக்கு தலையசைப்பு மட்டுமே பதிலாகக் கிடைக்கிறது. சிலர் கொஞ்சம் தைரியமாகப் பேசுகிறார்கள். ஆனால் நாட்டைப் பற்றியோ, இராணுவத்தைப் பற்றியோ அல்ல, வெறும் நலம் விசாரிப்புகள் மட்டும்.

அங்கே ஒரு குடும்பத்தினரிடம் பேசினேன். அந்தக் குடும்பத்தில் தந்தைக்கு ஒரு கால் கிடையாது. தாய்க்கு இரண்டு கால்களும் கிடையாது. அதோடு கை விரல்களும் இல்லை. சமீபத்திய போரில் இவர்களுக்கு ஏற்பட்ட கொடூர இழப்புகள் இவை. இவர்களுக்கு மூன்று வயதில் ஒரு மகன்.அந்த மகனை கவனிக்க முடியாமல் அவர்கள் படும்பாடு வார்த்தைகளால் சொல்ல முடியாது. 'நாங்கள் வீட்டுக்குள் இருந்தபோது பீரங்கிக் குண்டு வந்து பக்கத்து மைதானத்தில் விழுந்தது. அந்த அதிர்வில் எங்கள் வீடு சிதைந்தது. எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு மோட்டார் பைக் எங்கள் வீட்டுக்குள் விழுந்து எங்களை சின்னாபின்னமாக்கியது. குண்டு எங்கள் வீட்டின் மீது விழுந்திருந்தால் ஒரேயடியாக போய்ச் சேர்ந்திருப்போம். இப்படி அரைகுறை உடலோடு சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்க மாட்டோம்' என்று அழுதுகொண்டே சொல்கிறார் அந்தக் குடும்பத் தலைவர். இது போன்று பல குடும்பங்கள். ஒரு தலைமுறை தமிழர்களே சிதறடிக்கப்பட்டு விட்டார்கள்.


அங்கே ஒரு தமிழர் என் காதில் கிசுகிசுத்த தகவலைக் கேட்டு அதிர்ந்து போனேன். தமிழர் பகுதிகளிலெல்லாம் இளம் சிங்கள இராணுவ வீரர்களை தங்க வைக்கிறார்களாம். எந்த நேரமும் தமிழ்ப் பெண்களுக்கு ஆபத்துத்தானாம். யாரும் தடுக்க முடியாதாம். என்ன கொடுமை இது.

யாழ் நகர மத்திக்கு சிறிது தள்ளி புகழ்பெற்ற நல்லூர் கந்தசாமி கோயில் இருக்கிறது. தமிழர்கள் வணங்கி வந்த கோயிலுக்கு இப்பொழுது சிங்களர்கள் அதிகம் வந்து வழிபடுகிறார்களாம். முன்பு இந்தக் கோயிலுக்கு அவர்களால் வர இயலாமல் இருந்தது. இப்போது தமிழர்கள் தயக்கத்துடன் நான் அந்தக் கோயிலுக்கு வருகிறார்கள். கடவுளை வணங்குகிறார்கள்.

உலக மக்கள் கைவிட்ட நிலையில் தமிழர்கள், அந்தக் கடவுளை வணங்குவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இப்படி நாகராஜன் தனது ஈழ அனுவங்களை முடித்துக் கொண்டார். *

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்




குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அன்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, ITI.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

# இந்தியாவின் செல்வாக்கு மண்டலம்

அருள் மனோகரன்

இந்தப் பத்தியை எழுத ஆரம்பிக்கும்போது இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் இலங்கையில் வந்திறங்குகின்றார். நிருபமா ராவின் வருகை எந்த வகையில் அமைகின்றது? இதனால் இலங்கை அடையப்போகும் நன்மைகள் என்ன? இலங்கை சந்திக்கப்போகும் நெருக்கடிகள் எவை? தமிழர்களுக்கு கிடைக்கவுள்ள இலாப - நட்டங்கள் எப்படியிருக்கும்? இவை போன்ற கேள்விகள் நிருபமா ராவின் வருகையையொட்டி பொதுவாகவே எழுகின்றமை தவிர்க்க முடியாதது.

நிருபமா ராவ் முன்னர் அமெரிக்காவில் இந்தியத் தூதுவராக பணியாற்றியவர். இதைவிட வெளியுறவுத் துறையில் நீண்ட கால அனுபவமுடையவர். 1980 களின் பிற்பகுதியில் இலங்கையிலிருந்த இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்ஸிற்றைப் போன்ற முக்கிய ஆளுமையுடையவர்.

நிருபமாவின் வருகை என்பது ஒரு புதிய தொடக்கமாக அல்லது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு புதிய உற்சாகத்தை ஊட்டுவதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத்தீவில் இந்தியாவின் செல்வாக்கு மண்டலம் என்பது தளம்பலானதாகவே இருக்கின்றது என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணங்களில் ஒன்று, இந்தியாவுக்குப் போட்டியாக இலங்கையில் ஆதிக்கம் பெற்றிருக்கும் சீனாவின் செல்வாக்கு ஆகும்.

விடுதலைப்புலிகள் இருந்தவரையில் இந்தியாவின் நடவடிக்கைகள் அல்லது செல்வாக்கு என்பது நெருக்கடிக்கு உள்ளாகியே இருந்தது. 1987 இல் இந்தியாவுக்கும் புலிகளுக்குமிடையில் கசப்புகள் உருவாகி பகையில் முடிந்தது. பின்னர், இந்தப் பகையை மறப்பதற்கு எடுக்கப்பட்ட எந்த முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

இந்தியா புலிகளைப் பின்னர் ஏற்றுக்கொள்ளவே இல்லை. இதனால், ஒரு முன்னெச்சரிக்கையுடன் இலங்கை விவகாரங்களில் இந்தியா செயற்பட்டது. ஆனால், இந்த முன்னெச்சரிக்கையோ வெளிப்படையான நடவடிக்கைகளில் மட்டுமே கவனிக்கப்பட்டது. உள்ளரங்க நடவடிக்கைகளில் அது தன்னுடைய தீவிரத்தைக் குறைக்கவில்லை. நடைபெற்ற யுத்தத்தில் இந்தியா வகித்த பங்கைப் புரிந்து கொண்டவர்களுக்கு இந்தியாவின் நிலைப்பாட்டைப் பற்றியும், இந்தியாவின் செல்வாக்கைப் பற்றியும் தெரியும்.

சரி, இப்போது இந்தப் பின்னணியில் இந்தியாவின் செல்வாக்கு மண்டலம் இலங்கையில் இப்போது என்ன நிலையில் உள்ளது? எதிர்காலத்தில் இதன் நிலைமை எப்படி அமையலாம் என்பதைப் பற்றிப் பார்க்கலாம்.

கடந்த முப்பது ஆண்டுகளில் இந்தியா இலங்கையின் மீது செலுத்திவரும் ஆதிக்கம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா இலங்கை மீது செலுத்திய ஆதிக்கத்தை - செல்வாக்கை ஒத்ததாக இருக்கின்றது.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் மதரீதியாகவும் (இந்து, பௌத்த), மொழி ரீதியாகவும் அரச பரம்பரையில் கொண்டிருந்த திருமண பந்தத்தின் வழியாகவும் இந்த ஆதிக்கமிருந்தது. ஆனால் பின்னர் இந்தியச் சிந்தனை மரபின் தாக்கத்திலிருந்து மெல்ல மெல்ல மீண்டு, இலங்கை தனக்கான அடையாளங்களை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. எனினும், இந்திய அடையாளம் அல்லது இந்தியப் பாதிப்பு அல்லது இந்திய ஆதிக்கம் என்பது இலங்கையிலிருந்து முற்றாக நீங்கவேயில்லை.

பின்னர், 1980களில் இந்தியா இலங்கை மீது அதிக தலையீடுகளைச் செய்தது. இதில் பல நேரடியானவை. குறிப்பாக தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கியமை, இலங்கை - இந்திய உடன்படிக்கை, இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகள் என்று இவை அமைந்தன.

எனினும் இவை பலத்த நெருக்கடிகளையும் இந்தியாவுக்குக் கொடுத்தன. அதாவது இந்திய அணுகு முறையின் தவறுகளாக இந்த நடவடிக்கைகளின் விளைவுகள் அமைந்தன.

எனினும், இந்தியா ஓயவில்லை. அதனால் ஓய்ந்திருக்க முடியாது. அது பிராந்திய வல்லரசாக வகிக்கும் பாத்திரம் அப்படி இந்தியாவை உறங்குநிலைக்குக் கொண்டு போக முடியாது.

எனவே, இந்தியா தனக்குப் பொருத்தமான, சார்பான நிலைமைகளையும் அணிகளையும் உருவாக்குவதில் முயற்சித்தது. அதன் விளைவாக அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியற்கட்சிகள் சிலவற்றை தனக்குச் சார்பாக வளர்த்துள்ளது.

இதேவேளை, கல்வி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இந்திய சார்பு மனப்பாங்கும் சிந்தனையுமுடைய ஓர் அணியை புத்திஜீவிகள் மட்டத்தில் உலுவாக்கவும் அது முயற்சிக்கிறது. இதற்காக அது கடந்த 25 ஆண்டுகளாக இலங்கைத்தீவிலிருந்து ஆட்களை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் இருக்கின்ற விரிவுரையாளர்களில் கணிசமான தொகையினர் இந்தியக் கல்வி வாய்ப்பில் ஈடுபட்டவர்கள். அல்லது ஈடுபடுவோர்.

அடுத்தது, இன்றும் தன்னுடைய மடியில் வைத்திருக்கும் அகதிகள். இந்த அகதிகளின் தொகை இரண்டு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் வரையில் அமையும் என்று சொல்லப்படுகிறது.

அடுத்தது, இனப்பிரச்சினைக்கான தீர்வில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் காட்டும் போக்கு. ஆனால், இலங்கையின் இனப்பிரச்சினையை இந்தியா ஒருபோதும் தீர்க்க விரும்பாது. அப்படி அது இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலுமாயின் அது சர்வதேச நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகவே அமையும். என்றாலும் இனப்பிரச்சினைத் தீர்வில் தானும் சம்பந்தப்படுவதாக அது காட்டிக்கொண்டு தனது செல்வாக்கை அதனூடாக நிறுவ முயற்சிக்கின்றது.

இதேவேளை, இந்தியா வர்த்தகப் போட்டியிலும் தனது செல்வாக்கை இலங்கையில் நிலை நாட்டியுள்ளது. இன்று நாம் பயன்படுத்தும் வீட்டுப் பாவனைப் பொருட்களில் இருந்து, வீதியில் ஓடுகின்ற வாகனங்கள் வரையில் இந்திய உற்பத்திகளே அதிகமாகவுள்ளன.

இப்போது இவை தவிர்த்து இலங்கையில் தனது தொழில்நுட்பக் கல்வியை, விவசாயக் கல்வியை, கடற்றொழில் ஆலோசனைகள் என மேலும் பல விடயங்களையும் அது செய்ய விரும்புகின்றது.

இதற்காக அது வடக்கிலும் தெற்கிலும் புதிய தொழில்மையக் கல்விக்கான உதவித்திட்டங்களைச் செய்ய முயற்சிக்கின்றது. அத்துடன் இந்திய வங்கிகள் சிலவும் இலங்கையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் கட்டிக்கொடுக்க இந்தியா தீர்மானித்துள்ள 50 ஆயிரம் வீடுகளுக்கான மீதி நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய வங்கியொன்றே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, துணைத் தூதரகங்களை இந்தியா யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் அமைப்பதும் தனது செல்வாக்கு மண்டலத்தை விஸ்தரிக்கும் ஒரு நடவடிக்கையே. அது மட்டுமல்ல வீதியமைத்தல், புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல் போன்ற உட்கட்டுமான நடவடிக்கைகளிலும் இந்தியாவின் கரிசனைகள் அதிகமாகவுள்ளன.

தன்னுடைய நாட்டில் வறுமை, பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற பல நெருக்கடிகள் இருக்கின்றபோதும் அவற்றை விடவும் இலங்கை மீதான ஆதிக்கத்தை வைத்திருக்க வேண்டும்




அல்லது தனது செல்வாக்கை இலங்கையில் நிலை நாட்ட வேண்டும் என்ற தேவையும் விருப்பமும் இந்தியாவுக்கு உண்டு. இதைத்தான் வல்லரசின் பேராசைக் கனவு அல்லது வல்லரசுகளின் நடவடிக்கை என்பது.

ஆகையால், போர் நடவடிக்கைகள் ஓய்ந்தாலும் இலங்கையில் போருக்கு நிகரான அல்லது அதையும் விடப் பாதகமான வர்த்தக நடவடிக்கைகள், கலாசார நடவடிக்கைகள், அரசியல் ஆதிக்க நடவடிக்கைகள் ஓயவில்லை. அவை இன்னும் சூடுபிடித்துள்ளன என்றே கூறலாம்.

கடந்த சில ஆண்டுகளில் சீனா பெற்ற செல்வாக்கு மண்டலத்தை உடைப்பது அல்லது சமனிலைப்படுத்துவது என்ற முனைப்பில் இப்போது இந்தியா இறங்கியுள்ளது.

இதற்கான பணியைச் செய்யும் ஒரு முக்கிய செயற்பாட்டாளராகவே நிருபமா ராவ் இருக்கிறார். *

## கால்களால் பியானோ வாசிக்கும் சீனர்



சீனாவைச் சேர்ந்த 23 வயதுடைய வியூ லீ தனது 10 ஆவது வயதில் சக்தி வாய்ந்த மின்சாரக் கம்பியை தொட்டதன் காரணமாக தனது இரு கைகளையும் இழந்தார்.

கடந்த ஒகஸ்ட் 8 ஆம் திகதி திறமைசாலிகளுக்காக தொலைக்காட்சிகளில் நடத்தப்பட்ட போட்டிகளில் தனது கால்களால் பியானோ வாசித்து இலட்சக் கணக்கான சீன மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து அடுத்த சுற்றில் பங்கு பற்றும் 40 போட்டியாளர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார்.

அவர் பியானோ வாசித்ததை சீன தொலைக்காட்சி நிலையங்கள் முக்கியத்துவம் கொடுத்து ஒளி பரப்பின. இவர் கால்களால் பியானோ வாசித்த போது போட்டிக்கு நடுவர்களாக இடம் பெற்றோர் கண்கலங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

''எனக்கு கைகள் இல்லாத படியால் மக்கள் என்னை நினைத்து கவலை அடைகிறார்கள். ஆனால் நான் மற்றவர்களைப் போல் வாழ்கிறேன்'' என்று சொல்கிறார் இவர். ஒரு சங்கீத கலைஞராக வர விரும்பிய இவர் தனது 19 ஆவது வயதில் தானாக பியானோ வாசித்து இந்நிலைக்கு வந்துள்ளார்.

கால்களால் பியானோ வாசிப்பது முடியாத காரியம் என்று இவரைப் பயிற்றுவித்த ஆசிரியர் இவரை கைவிட்டு விட்டார். இதன் பின்பு இவர் தானாகவே பியானோ பழக ஆரம்பித்து விட்டார்.

(பாலா)




# இலங்கையில் மீண்டும் தடம் பதிக்கும் இந்தியா

## மழைகாலத்துக்கு முன்னர் வன்னி மக்களுக்கு விடிவு கிட்டுமா?

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மீண்டும் கால்பதிக்க இந்தியா காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளது.

போரால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை மதிப்பிட விசேட தூதர் ஒருவரை இலங்கைக்கு அனுப்பப் போவதாக இந்தியா அறிவித்திருந்தது.



பிந்திய முடிவுகளின் பிரகாரம் உயர்மட்ட அரசியல் பிரமுகரை இலங்கைக்கு இந்தியா அனுப்பப்போவதாக அறிவித்துள்ளது.

மத்திய அமைச்சர் பி.சிதம்பரம் அல்லது முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பாலு போன்ற உயர்மட்டத் தலைவரை விசேட நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப் போகிறது இந்தியா.

1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை நிர்வாகத்தில் தலையிட்டது போன்று மீண்டும் இலங்கை நிர்வாகத்தில் இந்தியா தலையிடப் போகின்றது.

அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் தொடர்புகளை வலுப்படுத்தி உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபை நிர்வாகம் உருவாக இந்தியா பங்களித்தது, தலையிட்டது.

அந்த ஒப்பந்தத்தின் கீழ் அமைதி காக்கும் படை என்ற பேரில் இந்திய இராணுவத்தை வடக்கு - கிழக்கில் குவித்து, விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட போர் ஒன்றைத் தொடுத்தது. பெரும் உடைமை, உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியது இந்தியா.

பின்னர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்தி நிர்வாகம் ஒன்று உருவாக இந்தியா தனது பங்களிப்பைச் செய்தது.

தான் ஆயுதம் கொடுத்து உருவாக்கிய விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்ட முனைந்த இந்தியா அந்தப் பணி நிறைவேற முன்னரே தனது படைகளை வாபஸ் பெற்றது.

அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸவின் வேண்டுதலின் பேரில் இந்தியப் படைகள் நாட்டைவிட்டு விலகிச் சென்றன.

அதன்பின் நடந்தேறிய ராஜீவ்காந்தி கொலையுடன் இந்தியா, இலங்கைத் தமிழர்மீது வெறுப்புக் கொண்டிருந்தது. அந்த நிலை நீண்டகாலம் தொடர்ந்தது.

**யாழவன்**

மீண்டும் இலங்கை விவகாரத்தில் தலையிட இந்தியா முன்வந்துள்ளது.

போரால் இடம்பெயர்ந்த மக்களுக்கு சிமெந்து, கூரைத் தகடு போன்றவற்றை வழங்கிய இந்தியா, மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு நிதி உதவியும் வழங்கியது.

50 ஆயிரம் வீடுகளை அமைக்க உதவி வழங்கப் போவதாகவும் இந்தியா அறிவித்துள்ளது.

மீள்குடியமர்வு நடவடிக்கைகள் சீராக இடம்பெறவில்லை என்று எழுந்துள்ள குற்றச்சாட்டை அடுத்து, இலங்கைக்கு நிர்வாக அதிகாரி ஒருவரை அனுப்பி மீள் குடியமர்வை மதிப்பிட இந்தியா முடிவு செய்தது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

மீள்குடியமர்வை மதிப்பிட விசேட தூதர் ஒருவரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என அந்தக் கடிதத்தில் கருணாநிதி கேட்டிருந்தார்.

இதற்குப் பதில் அளித்த பிரதமர், மீள்குடியமர்வை மதிப்பிட விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு விரைவில் அனுப்புவேன் என்று கருணாநிதிக்குப் பதில் அனுப்பினார்.

நிர்வாக அதிகாரி மட்டத்தில் விசேட பிரதிநிதி ஒருவரை அனுப்பப் போவதாக இந்தியா அறிவித்திருந்தது.

இப்போது இலங்கை விவகாரத்தைக் கையாள நிரந்தர விசேடத் தூதுவர் ஒருவரை இந்தியா நியமிக்கப் போவதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

மத்திய அமைச்சர் பி.சிதம்பரம் அல்லது முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பாலு இந்தப் பதவிக்கு நியமிக்கப்படப் போகிறார்கள் என்றும் இது தொடர்பாகப் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் முடிவு செய்வார் என்றும் தற்போது செய்திகள் வெளிவருகின்றன.

இலங்கை விவகாரத்தைக் கையாள நியமிக்கப்பட உள்ளவர், தனியாக மீள் குடியமர்வு விடயத்தை மட்டுமல்லாது, இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தையும் கையாள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் இந்தப் புதிய அணுகுமுறை, இலங்கைக்குச் சிக்கலாகவும் கூட இருக்கலாம்.

இந்தியா செல்லப் போகும் இலங்கை உயர்மட்டக் குழுவுக்கு இந்த விடயம் தெரிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் இந்த உயர்மட்டக் குழு இந்தியா செல்லத் திட்டமிட்டது. ஆனால் இந்தியாவின் வேண்டுகோளின் பேரில் குழுவின் விஜயம் பிற்போடப்பட்டது.

மீண்டும் இக் குழுவின் விஜயம் பிற்போடப் படுமா அல்லது திட்டமிட்டபடி இந்தக்குழு இந்தியா செல்லுமா என்பது குறித்து தகவல்கள் ஏதும் இல்லை.

யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதரகம், இடம்பெயர்ந்த மக்களுக்கு 50ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம், இலகு கடன், காங்கேசன்துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய அபிவிருத்தி, யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையம், சம்பூரில் அனல் மின் நிலையம், வடக்கின் ரயில் பாதைப் புனரமைப்பு, விவசாய அபிவிருத்தி என இன்னோரன்ன திட்டங்களுக்கு உதவுவதற்கு இந்தியா வாக்குறுதி அளித்துள்ளது. வடக்கில் சீனா நடைமுறைப்படுத்த இருக்கும் திட்டங்களுக்குப் போட்டி போட்டு இந்தியாவும் கால் பதிக்க முன்வந்துள்ளது.

இதற்கு மேலாக நிரந்த விசேட தூதரையும் இந்தியா நியமிக்கப்போகிறது.

இந்தியா கல்பதிப்பதன் மூலம் தமிழர்களுக்கு நிரந்தர விடிவுகிட்ட வேண்டும் என்பதே சகலரின் எதிர்பார்ப்பாகும். அது சாத்தியமாகுமா என்பதற்கு காலம்தான் பதில் கூற வேண்டும்.

அது நிற்க- போரால் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் அடுத்த மாதத்துக்குள் மீள்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என அரசாங்கம் அறிவித்துள்ளது.


இன்னமும் 28 ஆயிரம் பேரே வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ளனர். அவர்களே அடுத்த மாதத்துக்குள் மீள்குடியமர்த்தப்பட்டுவிடுவார்கள் என்று அரசு கூறியுள்ளது.

மீள்குடியமர்வுக்காக வவுனியாவில் இருந்து செயலக அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்ட சாந்தபுரம், பொன்நகர், குமாரசாமிபுரம், மயில்வாகனபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னமும் அவர்களது இடங்களில் குடியமர்த்தப்படவில்லை. அந்தப்பிரதேசம் படையினரின் வசம் உள்ளதால் அந்த மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் தமது பிரதேசங் களில் குடியமர்த்தக்கோரிப் போராட்டங்களை நடத் தியபோதும் அவை பயனற்றுப்போய் விட்டன.

இடைத்தங்கல் முகாம்களில் அந்த மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த வாரம் இரு தினங்கள் பெய்த மழையால் அந்த மக்கள் வெள்ளத்தில் மிதக்கும் நிலை ஏற்பட்டது.

தமது இருப்பிடங்களில் இருந்து கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருந்தும் வீடுகளுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுவதாக அந்த மக்கள் கூறுகின்றனர்.



PUBLIC LIBRARY JAFFNA

குடிதண்ணீர், அடிப்படை வசதிகள், இருப்பிடம் ஆகியன இன்றி அந்த மக்கள் அவலப்படுகிறார்கள்.

தறப்பாள்களுக்குள் அந்த மக்களின் அவல வாழ்க்கை தொடர்கிறது. எப்போது விடிவு கிட்டும் என்று தெரியாத ஏக்கத்துடன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள் அந்த மக்கள்.

இதற்குப் புறம்பாக ஏனைய இடங்களில் மீளக்குடியேறிய மக்களும் பெரும் அவலங்களை சந்தித்து நிற்கிறார்கள். வீட்டு வசதிகள் இன்றியும் வாழ்வாதார உதவி இன்றியும் இன்னல்படுகிறார்கள் அந்த மக்கள்.

யுத்தத்தால் சேதமடைந்த தமது வீடுகளைப் புனரமைக்க நிதி உதவிகள் இன்றியும் வாழ்வாதாரத் தொழில்களை ஆரம்பிக்க உதவிகள் இன்றியும் அந்த மக்கள் அவலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரச சார்பற்ற அமைப்புகள் அங்கு செயற்பட அனுமதி கிட்டாததால், பொது மக்களுக்கான உதவிகள் அரசால் மட்டுமே வழங்கப்படுகின்றன.

விவசாயம் செய்ய இலவசமாக உரம், நெல் போன்றவற்றை வழங்குகிறோம். அவற்றின் மூலம் விவசாயத்தை மேற்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு மக்கள் வீடமைக்கலாம் என்று அரசு கைவிரித்துவிட்டது.

விவசாயம் செய்து கிடைக்கும் வருவாயைக் கொண்டுதான் தமது இருப்பிடங்களை அமைக்க வேண்டிய இக்கட்டு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சிறுசிறு கொட்டில்களில் தங்கித் தமது எதிர்காலத்தைச் சீராக்க வேண்டிய கட்டாயத்துக்குள் அந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அவர்களின் எதிர்காலம் எப்போது விடியப் போகிறதோ தெரியவில்லை.

வழமையான, இயல்பான வாழ்க்கைக்கு எப் போது அந்த மக்கள் திரும்பப் போகிறார்களோ என்று தெரியாத நிலை தொடர்கிறது. ✱

இலங்கையில் இருந்து சவூதி அரேபியாவுக்கு தொழில்வாய்ப்புப் பெற்றுச் சென்ற ஏழைப்பெண் ஆரியவதி. இவர் தொழில் புரிந்த வீட்டில் எஜமானரின் கொடுமைக்கு உள்ளாகி உடலில் பாய்ச்சப்பட்ட 24 இரும்பு ஆணிகள் மற்றும் ஊசிகள் சகிதம் இலங்கை திரும்பிய கொடூர சம்பவம் சமீபத்தில் இடம்பெற்றுள்ளது.

# மூன்று வருட உழைப்புக்கு 24 ஆணிகள் சன்மானம்




49 வயதுடைய எஸ்.பீ.ஆரியவதி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கொழும்பிலுள்ள முகவர் நிலையமொன்றின் ஊடாக சவூதி அரேபியாவில் பணிப்பெண்ணாக தொழில் செய்ய அனுப்பி வைக்கப்பட்டார்.

தனக்கு உறுதியளிக்கப்பட்ட வேலை நேரமும் ஊதியமும் அப்பட்டமாக மீறப்பட்டதுடன் தொழில் தொடங்கிய நாள்முதல் மீட்கப்பட்ட நாள் வரை ஒழுங்காக உணவும் ஓய்வும் இன்றி தான் மிருகத்தனமாக இம்சைப்படுத்தப்பட்டதாக அவர் கூறுகிறார்.

இம்சை பொறுக்க முடியாத கட்டங்களில் தன்னை விடுவித்து இலங்கைக்கு அனுப்புமாறு மன்றாடிய போதெல்லாம் பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஆணிகளையும் ஊசிகளையும் அவரது உடலில் செலுத்தி எஜமானரும் அவரது குடும்பத்தினரும் அவரை முடக்கியுள்ளனர். சித்திரவதைகளைத் தாங்கமுடியாத நிலையில் வீட்டை விட்டு வெளியேற எத்தனித்தபோதும் அதற்கான கட்டுக்காவல்கள் அதிகரிக்கப்பட்டதால் கிட்டத்தட்ட மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியின் நிலைமையிலேயே இப்பெண்வாழ்ந்து வந்தார்.

உறவினர்களின் பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் அவரது குடும்பத்தவர்கள் இலங்கையில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மூலம் இப்பெண்ணை இலங்கைக்கு திருப்பி அழைத்துள்ளனர்.

மாத்தறை கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆரியவதியின் உடலில் இரண்டு தொடக்கம் இரண்டரை அங்குல நீளமான இரும்பு ஆணிகள் 24 செருகப்பட்டிருந்தன. உடனடி சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட இப்பெண்ணின் உடலில் இருந்து ஆபத்தான நிலையில் இருந்த பல ஆணிகள் மீட்கப்பட்டன. கடந்த 27ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சத்திரசிகிச்சை பகல் ஒரு மணியளவு வரையும் நீடித்தது.



சத்திரசிகிச்சையை மேற்கொண்ட வைத்தியர் குழாம் ஆரியவதியின் வலது காலில் இருந்து கம்பித் துண்டொன்றையும், வலது கையில் இருந்து ஐந்து கம்பி ஆணிகளையும் அகற்றியது. அதைத் தொடர்ந்து வலது காலில் இருந்து நான்கு கம்பி ஆணிகளும், இடது காலில் இருந்து இரு ஆணிகளும் வெளியேற்றப்பட்டன. மூன்றரை மணித்தியாலங்களாக ஐந்து சத்திரசிகிச்சை நிபுணர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த சத்திரசிகிச்சையின்போது ஆரியவதியின் உடலில் 13 இடங்கள் கீறப்பட்டு ஆணிகளும் கம்பிகளும் வெளியேற்றப்பட்டன.

இவரது உடலில் மேலும் பல ஆணிகள் இறுகியுள்ள போதிலும் அவற்றை அகற்றுதல் நரம்புகளைப் பாதிக்கும் என்பதால் அவை அகற்றப்படவில்லை. அவை இப்பெண்ணின் எதிர்கால வாழ்வை பாதிக்கமாட்டாது என்று சத்திரசிகிச்சை நிபுணர்கள் தெரிவித்தனர்.

வரலாற்றில் கம்புறு பிட்டிய ஆந்தபான வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பெரிய சத்திரசிகிச்சை இதுவே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பெண்ணுக்கு நேர்ந்துள்ள மனிதாபிமானமற்ற தண்டனைக்கு முகம்கொடுக்கும் இலங்கை வெளிநாட்டுப் பணியகம் அவருக்காக முழு மருத்துவச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் முதற்கட்டமாக 11 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. அத்துடன் இப்பெண் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் வெளிநாடு சென்றதால் இலங்கை தேசியக் காப்புறுதி நிதியம் ஓர் இலட்சம் ரூபாவை நட்டஈடாக செலுத்தியுள்ளதுடன் அடுத்த கட்டமாக மேலதிக கொடுப்பனவை வழங்க ஆயத்தமாகவுள்ளது.

- சுப்பர் -

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலங்கள், சத்திரசிகிச்சை பற்றிய விவரங்கள் அனைத்தும் அரேபிய மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டு சவூதி நாட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச ரீதியில் இத்தகைய மிருகத்தனமான செயற்பாட்டுக்கான உரிய நிவாரணத்தைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.


இலங்கையிலிருந்து வறுமை நிலையால் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பணிப்பெண்கள் இவ்வாறு மிலேச்சத்தனமாக தண்டிக்கப்படுவதைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாதெனவும், சவூதி அரசு இவ்விடயத்தில் தலையிட்டு இப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் இலங்கை வெளியுறவு அமைச்சு வேண்டுகோள் விடுத்தள்ளது.

*இம்சை தாங்காமல் இலங்கைக்குத் திரும்ப வேண்டுமென நான் தெரிவித்த போதெல்லாம் பழுக்கக் காய்ச்சிய ஊசிகளும் இரும்பு ஆணிகளும் என் உடலில் செருகப்பட்டன.*

இதற்கிடையில் இப்பெண்ணை சவூதிக்கு அனுப்பிய முகவர் நிலையத்தின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு உள்ளதாகவும், இம்முகவரின் சவூதி நாட்டின் தோழரும் சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் வலியுறுத்தியுள்ளது.

அதேசமயம் இலங்கையிலுள்ள சவூதி அரேபியத் தூதரகத்தின் முன் பல பொதுநல அமைப்புகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியதுடன் இலங்கையிலிருந்து சவூதிக்கு இனிமேல் பணிப் பெண்களை அனுப்பக்கூடாதென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை அரசு தெரிவித்துள்ள முறைப்பாட்டையடுத்தும், சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகளுக்கான அமைப்புகள் கொடுத்த அழுத்தத்தையடுத்தும் ஆரியவதியின்



எஜமானரும் (35 வயது), அவரது மனைவியும் (29 வயது) சவூதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவ்விருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. அத்துடன், பாதிக்கப்பட்ட பெண் ஆரியவதியை வாக்குமூலம் அளிப்பதற்காக சவூதி அரேபியாவுக்கு அனுப்பிவைக்கவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ✱

# பாவமாகி விட்டேன்

அறை யன்னல் கம்பிகளை பிடித்தவாறு வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாள் கதீஜா. தன் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துவிட்டு மீண்டும் வெளியே பார்க்கிறாள்.

அவளின் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தோழி அஸீமாவின் வீடு தென்படுகின்றது. தோழிகள் இருவரினதும் அறை யன்னல்களும் எதிரெதிராகவே அமைந்திருந்தன. அஸீமா ஏதோ தீவிரமாக எழுதிக்கொண்டிருந்தாள்.

''ஹு...ம் அஸீமா குறிப்பெழுதுகிறாள் போலும். சமூகக்கல்விப் பாடத்தில் எழுதக் கொடுத்திருப்பார் ஆசிரியர். இந்தப் பக்கம் கொஞ்சம் கூடத் திரும்பிப்பாராமல் தன் வேலையில் மூழ்கிவிட்டாளே! இப்போது எப்படி என் ஞாபகம் வரும். ஹு...ம் இப்போது பாடசாலைத் தோழியல்லவே! நான் மாணவியும் அல்லவே!'' இப்போது நான் ஒரு குடும்பத்தலைவி ஆமாம் குடும்பத்தலைவி என்ற பொறுப்பு இப்போது எனக்கு. இந்தச் சுமையை நான் எப்படிச் சுமப்பேனோ! துள்ளித் திரியவேண்டிய பள்ளிப் பருவத்தில் எனக்கு இப்படியாகிவிட்டதே! ஹு...ம் இது நான் தேடிக்கொண்டதுதானே.''

அஸீமா படித்துப் படித்துச் சொன்னாள், நான் நடந்துகொள்ளும் முறை அவ்வளவு நல்லதல்ல என்று. நான் அவளின் அறிவுரையைக் கேட்டால்தானே! அப்போது அவளுக்கு நான் சொன்ன பதிலை இப்போது நினைக்கும் போதும் என்னுடல் கூனிக்குறுகுகின்றது. ''உன்னைப் போல



உலோபித்தனம் காட்ட என்னால் முடியாது. இருக்கிறதை ராஜாபோல செலவழிக்க வேண்டியது தான். வருவதைப் பிறகு பார்ப்போம்'' என்று மார்தட்டினேன். அப்போது அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும். பாவமவள்!

ஆனால், இப்போது நான்தான் பாவமாகிவிட்டேன். படிக்க வேண்டும்; பெரிய ஆளாக வரவேண்டும் என்ற ஆசை மட்டுமிருந்தால் போதாது. அதற்கான வழியை நாம்தான் அமைத்துக்கொள்ள வேண்டும்.

வீண்படாடோபம் காட்டி நானே ஏமாந்துபோனேன். பள்ளிக்கூட வகுப்பில் நம்தேவைக்கு ஆசிரியர் ஏதாவது பணம் கொண்டுவரச் சொன்னால் 10 ரூபாவுக்கு 100 ரூபா பெற்றோரிடம் வாங்கியெடுப்பேன். பாடசாலை விழாக்களென்றால் உடுப்புக்கள் இருந்தாலும் புதிதாக சீருடை தைப்பேன். பாத அணிகள் வாங்குவேன். தராவிட்டால் அடம்பிடிப்பேன். இதனால் படிக்க அனுப்புவது மிகவும் கஷ்டமாகிவிட்டது பெற்றவர்களுக்கு.

என்னைப் பெற்றவர்கள் அப்படியொன்றும் வசதியானவர்களல்லர். தொழிற்சாலையில் வேலை செய்து ஊழியம் பெறுபவர்கள். நான் மட்டுமா அவர்களுக்குப் பிள்ளை? எனக்குத் தம்பி,தங்கைகளும் உள்ளனரே! என்னொருத்திக்கே இவ்வளவு செலவென்றால் மற்றவர்களை எப்படிப் படிப்பிப்பது என்று எண்ணத் தொடங்கினர்.

## குறுங்கதை

என் தோழி அஸ்மாவோ எம்மைவிட ஏழ்மையானவள். தகப்பனில்லாத பிள்ளை. தாய் அப்பம் சுட்டு விற்று அந்தப் பணத்தால் அவளையும் அவள் தம்பி, தங்கைகளையும் படிக்க வைத்து குடும்பத்தை நடத்துகிறாள். அவள் தாய் தம்பிள்ளைகளின் படிப்பில் மிக அக்கறை செலுத்தினாள்.

என் தாய் தகப்பனுக்கும் என்னைப் படிப்பிக்க ஆசைதான். ஆனால், அவர்களால் என்னையோ என் செலவுகளையோ கட்டுப்படுத்த முடியவில்லை.

எனவே, மற்றப் பிள்ளைகளையாவது படிப்பிக்க வேண்டும் என்ற அவாவினாலேயே என் தாய் வெளிநாடு போய் உழைக்கத் துணிந்தாள். இதனால் குடும்பப் பொறுப்பு என்னிடம் வந்தது. இப்போது நான் எப்படிப் பாடசாலை செல்வது? என் ஆசையை நெஞ்சுக்குள் புதைத்துவிட வேண்டியவளானேன்.

*- ஸீனத் ரஹ்மா -*



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

என் தோழனின் வாழ்க்கையை ஆரம்பத்தில் இருந்து தொடங்குவதா அல்லது அவன் தடுப்பு முகாமுக்கு வந்தபின்பு தொடங்குவதா என்று எனக்குப் புரியவில்லை. அவனது வாழ்க்கையைக் கேட்டால் எனக்கு மாரடைப்பு வருவதுபோல இருக்கும்.

அவன் நல்ல துடிதுடிப்புடையவன். எதுக்கும் தயங்க மாட்டான் என்பது எனக்குத் தெரியும். அவன் விரும்பியோ அல்லது விரும்பாமலோ முன்பு விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்திருந்தான். ஆனால் ஒன்று

## மறுவாழ்வா? மரண வாழ்வா?

மட்டும் புரிந்தது, அவன் தனது தாய் மண்ணுக்காகப் போராடினான். சில வருடங்கள் சென்றன. அவன் அந்த அமைப்பில் இருந்து விலகினான். தனது வாழ்க்கையைச் சிறிது காலம் தன் பெற்றோருடன் கழித் தான். சில நாட்கள் போனதும் திருமணம் முடித்துக் கொண்டான்.

அவன் மனைவியும் அவனைப் போலவே துடிதுடிப்பானவள். அவள் பிறருடன் கதைக்கும் போது தனது கணவர் தனக்குக் கிடைத்தது தான் செய்த பாக்கியம் என்பாள். அடிக்கடி இப்படியே காலங்கள் கடந்து போயின. அவனுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. குழந்தைகள் படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி மிகவும் கெட்டிக்காரர்கள்.

போரும் இக்கட்டான சூழ் நிலைக்கு வந்து விட்டது. வன்னி மக்கள் தம் உயிருக்காகப் போராடிக் கொண்டு இருந்தனர். முள்ளிவாய்க்கால் என்றால் போதும், மக்கள் இப்பவும் சொல்வார்கள், ''மயிர் சிலிர்க்கின்றது; உள்ளம் குமுறுது; கண்ணீர் இரத்தம் போன்று வடியுது'' என்று. அந்த இரத்த வெள்ளம், தசைக்குவியல் அனைத்துக்குள்ளும் வாழ்ந்த வன்னி மக்களில் இவனது குடும்பமும் ஒன்று.

போர் முடிவு. நெருங்கிவிட்டது. ''ஆமி வந்திட்டான் எல்லோரும் வாருங்கள். வட்டுவாகற்கரையால் எல்லாரும் போகின்றார்கள்'' என்று ஒருவர் கூச்சலிட்டபடி ஓடி வந்தார். சன்னங்களும், எறிகணைகளும் சரமாரியாகப் பொழிந்து கொண்டு இருந்தன. அப்போது இவன் பதுங்கு குழியில் தன் மனைவி, பிள்ளைகளுடன் இருந்தான். அந்த நபர் அவ்விடத்தால் கூச்சலிட்டு ஓடிய சத்தம் இவர்களின் காதில் விழுந்தது. உடனே தன் மனைவியையும், பிள்ளைகளையும் பதுங்கு குழியில் இருக்கச் சொல்லி விட்டு தான் சற்று வெளியால் வந்து பார்த்தான். வட்டுவாகல் மக்கள் வெள்ளைக் கொடி அசைத்தபடி வெள்ளம் போன்று வீதியால் நடந்து கொண்டு இருந்தார்கள். .



அவன் அந்த இக்கட்டான நிலையிலும் தன் மனைவியிடம் சொன்னான்: ''எல்லாரும் போகிறார்களாம். நாங்களும் போவம். பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வாங்கோ வெளியில...'' தன் கணவரின் பேச்சைக் கேட்ட மனைவி, தன் பிள்ளைகளுடன் வெளியே வந்தாள். உடைமைகளை எடுத்தது பாதி எடுக்காதது பாதியாக வன்னி மக்களோடு மக்களாய் நடக்க ஆரம்பித்தார்கள். இரத்த வெள்ளம், தசைக் குவியல் அனைத்தையும் தாண்டி வட்டுவாகற்கரையை அடைந்தனர்.

இப்படியே பல இடர்களை தாண்டி வந்த இவர்களை இராணுவத்தினர் ஒரு வெட்ட வெளியில் மறித்து, பதிவினை மேற்கொண்டார்கள். இராணுவத்தினரின் பதிவுகள் முடிந்த பிறகு, அனைவரும் பஸ்ஸில் வவுனியாவுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்கள்.

ஓமந்தைக்கு வந்ததும், இராணுவத்தினரில் ஒருவன் சொன்னான், ''ஒரு நாளோ அல்லது முப்பது வருடங்களோ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்திருந்தால் எங்களிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.'' என்றான்.

இதைக் கேட்ட அவனும் மனைவியிடம் தனது அடையாள அட்டையை வாங்கிக்கொண்டு ''நீங்கள் பிள்ளைகளுடன் இருங்கோ. நான் போய் பதிவு செய்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான். அங்கு சென்றவர்கள் பதிவு செய்து விட்டு வருவார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவளும் தன் கணவர் பதிவு செய்து விட்டு வருவார் என்று கண்ணீர் வடித்தபடி காத்திருந்தாள். நேரமும் மாலை ஆனது. அவள் மாத்திரம் அல்ல எல்லாரும் காத்துக் கொண்டு இருந்தார்கள்.

அங்கு வந்த இராணுவத் தளபதியிடம், அவள் தன் கணவனைப் பற்றிக் கேட்டாள். அதற்கு அவன் ''நீங்கள் பிள்ளைகளோடு பதிஞ்சு போட்டு போங்கோ. உங்கள் கணவர் பதிவு செய்துவிட்டு முகாமிக்கு வருவார்'' எனக் கூறினான்.

ஓமந்தையில் பதிவு செய்துவிட்டு, பஸ்ஸில் ஏறினாள். தன் கணவர் பதிவுகள் முடிய வருவார் என்ற நம்பிக்கையுடன் முகாமுக்குச் சென்றாள். ஆனால் அவன் வரவில்லை. தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டான். அவள் தன் பிள்ளைகளுடன் பல துன்பங்களுக்கு மத்தியில் செட்டிக்குள முகாமில் இருந்தாள்.

நான்கு மாதங்கள் கடந்தன. செட்டிக்குளம் நலன்புரி முகாமில் உள்ளவர்களைப் பார்ப்பதற்காகச் சிலரை அழைத்து வந்தார்கள். அதில் இவனது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இருந்தனர். பல மாதங்கள் காணாததால் அவனும் மனைவி பிள்ளைகளும் அழுது கவலையைத் தீர்த்துக் கொண்டார்கள். அதிக நேரம் நின்று கதைக்கவில்லை.

சில நாட்கள் போக, மீள் குடியேற்றத்துக்காக மக்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு ஏற்றிச் சென்றுவிட்டார்கள். இதில் அவளும் ஒருத்தியாகச் சென்றாள்.

இவளும் சில நாட்களின் பின் தன் பிள்ளைகளுடன் ஒரு நாள் தன் கணவரைப் பார்ப்பதற்காக செட்டிக்குளம் தடுப்பு முகாமுக்கு வந்தாள். ஆனால் அப்போது அவன் அங்கு இல்லை. புனர்வாழ்வு என்று சொல்லி அங்கு இருந்தவர்கள் சிலரை வெலிக்கந்தை புனர்வாழ்வு நிலையத்துக்கு ஏற்றினார்கள். அதில் அவனும் ஒருவன். திடீர் என்று ஏற்றியதால் அவன் தன் மனைவிக்கு, தகவல் சொல்லி விட முடியாமல் போய்விட்டது. அங்கு வந்த அவள் அவனைக் காணாமல் அழுதபடியே திரும்பிச் சென்றாள்.

சில நாட்கள் சென்ற பின், கணவனைப் பார்ப்பதற்காக பெரும் சிரமப்பட்டு வெலிக்கந்தை புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்றாள். ஒதுக்கப்பட்ட சொற்ப நேரத்துக்குள் கதைத்து விட்டுச் சென்றுவிட்டாள்.

மீண்டும் ஒரு மாதம் கழிய, ஒரு நாள் கணவனை, பார்க்க விரும்பினார்கள். வெள்ளிக்கிழமை காலை கோயிலுக்குச் சென்று, தன் கணவன் வெகுவிரைவில் விடுதலையாகி வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டு கடவுளைக் கும்பிட்டாள். அர்ச்சனையும் பெற்றுக் கொண்டு, விபூதியையும் வாங்கிக் கொண்டு வீடு வந்தாள். அன்று மாலை அவளுக்கு இடியாக ஒரு செய்தி வந்தது. சுகயீனம் காரணமாக பொலநறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவளின் கணவன் இறந்து விட்டான் என்று. இதைக் கேட்டதும், 'வேடனின் அம்பு பட்டுத் துடித்துக் கொண்டிருக்கும் மான் போல' தன் பிள்ளைகளை அணைத்துக் கொண்டு கதறினாள்.

அவன் வீடு வருவான்; தன் கஷ்டங்கள் எல்லாம் தீரும் என்று அவள் எண்ணியிருந்தாள். ஆனால் அவன் உடல் தான் பெட்டிக்குள் வீட்டுக்கு வந்தது.

இதுதான் வன்னி மக்களுக்கு ஏற்படும் துன்ப துயரக் கண்ணீர்கள்; எம் மக்கள் எப்போது கண்ணீர் இல்லாமல் வாழப் போகிறார்கள்? தொடர்ந்தும் கண்ணீர்தானா இவர்களின் வாழ்க்கையா?

என் நண்பனைப் போன்று இன்னும் எத்தனை துயர சோகங்கள் கம்பி வேலிக்குள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். தம் சோக துன்பங்களை மறைத்துக் கொண்டு.... மறு வாழ்வு என்று சொன்னார்கள். ஆனால் மறு வாழ்வு அல்ல; மரணம் தான் கிடைக்கிறது.

**எஸ். தமிழ்வேந்தன்,**
**கிளிநொச்சி.**

அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

# ஆண் உறுப்பு வளைவும் தாம்பத்திய வாழ்வும்

**கேள்வி:-** வயது 28. பெண். கடந்த மாதம் 3 மாத கர்ப்பமாக இருந்த போது கருச்சிதைவு ஏற்பட்டு கரு அழிந்தது. இதனை அடுத்து D & E என்ற கருப்பை கழுவுதல் முறை செய்யப்பட்டது. அதன் பின்னர் எனக்கு கூடிய இரத்தப் பெருக்கும் - இரத்தக் கட்டிகளும் வெளியேறின. மணித்தியாலத்துக்கு ஒரு முறை - PADS மாற்ற வேண்டியிருந்தது. இது அபாயகரமான விடயமா? டாக்டரின் ஆலோசனை பெற வேண்டுமா?

**பதில்:-** முற்றாக கருச்சிதைவு நடைபெறாதவிடத்து - மிஞ்சியிருக்கும் கருச் சிதைவுகளை அகற்றுவதற்காக EVACUATION OF RETAINED CONCEPTION PRODUCTS - செய்யப்படுவதுதான் D & E - என்கின்ற கருப்பை சுத்தமாக்கும் செயல்முறை. இப்படி கருச் சிதைவில் மிகுதியாயுள்ள திசுக்கள் - கருப்பையினுள் இருந்து அகற்றப்படாவிடில் கருப்பைச் சுவர்கள் சுருங்காது. இதனால் தளர்ந்திருக்கும் - NON CONTRACTED கருப்பைச் சுவர்களின் இரத்த குழாய்கள் - சுருங்காமல் - அதிக இரத்தப் பெருக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. அத்துடன் தொற்று ஏற்படவும் கூடும். இதனாலேயே மேற்கூறிய செயல்முறை கையாளப்படுகிறது.

ஆனாலும் முற்றாக எஞ்சியிருக்கும் கருச்சிதைவுகளை இந்த செயல்முறை முழுமையாக அகற்றும் என்பதற்கும் உத்தரவாதம் இல்லை. இதனால் - D&E செயல்முறைக்கு பின்னர் இரத்தப்பெருக்கு மற்றும் இரத்தக் கட்டிகள் உருவாகுவதும் உண்டு.

முதலில் நீங்கள் கருப்பை SCAN ஒன்றைச் செய்யவேண்டும். அதில் கருப்பையில் மிஞ்சியிருக்கும் கருச்சிதைவுகள் மற்றும் கருப்பை சம்பந்தமான கோளாறுகள், சூலகம் சம்பந்தமான கோளாறுகள் ஆகியவற்றைக் கண்டறியலாம். இந்த உறுப்புகளின் கோளாறுகளின் காரணமாகவும் பாரிய இரத்தப் பெருக்கு ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. மேலும் D&E க்கு பின்னர் கருப்பையில் தொற்றுக்கள் ஏற்படுவதும் உண்டு. தொற்றுகள் கூட இரத்தப்பெருக்கை ஏற்படுத்தக் கூடியவை. சிலவேளைகளில் இன்னொரு தடவை D&E செய்யவேண்டியும் நேரிடலாம்.

**கேள்வி:-** ஆண். வயது 22. தினமும் எனது வேலை நிமித்தமாக குறைந்தது 90 கிலோமீற்றர் தூரம் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்ய வேண்டியுள்ளது. விடியற்காலையிலும் மற்றும் மாலை வேளையிலும் நான் இந்தப் பயணங்கள் நடைபெறுகின்றன. தற்பொழுது எனக்கு கண்கள் அரிக்கின்றன. கண்ணீர் வடிகிறது. கண்வலியும் ஏற்படுகின்றது. கண் பார்வையும் புகைமூட்டத்தினுள் பார்ப்பது போல் தெரிகிறது. எனது வேலை நேரம் காரணமாக சரியாக நித்திரையும் இல்லை. நான் கணினியில் அதிக நேரம் வேலை செய்யவும் வேண்டும். எனது கண் பார்வைப் பிரச்சினைக்கு காரணம் என்னவாக இருக்கலாம்?

**பதில்:-** உங்கள் கண்களில் அழற்சி IRRITATION ஏற்பட்டுள்ளது. இதற்கு இரண்டு காரணங்களை ஊகிக்க முடிகிறது. ஒன்று, உங்கள் பிரயாணங்களால் - சூழலில் உள்ள தூசு மற்றும் மகரந்தப் பொடிகளால் - கண்களில் ஒவ்வாமை அழற்சி ஏற்பட்டிருக்கலாம். அடுத்தது, நீண்டநேர கணினி உபயோகத்தின் போது கண்கள் வரட்சி



அடைந்து DRY EYES - இந்த அழற்சி ஏற்படுவதற்கும் வாய்ப்பு உண்டு. இதனை COMPUTER VISION SYNDROM என்று கூறுவர்கள். சில வேளைகளில் இந்த காரணங்களில் ஏதாவது ஒன்றுகூட தனித்து இந்தப் பிரச்சினையை தரக் கூடியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தினமும் 3 - 4 தடவைகள் குளிர்ந்த நீரால் கண்களை கழுவிப் பாருங்கள். பிரயாணங்களின் போது கண்களில் நேரடியாக தூசி, மகரந்தப் பொடிகள் படாவண்ணம் விசேட GOGGLES அணியுங்கள். கணினியில் வேலை செய்யும்போது இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை 15 நிமிடமளவிற்கு - தூரப்பார்வையில் கண்களை செலுத்துங்கள். உதாரணமாக ஜன்னலுக்கருகில் சென்று வெளி உலகைப் பார்க்கலாம். இதனால் கண் தசைகள் முறுக்கு குறையும். கண் இமைகளை அடிக்கடி வெட்டுவதனால் - கண் மேற்பரப்பில் உள்ள வரட்சி DRYNESS குறையும். இதனைச் செய்தும் உங்களுக்கு பிரச்சினை இருக்கும் என்றால் - உடனடியாக காலம் தாழ்த்தாது கண் சிகிச்சை நிபுணரின் ஆலோசனையைப் பெறவும்.


இலவச மருத்துவ ஆலோசனைகளை

'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்

டாக்டர்

எஸ். அருள் ராமலிங்கம்

நீங்கள் கேள்விகளை

அனுப்பவேண்டிய முகவரி.

இலவச மருத்துவ ஆலோசனை

'சுடர் ஒளி'

85, ஜயந்த மல்லிமாராய்ச்சி

மாவத்தை கொழும்பு - 14.


**கேள்வி:-** ஆண். வயது 60. எனது பற்களின் சுகாதாரத்தில் மிகவும் கவனம் எடுப்பவன் நான். இதனால் பற்சிதைவு - முரசு கரைதல் போன்ற எதுவித பிரச்சினையும் இதுவரை ஏற்படவில்லை. குறிப்பாக சொல்வதென்றால் இவ்வளவு காலமும் ஒரு பல்வைத்தியரின் ஆலோசனை பெறவேண்டிய நிலை எனக்கு ஏற்படவில்லை. தினமும் காலை எழுந்து பல் துலக்குவதைத் தவிர - மூன்று வேளை உணவுக்குப் பின்னரும் - இரவில் தூங்கும் முன்னரும் பற்களை நன்றாக துலக்கிக் கொள்வேன். இப்பொழுது சில வாரங்களாக எனது பற்கள் கூசுகின்றன. கடினமான பதார்த்தங்களை கடிக்கும் போது - பற்கள் வலிக்கின்றன. இதற்கு காரணம் என்ன? பல்வைத்திய ஆலோசனை பெறத்தான் வேண்டுமா?

**பதில்:-** உங்களுக்கு பற்களின் ENAMEL எனப்படும் வெளிப்பூச்சு கரைந்திருக்கலாம். அத்துடன் பல் இடுக்குகளிடையே - TARTAR என்கின்ற உப்பு படிந்து முரசு கரைந்த பற்களின் வேர்கள் வெளிப்பட்டிருப்பதால் உணவோ குளிரான அல்லது சூடான பதார்த்தங்களோ அவற்றில் படும்போது பற்கள் கூச்சம் அடையலாம். பற்சிகிச்சை மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற்றுச் சிகிச்சை பெறவும்.

அத்தோடு இவ்வளவு காலமும் ஒரு பல் வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் பற்சுகாதாரத்தைப் பேணி வந்ததாகப் பெருமை கொள்கின்றீர்கள். ஆனால், வருடத்திற்கு ஒரு தடவையாவது பல் வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று பல் சுகாதாரத்திற்கு அவசியமான TARTAR REMOVAL உப்புப்படை அகற்றல் செய்வது முக்கியம். எவ்வளவுதான் நாம் கவனமாக இருந்தாலும், பற்சுகாதாரத்தை நாமே கவனித்து வந்தாலும் பல் வைத்தியர் மூலமாகத்தான் பற்கள் சுகாதாரம் பேணப்படுவதை உறுதிப்படுத்த முடியும். நமது உணவு, வாய் உலர்தல் என்பவை பல் இடுக்குகளில் உப்புப் படை படிவதை ஏற்படுத்தும். இந்த உப்புப்படை முரசுகளை ஒடுக்கி - பற்களின் வேர்களை வெளிப்படுத்தும். மேலும் இதனால் பல் முரசுகளில் தொற்றுக்கூட ஏற்படலாம். இந்த படைகளை நீக்கி முரசுகளை பழைய நிலைக்குக் கொண்டு வரும் செயலை பல் வைத்தியர் ஒருவர்தான் செய்யமுடியும்.

மேலும் உங்கள் பல் துலக்கும் பழக்கம் கூட சில வேளைகளில் பல் எனாமல் மற்றும் முரசுகளை பாதிக்கும். பலர் பற்களை உறுதியான HARD தூரிகைகளைக் கொண்டு சட்டி - பானை தேய்ப்பது போல் தேய்ப்பார்கள். இதனால் பல் எனாமல் கழன்று போக சாத்தியம் உண்டு.

மிருதுவான (SOFT) தூரிகை கொண்டு பற்களின் இடுக்குகளில் மேலிருந்து கீழாக வழித்து துலக்குவது தான் சிறந்த முறை. பல் துலக்கிய பின் கைவிரல்கள் கொண்டு முரசுகளை பற்கள் மேல் நீவி விடுதல் அவசியம். இது தவிர பற்சுகாதாரத்திற்கு விட்டமின் D,C மற்றும் கல்சியம் சத்துகள் அவசியம். எமது உணவில் இந்த உயிர்ச் சத்துக்கள் குறையும் போதும் பல் பாதிக்கப்படும். பெண்கள் கர்ப்பமாக இருக்கும் போது கல்சியம் மாத்திரைகள் கொடுப்பது - கருவில் உள்ள சிசு தனது எலும்பு வளர்ச்சிக்கு தாயிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் கல்சியம் சத்தை மீளப் பெற்றுக்கொள்ளவே.

**கேள்வி:-** எனது மகன் 4 வயது. அவனிடம் எந்த நேரமும் தனது நகங்களைக் கடிக்கும் பழக்கம் உள்ளது. இந்த பிரச்சினை அவனுக்கு 2 வயது இருக்கும் போது ஆரம்பித்தது. இப்பொழுது கைவிரல்களைப் பார்த்தால் இந்த பழக்கத்தால் குறுகிய - அழகில்லாத நகங்களால் அருவருப்பாக இருக்கிறது. இந்த பழக்கத்தைக் கைவிட எத்தனையோ தடவைகள் முயன்றும் பலன் கிடைக்கவில்லை. ஆலோசனை தரவும்.

**பதில்:-** இந்த நகம் கடிக்கும் பழக்கத்தை ஆரம்ப காலத்திலேயே நிறுத்த முயற்சித்திருந்தால் வெற்றி கண்டிருப்பீர்கள். விரல்களில் வேப்பெண்ணெய் போன்ற கசப்பான ஆனால், நஞ்சற்ற பூச்சுக்களைத் தடவி - அந்த வயதில் இந்தப் பழக்கத்தை மறக்கடித்திருக்கலாம். இந்த பழக்கத்தை உடனடியாக நிறுத்தாவிடில் அவர் வளர்ந்தும் ,இதனைத் தொடர்ந்து செய்வார். அநேகமாக மனதில் ஏற்படும் ANXIETY போன்ற இறுக்க உணர்வுகள் தான் நகம் கடிக்கும் பழக்கத்திற்கு வித்திடுகின்றன. எனவே ஒரு மனநல வைத்தியரின் ஆலோசனையை நாடுவதும் விரும்பத்தக்கது. இதுதவிர கைகளை உபயோகித்து செய்யும் வேலைகள், விளையாட்டுகள், பொழுதுபோக்குகள் ஆகியவற்றில் அவரை ஈடுபடுத்தி இந்த பழக்கத்தை மறக்கச் செய்வதும் ஒருமுறை. மேலும் அவரது பழக்கத்திற்காக அவரைக் கண்டிப்பதை - கோபப்படுத்துவதைத் தவிருங்கள்.

**கேள்வி:-** ஆண். வயது 25. எனது ஆண் உறுப்பு முன்னால் வளைந்து உள்ளது. உடல் உறவு கொள்ளும்போது வலியாகவும் உள்ளது. இதற்கு சிகிச்சை ஏதாவது உண்டா? சத்திரசிகிச்சை மூலம் பலன் காண முடியுமா?

**பதில்:-** ஆண் உறுப்பு வளைந்திருப்பது ஒரு நோயல்ல. சிலவேளை ஆணின் உறுப்பு மேல் நோக்கியோ - பக்கவாட்டமோ வளைந்திருப்பது சாதாரணமாக காணப்படுவதுண்டு. இப்படியான வளைவுகள் உடல் உறவையோ அல்லது வேறு கோளாறுகளையோ தோற்றுவிப்பதில்லை. ஆனால், Peyronie's Disease என்கின்ற கோளாறினால் கூட இப்படி ஏற்படலாம். ஆண் உறுப்பில் விறைப்பு ஏற்படுத்தும் திசுக்களில் ஏற்படும் Fibrosis என்கின்ற




பிரச்சினையால் இப்படி நேர்வதுண்டு. இதனை சத்திர சிகிச்சை மூலமாகத்தான் சரி செய்யமுடியும். இந்த சத்திர சிகிச்சையை பயமில்லாமல் செய்யலாம். பாதுகாப்பான முறையுமாகும். சத்திரசிகிச்சையின் பின்னர் ஒரு வாரம் மருத்துவமனையில் ஓய்வு எடுக்க வேண்டி நேரிடும். Urologist என்ற சிறுநீரகநோய் வைத்திய நிபுணரைச் சந்திக்கவும். ✱



# மனித எலும்புக்கூட்டுத் தேவாலயம்

செக் குடியரசின் பராகா மாநகரில் 1.2 மில்லியன் மக்கள் வசிக்கிறார்கள். பராகா நகரின் கிழக்குத் திசையில் 70 கிலோ மீற்றருக்கு அப்பால் செட்லெக் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் மனித எலும்புக் கூடுகளிலான ஒரு தேவாலயம் அமைந்துள்ளது.



இத்தேவாலயத்தின் பெயர் ஒசாரே செட்லெக் ஆகும்.

இவ் அதிசய தேவாலயம் 40000க்கு மேற்பட்டோரின் இறந்த உடல் எலும்பு களை வைத்து அமைக்கப்பட்டுள் ளது.

14 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் திடீரென பரவிய பிளெக் நோயினால் 30000க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இப்பாரிய உயிரிழப்புக்கு 'கறுப்பு இறப்பு' என பெயரிடப்பட்டது. இந்த இறப்பின் தொகை அதிகரித்தமையால் உடல்கள் பராகா நகரத்தில் செட்லெக் கிராமத்துக்கருகில் கொட்டப்பட்டன. அந்நாட்டு Schwarzenberg family தேங்கிக் கிடந்த உடலங்களில் இருந்து மண்டையோடுகளையும் எலும்புத்துண்டங்களையும் சேகரித்து, Frantiseck Rint, wood carver ஆகிய சிறந்த கட்டட கலைஞர்கள் அடங்கிய குழுவை அமர்த்தி இத்தேவாலயத்தை உருவாக்க ஆரம்பித்தனர்.

அதன் பின் 15 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட Hussite யுத்தத்தில் 10,000க் கும் மேற்பட்ட படைச் சிப்பாய்கள் இறந் தனர். இறந்த படைச் சிப்பாய்களின் உடலங்களில் இருந்து பெறப்பட்ட மண்டையோடுகள் எலும்புத் துண்டங்கள் ஆகியவற்றைச் சேர்த்து மிகப் பெரிய அளவில் மிகவும் நேர்த்தியான முறையில், ஆடம்பரமான வடிவத்தில் விளக்குகள், தூண்கள், முகப்புக்கள், நிலங்கள் என இறந்த எலும்புகளை வைத்து தேவாலயத்தை கட்டி முடித்தனர்.






பட வாய்ப்புகள் அதிகம் இல்லை என்றாலும், விளம்பரங்கள் மூலம் கல்லா கட்டுகிறார்கள் பிரபல நடிகைகள். விளம்பரங்கள் மூலம் அதிகம் சம்பாதிக்கும் லிஸ்ட்டில் முதலிடத்தில் இருக்கிறார் கரீனா கபூர். 5 நிறுவனங்களுடன் மூன்று வருட ஒப்பந்தம் போட்டிருக்கும் கரீனா கபூரின் சம்பளம் 15 கோடியைத் தாண்டுகிறதாம்!



உலகிலேயே அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீராங்கனை என போர்ப்ஸ் சாதனைப் பட்டியலில் முதல் இடம், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுக்கு. டென்னிஸ் மற்றும் விளம்பரங்கள் மூலம் வருடத்துக்கு 114 கோடி ரூபாய் சம்பாதிக்கிறார் மரியா.

# குரங்கின் நண்பி !





றிஷி என்ற இந்த நான்கு வயது நிரம்பிய ஆண் குரங்கு தற்போழுது அமெரிக்காவின் மியாமி நகரில் உள்ள வனவிலங்கு வளாகத்தில் பாதுகாப்பாக வளர்ந்து வருகிறது.

இந்தக் குரங்குடன் படத்தில் காணப்படுபவர் எமிலி பிலாண்ட் என்ற மூன்று வயதுச் சிறுமி.

இந்தச் சிறுமியின் தந்தை ஒரு புகைப் படப்பிடிப்பாளர். முதல் தடவையாக 2008 இல் இந்தச் சிறுமி தனது தந்தையுடன் குழந்தைப் பருவத்தில் இந்த வனவிலங்கு வளாகத்துக்குச் சென்றபோது இந்தக் குரங்குடன் சிறுமிக்கு நட்பு ஏற்பட்டது. தற்பொழுது இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் இச்சிறுமி மீண்டும் அங்கு சென்ற போது குரங்கு அவரை அடையாளம் கண்டுகொண்டது.

குரங்கும் சிறுமியும் விளையாடுவதைப் படங்களில் காணலாம். (பா)



ரஜனி சிகரரெட்டைத் தூக்கிப் போட்டுப் பிடிப்பதைப் பார்ப்பதற்காக, எந்திரன் படிப்பிடிப்பின் போது ஜஸ்வரியா ஒரு ஸீனில் வரும் அது போன்ற காட்சியின் போது பல தடவை கள் தவறாக நடித்தார். இதனால் ரஜனி அக்காட்சியை நடித்துக் காட்டியுள்ளார்.

படப்பிடிப்பு முடிந்த பின்னர், ஜஸ்வரியா ரஜனியிடம் சொன்னாராம், ''நீங்கள் சிகரேட்டை தூக்கிப் போட்டுப் பிடிப்பதைப் பார்ப்பதற்காகவே வேண்டுமென்று தவறு செய்தேன்'' என்று. இதனைக் கேட்டு ரஜனி சிரித்தாரராம்.




# பூனையை உயிருடன் குப்பைத் தொட்டியினுள் போட்ட பெண்

பூனையை உயிருடன் குப்பைத் தொட்டிக்குள் போட்ட பெண் ஒருவர் மத்திய இங்கிலாந்தில் கைது செய்யப்பட்டார். பூனையின் சொந்தக்காரர் தனது வீட்டில் பூட்டி இருந்த கமெரா மூலம் இதனைக் கண்டு பிடித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்தே பொலிஸார் இந்தப் பெண்ணைக் கைது செய்தனர். பூனையும் உயிருடன் மீட்கப்பட்டது.

பூனையின் உரிமையாளரின் கார் அவரது வீட்டுக்கு முன்னார் நிறுத்தப்பட்டிருந்த சமயம் அண்மையில் இனந்தெரியாதோரால் அடித்து நொறுக்கப்பட்டது.

இதனை அடுத்து அந்த வீட்டுக்காரர் கமெரா ஒன்றைப் பொருத்தி இருந்தார். பூனை காணாமற் போனதை அடுத்து வீட்டுக்காரர் தனது கமெராவின் பதிவை இயக்கிப் பார்த்தபோது பெண் ஒருவர் பூனையை அதன் கழுத்தில் பிடித்துத் தூக்கி குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டுச் சென்றது தெரியவந்தது. பூனை காணாமற் போய் 15 மணித்தியாலங்கள் கடந்த நிலையில் வீட்டுக்காரர் குப்பைத் தொட்டியைத் திறந்த போது பூனை உயிருடன் கத்திக்கொண்டு இருந்தது.

பூனை குப்பைத் தொட்டிக்குள் போடப்படும் போது கமெரா பதிவு செய்த படங்களையே இங்கு காண்கிறீர்கள். (பாலா)



''இப்படி குடித்துவிட்டு வாறீங்களே, வீட்டில் பொண்டாட்டி ஒருத்தி இருப்பதே உங்களுக்கு மறந்து போச்சா?''
''அதை மறக்கத்தானே குடிக்கிறேன்''

# எங்கள் ஆசான்

சிறுகதை

நாசாவின் அந்த ஆய்வுகூடத்தில், இன்னும் ஒரு வாரத்தில் விண்ணுக்கு அனுப்ப இருந்த செய்மதியை மீள பரிசோதனை செய்துகொண்டிருந்தான் பிரபாகரன். இலத்திரனியல் பொறியியலாளரான பிரபாகரன் நாசாவில் பணியாற்ற வந்த பின்னர் அவனைத் தலைமைப் பொறியியலாளராகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட செய்மதிதான் அடுத்தவாரம் விண்ணில் ஏவப்படவுள்ளது. அதற்கான பரிசோதனைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த செய்மதி கச்சிதமாக ஏவப்பட்டு செயற்பட்டுவிட்டால் செய்மதி வரலாற்றில் அது அளப்பரிய சாதனையாகும், பிரபாகரனுக்கு சர்வதேச புகழையும் ஈட்டிக்கொடுத்துவிடும். அது மட்டுமன்றி புவியில் வாழும் அனைவருக்கும் இது பல நன்மைகளை ஈட்டிக்கொடுக்கும்.

''எப்படி, எல்லாம் சரியாக இருக்கிறதா?'' நாசா ஏவுதளப் பொறுப்பாளர் ஸ்டீபன் பிரபாகரனைப் பார்த்துக் கேட்டார்.

''முழுத்திருப்தி... எல்லாம் வெற்றிகரமாக நடக்கும் என்பது உறுதி...'' பிரபாகரனின் பதிலில் ஸ்டீபன் திருப்தியடைந்தார்.

''இறுதி நேரத்தில் சில நாச வேலைகளும் இடம்பெறக்கூடும். எதிரி நாட்டு உளவாளிகள் எங்கும் இருக்கக்கூடும்...''

''இங்கும் இருக்கக்கூடும் என்பதை நான் அறிவேன்... கண்காணிப்பாகவே இருக்கிறேன்.''

''நீர் ஒரு பொறியியலாளர் மட்டுமல்ல சிறந்த துப்பறியும் வல்லமை படைத்தவராகவும் இருப்பீர் போல இருக்கிறதே...!'' ஸ்டீபன் சிரித்து தோளில் தட்டிக் கொடுத்துவிட்டுப் போனார்.

பிரபாகரனுக்கு கடந்த சில நாட்களாக இந்த 'றொக்கெட்' செய்மதி பற்றிய சிந்தனையில் சீரான உறக்கம் கூட இல்லை. ஒவ்வொரு பகுதியாக ஆராய்ந்த வண்ணமே இருந்தான். இந்த செய்மதி ஏவப்பட்டால் உணவு உற்பத்தி விவசாயம், காலநிலை சீராகக்கல் என பல மேலதிக நன்மைகள் கிட்டும். அத்துடன் தொடர்பாடல் முறைகளிலும் இன்னும் பல உச்சங்களை எட்டமுடியும். இதன் ஆயுட்காலமும் அதிகம்.

நாசாவில் இந்திய விஞ்ஞானிகள் பலர் பணியாற்றுகிறார்கள். இலங்கையர்களில் - தமிழரில் இவன் தான் முதலாவது.

இன்றைக்கு இந்த நிலைக்கு அவன் உயர்ந்தமை அவனுக்கே வியப்பாக இருக்கிறது. மலையகத்தில் அதுவும் பெருந்தோட்டத் தொழிலாளியின் மகனாகப்பிறந்த அவன் இன்று உலகம் போற்றும் விஞ்ஞானியாக வரமுடிந்தது என்றால் அதிசயம் தானே? எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று அவன் நினைக்கவில்லை. எல்லாப் புகழும் அந்த அற்புதமான ஆசிரியனுக்கே என்று நினைத்துக் கொண்டான். மனமெங்கும் நன்றிப் பிரவாகம்!

ஆரம்பக்கல்வியுடன் தேயிலைத் தோட்டத் தொழிலாளியாகவோ அல்லது தலைநகரில் கடைச் சிப்பந்தியாகவோ இருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் வறுமையுடனும், விழிப்புணர்வற்று அடிமைத்தன உணர்வுடனும் வாழ்ந்து கொண்டு, அந்த சகதியிலிருந்து விடுபட முடியாமல் வாழ்கின்ற ஓர் இனத்திலிருந்து சேற்றில் வளர்ந்த செந்தாமரையாக அவனால் எப்படி நிமிரமுடிந்தது?

ஆரம்பப் பள்ளியிலேயே படு சுட்டியாக இருந்த அவனை இனம்கண்டு தட்டிக் கொடுத்தவர் சின்னத்துரை வாத்தியார்தான். இடைநிலைக் கல்வி பெறவேண்டுமானால் பல மைல் தாண்டி மலையேறி இறங்கி நடைப் பயணமாக போய்வர வேண்டும். மேலும் அந்தக் குடும்பங்களின் பொருளாதார நிலை அதற்கு இடம்கொடாது. பிரபாகரனின் தந்தை வேலுவுக்கு சில இடதுசாரித் தொழிற்சங்கவாதிகளுடனிருந்த பரிச்சியம் முற்போக்கான சிந்தனைகளை வளர்த்திருந்தது. மதுப் பழக்கத்தை கைவிட்டமை அவனுக்கு கிடைத்த முதல் வெற்றிப்படியானது.

பிரபாகரனின் மாமன் மாயாண்டி தலைநகருக்கு மலையகத்தவர்களை வேலைக்கு அழைத்துச் செல்லும் இடைத்தரகராக இருந்தான். பிரபாகரன் ஆரம்பக்கல்வியை முடித்த போது அவனைக் கண்டியிலுள்ள கடை ஒன்றிற்கு சிப்பந்தியாக அனுப்ப முயன்றபோது வேலு சம்மதிக்கவில்லை.

மகனை நகரிலுள்ள பாடசாலைக்கு அனுப்புவது பற்றி ஆலோசனை கேட்க சின்னத்துரை வாத்தியாரிடம் சென்றபோது அவர் அதை உட்சாகப்படுத்தியதுடன் சில ஆலோசனைகளையும் கூறினார். விடைபெற்று சென்றபோது பிரபாகரனின் கையில் ஐம்பது ரூபாவைக் கொடுத்தமை இன்னும் பசுமையாக அவன் நினைவில் இருக்கிறது. தோட்டப் பாடசாலை ஏழை வாத்தியாரான அவருக்கு அப்போது அந்த ஐம்பது ரூபா பெரிய காசாக இருநதிருக்கும் என்பதை இப்போது உணர்ந்தான். ஓய்வுபெற்று ஊர் சென்ற அவர் ஷெல்பட்டு இறந்ததை காலம் கடந்தே அறிந்தபோது அவருக்காக அவன் கண்ணீர் சிந்தினான். ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என ஆரம்பக் கல்வியை ஊட்டிய அவரின் கனிவான முகம் இப்போது அவன் மனதில் நிழலாடுகிறது. தோட்ட நிர்வாகத்தோடு சேர்ந்து, மலையகச் சிறார்களுக்கு ஏன் படிப்பு? கையெழுத்துப் போடவும், கணக்குப் பார்த்து சம்பளக் காசை எண்ணவும் தெரிந்தால் போதும் என்றிருந்த ஆசிரியர்கள் மத்தியில் அவர் ஒரு தெய்வம்தான்.

இடைநிலைக் கல்வியைப் பயின்ற போது, பிரபாகரன் பின்தங்கியிருந்த ஆங்கில, கணித, விஞ்ஞான பாடங்களில் அவனுக்கு ஆர்வத்தையும் அறிவையும் ஊட்டியவன் அவனது பள்ளித்தோழன் மயூரன்தான். ஆனால், அவன் எதுவிதக் காரணமுமின்றி இன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் வாடுகின்றான்.



அன்று மயூரன் கொடுத்த உற்சாகத்தில் சாதாரண தரத்தில் சிறப்பாகச் சித்தியடைந்த பிரபாகரன் உயர்வகுப்பில் திணறிய போது அவனை தட்டிக் கொடுத்து தனிக்கவனம் எடுத்து கற்பித்த அற்புதமான ஆசிரியரை அவர்தான் ராஜன் சேர். அவனால் மறக்கவே முடியாது. அவரால்தான் இன்று இவ்வளவு உயர்ந்த நிலைக்கும் அவனும், அவனோடு படித்த அப்பாடசாலை மாணவர்கள் சிலரும் உயர்வடைந்திக்கிறார்கள். எல்லாப் புகழும் அந்த அற்புதமான ஆசிரியருக்கே!

நினைத்துப் பார்த்தால் எல்லாம் கனவு போல் இருக்கிறது. உயர்தர வகுப்பு பயின்று கொண்டிருந்தபோது முன்னணி மாணவர்கள் சிலரை 'ஒலிம்பியாட்' பரீட்சைக்கு தயார் படுத்தி, அகில இலங்கை ரீதியில் சித்தியடைய வைத்ததுடன் அவனை முதல் மாணவனாக்கிய பெருமை அவரையே சாரும். அத்துடன் சர்வதேச ரீதியிலும் அவனை திறமையாக சித்தியடைய வைத்த ஆசிரியர், பிறவி ஆசிரியர்தான் என நினைத்த பிரபாகரனுக்கு மெய்சிலிர்த்தது.

அதற்கப்புறம் புலமைப் பரிசில் கிடைத்து மேற்கத்திய பல்கலைக் கழகமொன்றில் இலத்திரனியல் பொறியியலாளராகி, அதிலும் எம்.எஸ்.சி, பின்னர் பி.எச்.டீ முடித்து ஒரு டாக்டர் பட்டம் பெற்ற அவனை நாசா உள்வாங்கிக்கொண்டது. வசதியும் வாய்ப்பும் கிட்டாமல் இன்று எத்தனை மாணவர்களின் வாய்ப்பு பாழடைந்து போயிருக்கிறது. எனக்குக் கிடைத்த எதிர்பாராத வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லையே என எண்ணிய பிரபாகரனுக்கு நெஞ்சை உருக்கியது.

இப்போது நாசாவிலும் பிரபாகரன் ஒரு முக்கிய விஞ்ஞானி. அவனது சாதனைச் செய்மதி இதோ தயார் நிலையில் உள்ளது. அவனது இச்சாதனையின் சக பங்காளிகளான ஜப்பான் நாட்டினதும், சீன நாட்டினதும், இங்கிலாந்து நாட்டினதும், அமெரிக்க நாட்டினதும் விஞ்ஞானிகளுடன் இணைந்து பல தொழிலாளர்களின் பங்களிப்புடன் அது கட்டமைக்கப்பட்டிருந்தது. றொக்கெட் மூலம் ஏவப்பட இருந்த வேளையில் ஏதோ இனம் காணமுடியாத கோளாறினால் தடங்கல் ஏற்படவே எல்லா விஞ்ஞானிகளும் தலையைப் பிய்த்துக்கொண்டு கோளாரை இனம் காண முயன்றனர். இது பிரபாகரனுக்கு சவாலாக இருந்தது. அவனை வழிநடத்தி உயர்வடைய வைத்த அற்புதமான ஆசிரியரை நினைத்துக்கொண்டு கவனம் சிதறாமல் சோதனை செய்தான்.

ஓ...அ அவன் கண்டு பிடித்து விட்டான். ஒரு சிறிய வயர் நாசுக்காகத் துண்டிக்கப்பட்டிந்தது. சதி வேலையாக இக்கலாம். அதை அவன் இனம் கண்டு பிடித்ததும் நாசா தளத்தில் கரைகடந்த உற்சாகம் கரைபுரண்டோடியது. காலையில் எது வித தடங்களுமன்றி விண்கலத்தைச் செலுத்த முடியும். எனினும், கண்காணிப்பாக இருக்க வேண்டும். அவனை நேரடியாக பாராட்டிய தலைமை விஞ்ஞானி ஸ்டீபன் பாதுகாப்பையும், கண்காணிப்பையும் வலுப்படுத்தினார்.

காலையில் திட்டமிட்டபடி எல்லாமே தடங்கல் ஏதுமின்றி நிறைவேறின. ரொக்கெட் மூலம் ஏவப்பட்ட செய்மதி விண்வெளியில் சென்று வளிமண்டலத்தைத் தாண்டி தன் சுற்று வட்டத்தை அடைந்து. வெற்றிகரமாக சுற்ற ஆரம்பித்ததும்தான் பிரபாகரனுக்கு மூச்சு வந்தது. பல தரப்பிலிருந்தும் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமிருந்தன. இடையிலே இலங்கையிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு... இலங்கையிலிருந்து அவன் நண்பன் பகீரதன் அழைத்தான்...

''பிரபா... எங்கட சேர் செத்திட்டார்... படிப்பித்துக் கொண்டிருந்தபோதே மாரடைப்பில் வகுப்பறையிலேயே மயங்கிட்டார்... வைத்தியசாலைக்கு போறதுக்கு இடையில் உயிர் பிரிஞ்சிட்டுது...'' அழுதபடி கூறினான். பிரபாகரனுக்குப் பேரதிர்ச்சி! அவனை அறியாமல் விம்மி வெடித்தான். ''என்ன?... என்ன நடந்தது?'' என்று ஸ்டீபன் அவனிடம் கேட்டார். பிரபாகரனுக்கு வார்த்தைகள் வரவில்லை.

''ஓ... உங்கட நாட்டில உக்கிரமாக யுத்தம் நடந்துகொண்டிருக்கு... யாராவது நெருங்கியவருக்கு ஏதாவது...?'' இங்கிலாந்து நாட்டுப் பொறியியலாளரும் அவனது நண்பனுமான 'வின்சன்' கேட்டான்.

பிரபாகரனின் கண்களில் இன்னமும் கண்ணீர் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருந்தது. ''என்னுடைய அற்புதமான ஆசிரியர் மாரடைப்பால் இறந்திட்டார்...''

**- ச.முருகானந்தன் -**

சொல்லி முடித்ததும் வாய்விட்டுக் கதற ஆரம்பித்த பிரபாகரனை ஸ்டீபன் தேற்றினார்.

''உடனேயே நான் இலங்கைக்குப் புறப்பட வேண்டும்.'' கண்காணிப்புப் பணிகள் நிறைய இருந்தபோதும் ஸ்டீபன் சம்மதித்தார். ''நீர் போய்வாரும்... மற்றவர்கள் கவனித்துக் கொள்வார்கள்... நாளை ஜனாதிபதியுடனான பாராட்டுச் சந்திப்பை பின்போடுகிறோம்...''

பிரபாகரன் அடுத்த இருபத்திநாலு மணி நேரத்தில் இலங்கை செல்லும் விமானத்துள் இருந்தான். அவனது நினைவெங்கும் அற்புதமான ஆசிரியர்! அவன் நாசாவில் பதவி பெற்று புறப்படும் வேளையில் அவரை சந்தித்த போது அவர் சொன்ன வார்த்தைகள் இப்பொழுதும் காதோடு ஒலிப்பது போல இருந்தது.

''பிரபா... உன்னுடைய சாதனைகளால் உலகமே பயன் பெறணும். அதேநேரம் உன்னுடைய மலையக மக்களை, அவர்களது உயர்வைப் பற்றி மறக்கவே கூடாது. நீ எங்கிருந்தாலும் உனது மக்களின் உயர்வை மறக்கக்கூடாது...''

ஜீவன் உள்ள வரை மறக்க முடியாத வார்த்தைகள். விமானம் இடையில் தரித்த போது அவனது நண்பன் சிறீராமும் இணைந்து கொண்டான். தகவல் கிடைத்து அவனும் மறக்க முடியாத அந்த ஆசிரியரின் இறுதிச்சடங்கிற்காகவே செல்கிறான். கணினிப் பொறியியலாளராக பணியாற்றும் அவனும் அவரது மாணவன்தான்.

''பிரபா... கேள்விப்பட்ட நேரம் முதல் எனக்கு எதுவுமே ஓடவில்லை. மலையக மக்களை தொழிலாளராக அடிமைப் படுத்தியிருக்கும் சூழலை மாற்றிய ராஜன் சேர் உண்மையிலேயே எங்களுக்கு கடவுள் மாதிரி... அவருடைய வழிகாட்டலால் தான் நாம் உயர்ந்தோம்... இன்னும் பலர் உயர்வடைந்தார்கள்...'' ''உண்மைதான் ராம்... என்னுடைய செய்மதி சாதனையின் போது அவரைத் தான் நினைத்துக்கொண்டிருந்தேன்...ம்... எங்கட மலையக மாணவர்களுக்கு கொடுப்பனவு இல்லாமல் போச்சு... இந்த நடுவயதிலேயே போய்ச் சேர்ந்திட்டார். அவர் இருந்திருந்தால் வருடாவருடம் சில மாணவர்களையாவது உயர்வான நிலைக்கு கொண்டுவந்திருப்பார்...''

விமானம் தரையிறங்கியபோது அதிகாலை. அவர்கள் இருவரும் உடனேயே அட்டன் நகரை நோக்கிப் புறப்பட்டார்கள். அட்டன் நகரே சோகமயமாக இருந்தது. எங்கும் வெள்ளைக் கொடிகளும், கறுப்புக் கொடிகளுமாக சோகம் குடி கொண்டிருந்தது.

ராஜன் சேர் வீட்டை அடைந்தபோது அங்கு நகரே திரண்டிருந்தது. பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோர்கள், நகரின் முக்கிய பிரமுகர்கள், அரசியல்வாதிகள் என பலரும் திரண்டிருந்தனர். வெளிநாடுகளிலிருந்து அவரது மாணவர்களாக இருந்த பலரும் வந்திருந்தனர். அண்மைக்கால வரலாற்றில் இப்படி ஒரு மரணச்சடங்கை அவன் கண்டதேயில்லை - அதுவும் ஒரு பாடசாலை ஆசிரியரின் இறுதிச் சடங்கிற்கு!

மாலையில் இறுதிச் சடங்கு! கணக்கில்லாத கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. பத்திரிகைகள் யாவற்றிலும் பெரிய அளவிலான மரண அறிவித்தல்கள் மாத்திரமன்றி, செய்திகளும் வெளியாகி இருந்தன.

பிரபாகரனும், சிறீராமும் ஆசிரியரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறிய போதும், தமதளவில் ஆறுதலின்றித் தவித்தனர்.

இறுதி ஊர்வலத்திற்கு வாகன ஒழுங்கு இருந்தும் கடைசிவரை அவரது உடல் தாங்கிய பேழையை முன்னாள் மாணவர்களே சுமந்து சென்றனர். பிரபாகரனைப் போலவே எல்லோரும் அதைப் பெரும் பேறாகவே கருதினர்.

அவரது ஜீவன் மண்ணோடு கலந்து காற்றோடு சங்கமமானது. துயரத்தை மறக்க நாட்கள் சென்றன.

பாடசாலையில் அவர் கற்பித்த இடம் வெற்றிடமாகியது. புதிதாக ஆசிரியர் எவரும் கிடைக்கவில்லை என அதிபர் கவலைப்பட்டு கூறியபோது பிரபாகரன் குறுக்கிட்டான்.

''கவலைப்படாதையுங்கோ சேர்... இந்த வகுப்பு பரீட்சை எழுதும் வரை நான் படிப்பிக்கிறன். எங்களிடம் பிரதிபலன் எதிர்பார்க்காத ராஜன் சேருடைய விருப்பமும் அதுதான். அதற்கிடையில் புது ஆசிரியர் ஒருவரை பெற முயற்சிப்போம்...''

பிரபாகரனின் பதிலில் மனம் நிறைந்த அதிபர், ''நீங்கள் இவ்வளவு பெரிய விஞ்ஞானி... உடனே திரும்பிப் போகாமல் இந்த மாணவர்களுக்காக நிற்கிறீர்களே...''

''நான் ராஜன் சேருடைய மாணவனல்லவா?'' என்று சிரித்தான் பிரபாகரன். ★

# இ.தொ.கா.பேரம் பேசும் சக்தியை இழக்கும் அபாயம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகப் பேரம் பேசும் சக்தியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் படிப்படியாக இழந்துவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சம்பள உயர்வு தொடர்பாக கூட்டுப் பேரத்தில் கையொப்பம் இட்ட தோழமைக்கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளும் தான் இந்த விரும்பத்தகாத


ஆறுமுகன் தொண்டமான்

நிலைமையை உருவாக்கியுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் கடந்த ஆண்டு கறுப்புப் பட்டியை கட்டிக்கொண்டு கையொப்பம் இட்டதாகக் கூறிய இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே. வேலாயுதம் ஒப்பந்தத்தில் கைச்சாத்து இடுவது தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்கிறார்.

அதேவேளை இ.தொ.காவை தூக்கி எறிந்துவிட்டு வெளியேறிய முன்னாள் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முன்பு இக்கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக படு மோசமாகக் கண்டனம் தெரிவித்தார். அதே சென்னன் இன்று மீண்டும் இ.தொ.காவில் ஒட்டிக் கொண்டு முன்பு கண்டித்த ஒப்பந்தத் திற்கு ஆதரவாக வக்காலத்து வாங்குவ துடன் வேலாயுதத்தையும் விமர்சனம் செய்கின்றார்.

ஆரம்பம் முதலே இக்கூட்டு ஒப்பந் தத்தை எதிர்த்தும், கண்டித்தும் வந்த சதாசிவம், மனோ கணேசன், திகாம்பரம் ஆகியோரும், சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் கூட்டு ஒப்பந்தக் கூட்டாளிகளுக்குள் ஏற்பட்டுள்ள குத்து வெட்டுக்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எது எப்படியோ இந்தக் கூட்டு ஒப்பந்தம் 2011 மார்ச் மாதத்துடன் செல்லுபடியற்றதாகப் போகின்றது. மலையகத் தலைவர்கள் இக்கூட்டு ஒப்பந்தத்தை ஆதரிப்பவர்கள் என்றும், எதிர்ப்பவர்கள் என்றும் இரு பிரிவினராக இருந்தபோதும் பாதிக்கப்பட்ட தோட் டத் தொழிலாளர்களோ இக்கூட்டு ஒப்பந்தம் தமக்கு செய்யப்பட்ட மாபெரும் துரோகம் என்றே கூறுகின்றனர்.

ஒரே துறையில் உள்ள தொழிற்சங் கங்களின் மாறுபட்ட கருத்துகள் மற்றும் தலைமைத்துவப் போட்டி காரணமாக 2009 ஏப்ரல் மாதம் செய்யப்பட வேண்டிய கூட்டு ஒப்பந்தம் செப்டெம்பர் மாதம் வரை இழுத்தடிக்கப்பட்டது. அதே போன்று இம்முறையும் பனிப்போர் ஆரம்பித்துவிட்டது. இலங்கை தேசிய

**சிகாமணி**

தோட்டத் தொழிலாளர் சங்கம் இந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்டாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. வழமையாக இக்கட்சியையும் சேர்த்துக்கொண்டுதான் அங்கத்துவ எண்ணிக்கையைக் காட்டி பேரம் பேசிய இ.தொ.காவுக்கு இது ஒரு சோதனையை ஏற்படுத்திவிடும். மற்றும் ஒரு கூட்டாளியான பெருந்தோட்டக் கூட்டுக் கமிட்டியிலும் குறிப்பிடத்தக்க அங்கத்துவப் பலம் இல்லை. இதனால் பெரும்பான்மை அங்கத்துவப் பலம் ஆட்டம் கண்டுள்ளது.

வேலாயுதம் காலை வாரிவிட்டால், இப்போது அரசுடன் ஒட்டிக்கொண்ட திகாம்பரத்தின் தேசிய தொழிலாளர் முன்னணியின் ஆதரவை முழுமை யாகப் பெற்றுக்கொள்ளும் வியூகமும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், திகாம்பரம் அரசுடன் ஒட்டிக் கொண்டாலும் தொழி லாளர்களின் குரல்களுக்கு மதிப்பு அளிப்பார். இவர் மசிய மாட்டார் என அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இது இலங்கை தொழிலாளர் காங்கிர ஸுக்கு ஓர் இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் மாற்றுத் தொழிற்சங்கங்களை துச்ச மாகக் கருதி உதாசீனப்படுத்தியதோடு தன்னிச்சை யாக கூட்டு ஒப்பந்தம் செய்ததையும் மக்கள் வரவேற்கவில்லை. இதனால் மலையகத்தில் உள்ள ஏனைய கட்சிகள் மட்டுமல்ல தோட்டத் தொழிலாளர்க ளும் இ.தொ.காவை நம்பத் தயாராக இல்லை.

காரணம், கடந்த முறை 500 ரூபா அடிப்படைச் சம்பளம் பெற்றுத் தருவோம் என்று எல்லா தொழிற்சங் கங்களையும் இணைத்துக் கொண்டு போராட்டம் நடத்திய இ.தொ.கா. இடைநடுவில் காலை வாரிவிட்டது. ஏனைய தொழிற்சங்கங்கள் 750 ரூபா வேண்டும் எனக் கேட்டபோது, அதற்கு உடன்படாத இ.தொ.கா. 'முடிந்தவர்கள் பெற்றுக் கொடுக்கட்டும்' என்று பாசாங்கு காட்டி பேச்சுகளில் இருந்தும் விலகிக்கொள்வதாக அறிவித்தது.

பின்னர் சந்திரசேகரன் விடுத்த அழைப்பைக் காரணம் காட்டி, போராட்டம் நடத்திய ஏனைய கட்சிகளு டனும் கலந்துரையாடாமல் தன்னிச்சை யாக தோட்ட முதலாளிமாருடன் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டது.

ஐநூறு ரூபா அடிப்படைச் சம்பளம்


கே. வேலாயுதம்

தான் இறுதி முடிவு என்று கூறிய இ.தொ.கா. கடைசியில் 285 ரூபா அடிப்படைச் சம்பளத்திற்கு ஒப்பம் வைத்துவிட்டு போராட்டத்தை முடித்துக் கொண்டது. இதன் காரணமாகவே தொழிலாளர்கள் இ.தொ.கா. மீதிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர்.

ஒப்பந்தம் கைச்சாத்தான செய்தி கடந்த ஆண்டு தேசிய வானொலியில் பிரதான செய்தியாக அறிவிக்கப்பட்ட போது, இது தமக்கு அதிர்ச்சியாக இருப்பதாக தோழமைக் கட்சிகளும் கூறின. 405 ரூபா சம்பளம் என்று கூறப்பட்டாலும் அடிப்படைச் சம்பளம் 285 ரூபா என்பது திருப்தி அளிக்கவில்லை என்றும் கூறின.

உடனடியாக இப்படிக் கூறியவர்கள் பின்னர் தயக்கத்துடன் தாமும் ஒப்பம் இட்டதாக ஒப்புக்கொண்டனர். இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே. வேலாயுதம் இதற்கு எதிர்ப்பு தெரிவிக் கும் வகையில் கறுப்புப்பட்டியை கட்டிக்கொண்டு ஒப்பம் வைத்ததாகக் கூறினார்.


திகாம்பரம்

எதிர்ப்புகளுக்கும் அதிருப்திகளுக்கும் இடையில் ஒரு வருடம் ஓடிவிட்டது. அடுத்த ஒப்பந்தம் செய்யவேண்டிய காலமும் கிட்டிவிட்டது.

இந்த சந்தர்ப்பத்திலாவது மலையகத் தொழில்சங்கங்கள் தமது ஈகோ, தலைமைத்துவப் போட்டி, கருத்து வேறுபாடுகள் என்பவற்றை ஒரு பக்கம் வைத்துவிட்டு வர்க்க ரீதியாக ஒன்றுபட்டு ஒத்த கருத்துடன் செயற்பட வேண்டும்.

அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறோம்; அமைச்சுப் பதவி போய்விடுமே என்று தோட்டத் தொழிலாளர்களை அடகு வைக்காமல் தம்மையே நம்பி இருக்கும் அம்மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முன் வரவேண்டும். மலையகத் தலைமைகளின் கூட்டு இன்று காலத் தின் கட்டாயமாகிவிட்டது என்பதை இவர்கள் உணரவேண்டும்.

## பாக்குவெட்டிக்குள் சிக்கியதுபோல் மாதாந்தம் பல கோடி ரூபா சுரண்டல்

நாட்டில் அன்றாடம் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, விஷம் போல் உயர்வடையும் அத்தியாவசியப் பொருட் களின் விலைகள் என்பவற்றால் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களே.

அரசினால் அக்கறை காட்டப்படாத விலைவாசி உயர்வுகளுக்கும், தோட்ட நிர்வாகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கெடுபிடிகளுக்கும் மத்தியில் பாக்குவெட்டிக்குள் சிக்கிக்கொண்ட நிலையில் பரிதவிக்கின்றார்கள் இவர்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் அவர்களுடைய வரு மான அதிகரிப்பு போன்றவற்றுக்காகவே தோட்ட முதலாளிமாருடன் கூட்டு ஒப் பந்தம் செய்யப்பட்டதாக ஒப்பந்தத்தில்



கையெழுத்திட்ட தொழிற்சங்கங்கள் தம்பட்டம் அடிக்கின்றன.

ஆனால், அதே கூட்டு ஒப்பந்தத்தை ஆயுதமாகக் கொண்டு தொழிலாளர்க ளின் வயிற்றில் அடிக்கின்றன தோட்ட நிர்வாகங்கள்.

நிர்ணயத்தால் வழங்கப்படும் வேலை நாட்களில் 75 வீதம் ஒரு தொழிலாளி வேலை செய்திருந்தால் அத்தொழிலா ளிக்கு அடிப்படைச் சம்பளத்துடன் மேல திகமாக நாள் ஒன்றுக்கு 90 ரூபா வரவுக் கான ஊக்குவிப்பு கட்டாயமாக வழங்கப் பட வேண்டும் எனவும், தினசரி வேதனத் திற்கென நிர்ணயிக்கப்பட்ட தேயிலை, இறப்பர் எடைகளின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 30 ரூபா உற்பத்தி ஊக்குவிப்பும் வழங்கப்பட வேண்டும் எனவும் ஒப்பந் தம் உறுதிப்படுத்தி உள்ளது.

ஆனால், இவை இரண்டையுமே இல்லாதொழிக்க தோட்ட நிர்வாகங்கள் புது யுக்தி ஒன்றைக் கடைப்பிடிக்கின்றன.

உதாரணமாக, ஒரு தொழிலாளி மாதத்தில் 20 நாட்கள் வேலை செய்துள் ளதாக தினசரி பெயர் அட்டையில் பதி யப்பட்டுள்ளது. வரவு 20 நாட்களாக இருந்த போதும் கொண்டுவரப்பட்ட தேயிலை, இறப்பர் எடை குறைவு எனக் காரணம் காட்டி 10 நாட்களுக்கு 1/2 நாள் பெயர் போடப்பட்டுள்ளது.

மாத இறுதியில் சம்பளம் கணக்கிடும் போது முழுப் பெயர் சம்பளம் கணிப்பிடப் பட்டு முழு நாள் பெயர் போடப்பட்ட 10 நாட்களுக்கும், எட்டுமணி நேரம் வேலை செய்தும் அரை நாள் பெயர் போடப்பட்ட 10 நாட்களுக்கும் ஐந்து நாட்கள் எனவும் (10 + 5) 15 நாட்களுக்கான சம்பளமே வழங்கப்படுகின்றன.

இதனால் 20 நாட்கள் வேலை செய்த அந்த தொழிலாளி 18 நாட்கள் வேலை செய்யவில்லை என கணிக்கப்படுவதோடு கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய 90 ரூபா வரவுக்கான ஊக்குவிப்பும், உற் பத்தி ஊக்குவிப்புமாக வழங்கப்பட வேண்டிய 30 ரூபாவும் மொத்தமாக நாள் ஒன்றுக்கு 120 ரூபா இல்லாதொழிக் கப்பட்டு அடிப்படைச் சம்பளம் 285 x 15 = 4,275 ரூபா மட்டுமே பெறுகின்றான். ஆனால், 20 நாட்கள் வேலை செய்த அந்த தொழிலாளிக்கு ஒப்பந்தப் படி வழங்கப்பட வேண்டிய சம்பளம் பின் வருமாறு அமைய வேண்டும்:

20 நாட்களுக்கு வழங்கப்படவேண் டிய அடிப்படைச் சம்பளம் : 20 x 285 = 5,700 ரூபா. வரவுக்கான போனஸ் 20 x 90 = 1,800 ரூபா. முழுப் பெயர் போடப் பட்ட 10 நாட்களுக்கான உற்பத்தி ஊக்கு விப்பு 10 x 30 = 300 ரூபா. ஆக மொத்தம் 7,800 ரூபா. இதன்படி அந்த ஏழைத் தொழிலாளியின் நியாயபூர்வ மான மாத சம்பளத்தில் (7,800 - 4,275) = 3,525 ரூபா சுரண்டப்பட்டுகின்றது. ஒரு தொழி லாளியிடம் இவ்வளவு ரூபா என்றால் நாடளாவிய ரீதியில் தொழில் புரியும் பல லட்சம் தொழிலாளர்களிடம் எத்தனையோ கோடிகள் சுரண்டப்படுகின்றன. கட்டாய மாக வழங்கப்பட வேண்டிய இத்தொகை யார் பைக்குப் போகின்றது என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டிய ஒன்று.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள காவத்தை பிளான்டேசன், ஹப்புகஸ்தன்ன பிளான்டேசன், சூரியகந்த பிளான்டேசன் (தனியார்) என்பவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் இவ்வாறு பாதிக்கப்பட் டுள்ளதாகவும், இவை தொடர்பாக விசார ணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பெல்மதுளை பிரதேச உதவி தொழில் ஆணையாளர் பரணவிதான குறிப்பிடு கின்றார். இதேநேரத்தில் தம்மிடம் சந்தா வைப் பெற்றுக்கொள்ளும் தொழிற்சங் கங்கள் இந்த இழப்பீடுகளைப் பெற்றுத் தர வேண்டும் எனத் தொழிலாளர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் இலங்கையில் மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இவரது இலங்கை விஜயம் தமிழ் நாட்டில் எதிர்ப் பலைகளை ஏற்படுத்தி இருந்தது. அதே போன்று போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையின் வட பகுதிக்கு அவர் மேற்கொண்ட விஜயம் ஏமாற்றத்தையே அளித்துள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு அளிக்கும் உதவிகள் முறையாக வழங்கப்படுகின்றனவா என்று கண்காணிப்பதற்கும் மறுவாழ்வுப் பணிகளை மேற்[illegible]வையிடவும் நிருபமா ராவ் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

அவர் இலங்கை வந்தடைந்தவுடனேயே தமிழ் நாட்டிலிருந்து கண்டனக் கணைகள் கிளம்ப ஆரம்பித்தன. ஈழத்தமிழர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை நிருபமா ராவ் சென்று பார்வையிடுவதால் எந்த வித பயனும் ஏற்படப்போவதில்லை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறினார். எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் உள்ளடக்கிய தேசிய அளவிலான கண்காணிப்புக் குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று இந்திய அரசுக்கு அவர் ஆலோசனை வழங்கினார்.

அதே போன்று தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனும் நிருபமா ராவின் இலங்கை


# சுடர் ஒளி

05, செப்டெம்பர் - 11, செப்டெம்பர், 2010

85, ஜெயந்தமல் விமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com


## வெறும் கண் துடைப்பு

விஜயத்தின் உண்மையான நோக்கம் குறித்து சந்தேகம் எழுப்பி இருந்தார்.

நிருபாமா ராவை அனுப்பியதன் உண்மையான நோக்கம் தமிழர் மறுவாழ்வுப் பணியைப் பார்ப்பதற்காக அல்ல என்று நெடுமாறன் கூறுகிறார். சீனாவைச் சார்ந்திருக்கும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை இந்தியாவின் பங்கம் திருப்புவதே இந்த விஜயத்தின் நோக்கம் என்று இவர் கூறுகிறார். சீன - இந்திய பலப் பரீட்சையில் ஈழத் தமிழர்கள் பலி கடாவாக்கப் படுகிறார்கள் என்றும் இவர் குற்றஞ்சாட்டி உள்ளார்.

இப்படியான நிலையில் நிருபமா ராவின் இலங்கை விஜயம் தமிழ் நாட்டுத் தலைவர்களின் கருத்துக்களை எல்லாம் ஊர்ஜிதம் செய்வது போன்றே இருக்கின்றது.

கிளிநொச்சிக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்ட போதிலும் கச்சேரியில் இடம் பெற்ற மாநாட்டுடன் அவரது கிளிநொச்சி விஜயம் பூர்த்தியாகிவிட்டது. கிளிநொச்சியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்கு அவர் அழைத்துச் செல்லப்படவில்லை. யாழ்ப்பாணத்திலும் அதே நிலைமைதான். அங்கும் அவர் மீள்குடிமர்த்தப்பட்ட மக்களைப் பார்வையிடவில்லை. அவர் வவுனியா மெனிக்பாமுக்கு விஜயம் செய்த போதிலும் ஊடகவியலாளர் எவரும் அவருடன் செல்ல அனுமதிக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்திலும் யாழ். கச்சேரி மாநாடு, யாழ். நூல் நிலைய விஜயம் என்று அவரது யாழ்ப்பாண விஜயம் அவசர அவசரமாக முடிக்கப்பட்டது.

வன்னியில் இடம் பெற்ற இறுதிப் போரின் போதும் அதற்கு முன்பும் இலங்கை அரசுக்கு சாதகமான போக்கை இந்தியா கடைப்பிடித்தமை இன்றும் தமிழர் மனங்களில் மாறாத வடுக்களாகவே இருந்து வருகின்றன. இவற்றை அகற்றி தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு நிருபமா ராவ் போன்றவர்களின் விஜயம் பயன்படமாட்டாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிவஞானம் சிறீதரன் கூறியது போன்று நிருபமா ராவின் வடபகுதி விஜயம் வெறும் கண்துடைப்புத்தான்.

# பயணிகள் தொடர்பான கேள்விகள்

பயணிகள் யார்? என்பது ஓர் அடிப்படையான கேள்வி. இந்தக் கேள்விக்கான விடையிலிருந்தே நாம் பல விடயங்களைப் புரிந்துகொள்ள முடியும். பல பிரச்சினைகளுக்கான தீர்வினையும் காணமுடியும். இதற்கு, முதலில் பயணிகளில் சில வகையினர் உண்டு என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். ஒன்று, தினமும் பஸ்ஸில், ரயிலில் பயணிப்போர். இரண்டாவது, சுற்றுலாப் பயணிகள். மூன்றாவது, தமது வாகனங்களில் பயணிப்போர். (இவர்கள் வேலை மற்றும் வியாபார நடவடிக்கைகள் போன்றவற்றுக்காகப் பயணிப்பவர்கள்)

இவ்வாறான பயணிகள் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பும், பயணிகளுக்கான உரிமைகளும் உண்டு. அதிலும் குறிப்பாக பயணிகளுக்கான சேவைகளை வழங்குவோர் இதில் இன்னும் கூடுதலான அக்கறையைக் கொண்டிருக்க வேண்டும். இது ஒரு சட்டப் பிரச்சினை. இன்னொரு வகையில் இது ஒரு வசதிகள் சம்பந்தப்பட்ட விடயம்.

ஆகவே, பயணிகளுக்கான சேவைகளை வழங்குவோர், பயணிகளின் பாதுகாப்பு, பயணிகளுக்கான வசதிகள் மற்றும் உரிமைகள் தொடர்பாக அறிந்திருத்தல் அவசியம்.

யாழ்ப்பாணத்தில் பயணிகள் பெற்றிருக்கின்ற இடம் அல்லது சந்திக்கின்ற அவலங்கள் மிகவும் கவனத்திற்குரியவை. அதிலும் பஸ்ஸில் பயணிப் போரின் நிலை என்பது மிகவும் துக்கத்துக்குரியது. இதைப்பற்றி முன்னர் ஒரு தடவை இந்தப் பத்தியில் கவனப்படுத்தியிருந்த பின்னர் நிலைமைகளில் சிறிய மாற்றம் ஏற்படுத்தப் பட்டிருந்தாலும் அடிப்படையான சீரமைப்புச் செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் சாதாரண பயணிகள் பஸ்களையே நம்பியிருக்கின்றனர். குடாநாட்டில் ரயில் சேவையில்லை. எனவே வவுனியாவுக்கு வடக்கே நடக்கின்ற சேவைகள் அனைத்தும் பஸ் சேவைகளே. இதில் தனியார் பஸ்களும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்களும் ஈடுபடுகின்றன.

ஆனால், பயணிகள் நாளாந்தம் சந்திக்கின்ற இடர்பாடுகளும், அவமானங்களும் சாதாரணமானவையல்ல. குறிப்பாக வவுனியா - யாழ்ப்பாணம், கிளிநொச்சி - வவுனியா அல்லது கிளிநொச்சி - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு - யாழ்ப்பாணம், வவுனியா - முல்லைத் தீவு, மல்லாவி - யாழ்ப்பாணம் என்ற வகையில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பயணிப்போரில் பெரும் பகுதியினர் தினமும் சந்திக்கின்ற நெருக்கடிகள் அதிகம்.

முதலில் இந்தச் சேவையில் ஈடுபடும் பஸ்களில் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டண நடைமுறையில்லை. அவரவர் விரும்பிய மாதிரி கட்டணங்களை அறவிடுகின்றனர். அதைப் பற்றிக் கேட்டால், நாம் அப்படித்தான் கட்டணத்தை அறவிடுவது வழக்கம் என்று சொல்கின்றார்கள். இந்தக் கட்டணத்துக்கான பற்றுச் சீட்டையும் அவர்கள் துணிவாக வழங்குகின்றனர்.

அதேவேளை நீண்ட தூரச் சேவையில் ஈடுபடும் கண்டி, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, பதுளை போன்ற இடங்களுக்குச் செல்லும் பஸ்களில் வவுனியாவுக்கு உட்பட்ட இடங்களுக்கு ஒருவர் பயணித்தால் அவர் அதிகமான கட்டணத்தையே செலுத்த வேண்டியவராக இருக்கின்றார். அதிலும் இ.போ.ச. பஸ்களே இந்தக் கட்டண வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றன என்றால் தனியார் சேவையைச் சொல்லவும் வேண்டுமா?

ஆகவே, முதலில் கட்டண விவரத்தை சரியாகத் தீர்மானிப்பது அவசியம். வன்னிப் பகுதியில் இதுவொரு பிரச்சினையாகவே இருக்கின்றது. ஆனால், வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தனியார் பஸ்கள் வசதியானவை. வீதிகள் செம்மையாக இல்லாத போதும் மக்களுக்கு சேவையாற்றும் பேருந்துகள் தரமானவையாக உள்ளன.

இரண்டாவது விடயம், பயணிகளுக்கான வசதி தொடர்பானது. கிளிநொச்சியிலிருந்தோ மாங்குளத்திலிருந்தோ ஏறும் பயணிகள் வவுனியா வரையில் நின்றே பயணம் செய்கிறார்கள், அல்லது யாழ்ப்பாணம் வரைக்கும் ஓடும் பஸ்ஸில் கால் கடுக்க மனம் வலிக்க நின்றபடியே பயணிக்கின்றனர்.

இவ்வளவுக்கும் அவர்கள் உரிய கட்டணத்தைச் செலுத்துகின்றனர். அப்படிக் கட்டணத்தைச் செலுத்திக்கொண்டும் இவ்வாறு நீண்ட தூரம், மணித்தியாலக் கணக்கில் நின்றநிலையில் பயணம் செய்வதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

இதில் பெண்கள், சிறுவர்கள், முதியோர், உடல் அவயவங்கள் பாதிக்கப்பட்டோர் எனப் பல வகையானவர்கள் உள்ளடங்குவர். இவர்கள் காலையில் தமது தொழில்களுக்காகவோ, பிற தேவைகளுக்காகவோ செல்கின்றனர். பின்னர், மாலையில் பணி முடித்த களைப்போடு பயணிக்கின்றனர். அப்போது பயணத்தில் இவர்கள் சந்திக்கின்ற நெருக்கடி இருக்கிறதே அது நரக வாழ்க்கைக்குச் சமன்.

இதைவிட மோசமான நிலையில் உள்ளது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் பிரயாணம் செய்யும் உள்ளூர்ப் பயணிகளின் கதி. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் - மாதகல், யாழ்ப்பாணம் - காரைநகர், யாழ்ப்பாணம் - கொடிகாமம், யாழ்ப்பாணம் - புன்னாலைக் கட்டுவன் போன்ற இடங்களுக்குச் செல்லும் பயணிகள் ஒவ்வொரு நாளும் சந்தித்த அவலங்கள் சாதாரணமானவை அல்ல.

தமது பயணத்துக்கான கட்டணத்தைச் செலுத்திச் செல்லும் பயணிகள் இப்படி மோசமாக நடத்தப்படுவதன் காரணம் என்ன? அதிலும் இந்த இடங்களுக்கான தனியார் பஸ்கள் அனைத்தும் சிறிய வகை வாகனங்களாகும். இந்த வாகனங்களில் ஏற்றப்படுகின்ற பயணிகளின் தொகையோ இரு பஸ்களின் பயணிகளுக்கு அளவிலானதாகும்.

பஸ்களில் ஏற்றப்பட்டால், உடனேயே நடத்துநர்கள் பயணிகளின் மீது தமது அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கி விடுகின்றனர். நடத்துநரின் கட்டளைகள் ஒரு பயணியின் தன்மானத்தைக் கேள்விக்குள்ளாக்குவது வரையில் இந்த அதிகாரம் உள்ளது. இந்த அதிகார நடவடிக்கையில் பயணிகளின் வசதிகள் பறிக்கப்படுகின்றன. இவ்வளவுக்கும் பயணிகள் கட்டணம் செலுத்தியே பயணிக்கின்றனர். இதிலும் இருக்கையில் அமர்ந்து பயணிப்பதற்கும் ஒரே கட்டணமே. நெருசலில் சிக்கித் திணறி, மூச்சுவிட முடியாமல் பயணிப்பதற்கும் ஒரே கட்டணமே.

ஆனால், ஒரே கட்டணத்தைச் செலுத்தியும் நிம்மதியாகப் பயணம் செய்ய முடியாதுள்ளது. பிதுங்கி வழிய வழியச் சனங்களை ஏற்றிச் செல்லும் ஓட்டுநர்களும் நடத்துநர்களும் பொலிஸாருக்குப் பயப்படுகிறார்கள். ஆனால், எவ்வளவு தொகையான ஆட்களை ஏற்றிச் சென்றாலும் பொலிஸாரோ தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினரோ இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதேயில்லை.

பயணிகளின் உரிமைகளும் வசதிகளும் முற்றுமுழுதாகவே பறிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ளன.

ஆனால், பிற இடங்களில் இந்த நிலை இல்லை. உண்மையில் பயணம் என்பது சுகமானதாகவும், இனிமையானதாகவும் நெருக்கடியற்றதாகவும் அமைய வேண்டும். அப்படி அமைந்தால்தான் இந்தப் பயணிகள் - பணிக்குச் செல்வோரும் பணிகளில் இருந்து திரும்புவோரும் - களைப்பில்லாமல் செல்லமுடியும். அதற்காகவே அவர்கள் கட்டணம் செலுத்துகின்றனர்.

ஒரு சேவைக்குப் பொருத்தமான அளவிலேயே கட்டண நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே எந்த வகையிலும் நட்டத்தை எதிர் நோக்க வேண்டிய நிலை சேவையாளருக்கு ஏற்படாது. தவிர, போக்குவரத்துச் சேவை என்பதன் அர்த்தம் என்ன? இதில் சேவை என்ற சொல்லுக்கிருக்கும் பெறுமானத்தை இந்தச் சேவையாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தவிர்க்க முடியாத நிலையில் வேறு வழியின்றி எவ்வளவோ நெருக்கடிகளைச் சந்தித்ததைப் போலவே இந்தப் பயண நெருக்கடிகளையும் மக்கள் சந்திக்கின்றனர். அப்படியே இதையும் சமாளித்துக் கொள்கின்றனர்.

**ஜோசப் தயாளன்**

ஆனால், இயல்புநிலை உருவான சூழலில் இந்த நிலையிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டே ஆகவேண்டும். இந்த மாற்றத்தை தனியார் போக்குவரத்துச் சேவையாளர்கள் முதல் இ.போ.ச. வரை நடைமுறைப்படுத்துவது அவசியம். இல்லையென்றால், ஏதோ ஒரு கட்டத்தில் சட்டப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஒன்று உருவாகலாம். இதே வேளை இங்கே இன்னொரு விடயத்தையும் சுட்டுவது பொருத்தமாகும்.

அடுத்த ஆண்டில் ரயில் சேவை ஆரம்பித்துவிட்டால், இந்த நிலைமைகளில் பாரிய மாற்றம் ஏற்படும். ஏற்பட்டே தீரும். அதற்கான நாளை பெரும்பாலான பயணிகள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஆனால், 'அளவெட்டிக்கும், பருத்தித்துறைக்கும், மாதகலுக்கும் ரயில் ஓடுமா?' என்று எந்த நடத்துனராவது கேட்டால், அது குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர்தான் பதில் சொல்ல வேண்டும்.

ஆனால், பயணிகள் மனிதர்கள். அவர்கள் கட்டணம் செலுத்தியே தமது பயணத்தைச் செய்கின்றனர். பேருந்து சேவையாளர்கள் தமது சேவையைச் சும்மா இலவசத்தில் செய்யவில்லை என்பதை இலட்சக்கணக்கான பயணிகளின் சார்பாகச் சொல்லி வைக்கமுடியும்.




# விஜயகாந்தின் கூட்டணி யாருடன்?

தமிழகத்தில் உருவாகியுள்ள தேர்தல் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் இப்போது விஜயகாந்தைச் சுற்றித்தான் மையம் கொண்டிருக்கிறது. அதிலும் கடந்த 25ஆம் தேதி அவருடைய பிறந்த நாளன்று காங்கிரஸின் முன்னாள் தலைவர் இளங்கோவன் அவரை நேரில் சந்தித்துப் பேசிய பிறகு ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் ஒவ்வொரு கோணத்தில் கணக்குப் போடத் தொடங்கிவிட்டன.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் தே.மு.தி.க.வைத் தொடங்கிய விஜயகாந்த் இதுவரை இரண்டு பொதுத்தேர்தல்களையும் பல இடைத்தேர்தல்களையும் தனித்து களம் கண்டார். அதில் 2006இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் விருத்தாசலத்தில் அவர் மட்டுமே வெற்றிபெற்று சட்டப் பேரவை உறுப்பினர் ஆனார். அடுத்து நடந்த உள்ளாட்சித் தேர்தல், இடைத்தேர்தல்களிலும் விஜயகாந்த் கட்சியின் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். ஆளும்கட்சியின் அதிகாரம் மற்றும் பண பலம் ஆகியவற்றின் முன் தே.மு.தி.க. தொண்டர்களின் அனுபவமின்மை எடுபடவில்லை. அதே நேரத்தில் தனித்துப் போட்டியிடும் விஜயகாந்தின் அணுகுமுறை மற்ற அரசியல் கட்சியினரிடம் மட்டுமின்றி பொது மக்களிடையேயும் அவருக்கு





நல்ல அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்தது. ஆனாலும் கட்சி தொடங்கி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தும் கட்சியின் தலைவரான விஜயகாந்தைத் தவிர வேறு எவரும் தேர்தல் களத்தில் வெற்றி பெறாதது தொண்டர்களிடையே ஒரு சோர்வை உருவாக்கிவிட்டது.

அதிலும், வரும் தேர்தலிலும் தனித்துப் போட்டியிட்டு இதே நிலைமை ஏற்பட்டுவிட்டால், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தொண்டர்களை உற்சாகப்படுத்தி அரசியல் நடத்துவது என்பது சிரமமான காரியமாகிவிடும் என்பதையும் நன்கு உணர்ந்துவிட்டார் விஜயகாந்த். எனவேதான் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவோம் என்று முடிவெடுத்திருக்கிறார். அதிலும் இரண்டு நாட்களுக்கு முன் திண்டிவனத்தில் பேசிய விஜயகாந்த் நல்ல கட்சியுடன் கூட்டணி, மக்கள் விரும்பும் கட்சியுடன் கூட்டணி என்று கூறியதோடு மட்டுமின்றி, அடுத்த தேர்தலுக்குப்பின் தி.மு.க. ஆட்சிக்கு வராது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேச்சு தே.மு.தி.க., தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

அதாவது, விஜயகாந்த் கட்சி கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு எடுத்த பிறகு, அவர் கூட்டணி அமைக்க வேண்டுமானால் ஒன்று தி.மு.க.வுடனோ அல்லது அ.தி.மு.க.வுடனோ தான் கூட்டணி அமைக்க வேண்டும். இல்லையெனில், தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் கட்சியைப் பிரித்து காங்கிரஸுடன் கூட்டணி அமைத்து மூன்றாவது அணியை உருவாக்க வேண்டும். இந்த மூன்று கூட்டணி வாய்ப்புகளே விஜயகாந்தின் முன் நிற்பவை.

தி.மு.க.வுடன் கூட்டணி இல்லை என்பதை விஜயகாந்த் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். அடுத்து இருப்பது அ.தி.மு.கவுடன் அல்லது காங்கிரஸுடன் கூட்டணி. அந்த இரண்டு கட்சிகளுடனும் தே.மு.தி.க. கூட்டணி பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருந்தாலும் அ.தி.மு.க. வின் கதவுகளை மூடிவிடாமலேயே காங்கிரஸுடன்தான் முக்கிய நகர்வுகளைச் செய்து வருகிறார்.

அ.தி.மு.க.வும் ஆண்ட கட்சிதான். அதனால்தான் அவர் யோசிக்கிறார். காங்கிரஸுடன் கூட்டணி வைத்தால்தான் முதல்வர் வேட்பாளராகத் தொடர முடியும் என்று நினைக்கிறார். அ.தி.மு.க. வுடன் கூட்டணி அமைத்தால் வெற்றி உறுதியாகும் என்ற சூழல் இருந்தாலும், தேர்தலுக்குப் பிறகு அக்கட்சியுடன் கூட்டணியைத் தொடர்வதில் உள்ள பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும் மனதில் கொண்டு முதலில் காங்கிரஸ் பக்கம் காய் நகர்த்தத் தொடங்கியிருக்கிறார் விஜயகாந்த். அதிலும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. எதிர்ப்பு வாக்குகள்தான் விஜயகாந்திற்குக் கிடைக்கும் என்ற நிலை. எனவே விஜயகாந்த் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கும் பட்சத்தில் அ.தி.மு.க. எதிர்ப்பு வாக்குகள் விஜயகாந்துக்கும் எதிரான வாக்குகளாகமாறும் சூழல் இருக்கிறது. எனவே தனக்குள்ள செல்வாக்கை முழுவதும் வாக்குகளாக மாற்ற வேண்டுமெனில் காங்கிரஸுடனான கூட்டணியில்தான் முடியும் என்று நம்புகிறார் விஜயகாந்த். எனவேதான் காங்கிரஸுடனான பேச்சுவார்த்தையைத் தீவிரமாக்கியிருக்கிறார் அவர்.

இது ஒருபுறமிருக்க, தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகளின் மீது அதிருப்தியில் இருக்கும் பா.ம.க.வும் இந்தக் கூட்டணிக்கு வர வாய்ப்பிருக்கிறது. அதாவது விஜயகாந்துடன் அக்கட்சிக்கு சில அதிருப்திகள் இருந்தாலும் காங்கிரஸுடனான பா.ம.க.வின் இணக்கமான உறவு மற்றும் கட்சியின் எதிர்காலம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு பா.ம.க.வும் இந்தக் கூட்டணியில் தங்களை இணைத்துக் கொள்ளும் என்கின்றனர் விவரமறிந்தவர்கள். அதேபோல் விடுதலைச் சிறுத்தைகளும் இந்த கூட்டணிக்குள் இணையலாம். இப்படி ஒரு பலமான கூட்டணியை அமைக்கவும் 67-க்குப் பிறகு தமிழகத்தில் இழந்த ஆட்சியை மீண்டும் நிலைநாட்டவும் காங்கிரஸ் முழு மூச்சில் பேசிவருகிறது. இது குறித்து ராகுலிடமும் பேசப்பட்டுவிட்டாலும் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் நிலை வருமென்றால் அதற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயார் என்று அவரும் பச்சைக்கொடி காட்டிவிட்டாராம்.

இதுகுறித்து மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர் தெரிவிக்கையில் ''விஜயகாந்துடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்தால் அதனுடன் பா.ம.க. மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் என கட்சிகள் சேரும் பட்சத்தில் நிச்சயம் அது வெற்றிக் கூட்டணிதான். விஜயகாந்துக்கு தன்னை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதேநேரத்தில் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை தலைமைக்கு இருக்கிறது. விஜயகாந்தின் மீதும் சரி, காங்கிரஸின் மீதும் சரி ஊழல் குற்றச்சாட்டு, மக்கள்விரோத போக்கு பற்றிய குற்றச்சாட்டுகளோ இல்லை. எனவே கட்சிக்காரர்கள் மட்டுமின்றி பொதுமக்களின் வாக்குகளும் அதிக அளவில் இந்தக் கூட்டணிக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

அதிலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போதே விஜயகாந்துடன் காங்கிரஸ் கட்சி கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தியது. மற்ற எல்லா விஷயங்களும் இரு கட்சிகளுக்கும் ஒத்துப்போன சூழலிலும் கடைசியில் வழக்கம்போல் சீட்டு எண்ணிக்கை ஒரு சிக்கலை உண்டாக்கி கூட்டணிக்கு வராமல் போனது. இம்முறை காங்கிரஸில் முதல்வரும், விஜயகாந்த் துணை முதல்வரும் என பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. காங்கிரஸ் சார்பில் ப.சிதம்பரத்தை முதல்வர் வேட்பாளராக அறிவிக்கவும் ஒருபக்கம் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. மேலும் மொத்த இடங்களில் நாற்பது சதவிகிதம் தே.மு.தி.க. மற்றும் நாற்பது சதவிகிதம் காங்கிரஸ் எனவும் மீதமுள்ள இருபது சதவிகிதத்தை அக்கூட்டணியில் சேரும் பா.ம.க.மற்றும் விடுதலை சிறுத்தைகளுக்கோ அல்லது வேறு கட்சிகளுக்கோ கொடுக்க வாய்ப்பருப்பதாகவும் பேசப்படுகிறது.

அதிலும் சமமான எண்ணிக்கையில் அமைச்சர் பதவிகள், சமமான அதிகாரமுள்ள அமைச்சுப் பொறுப்புகள் என ஒதுக்கப் பட்டுவிட்டால் கூட்டணியில் குழப்பங்கள் வரவாய்ப்பில்லை. ஒருவேளை தன்னை முதல்வராக்க வேண்டும் என விஜயகாந்த் வலியுறுத்தினால், இரண்டு கட்சிகளும் இரண்டரை ஆண்டுகளுக்கு ஆட்சியிலிருக்கலாம் என்ற ஒப்பந்தம் வரவும் வாய்ப்பிருக்கிறது. இதற்கு காங்கிரஸ் ஓ.கே. சொல்லிவிடும் என்று தெரிகிறது.

கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. இரண்டரை ஆண்டு காலம் காங்கிரஸ் முதல்வராக இருந்தால் அது காங்கிரஸ் கட்சியை பெரிய சக்தியாக உருவாக்கிவிடும். அடுத்த தேர்தலில் தனிப் பெரும் கட்சியாக மாற்றிவிடும் என்று காங்கிரஸ் தலைமை கருதுகிறது. தி.மு.க.வுடனான கூட்டணி முறிவு பற்றி எந்த நிலைப்பாடும் எடுக்காமலேயே காங்கிரஸ் இந்த முயற்சிகளை மேற்கொண்டிருப்பது கருணாநிதிக்கும் தெரிந்துதான் இருக்கிறது.

விஜயகாந்துடன் கூட்டணி அமைத்தாலும் மொத்தமுள்ள 234 தொகுதிகளுக்கும் பணம் செலவழிக்க காங்கிரஸ் தயாராக இருக்கிறது. இதற்கான சூழல் உருவாகும் பட்சத்தில் தி.மு.க.வுடான கூட்டணி முறிவு அறிவிப்பு வெளியாகும்'' - என்றார் அவர்.

காங்கிரஸுடனான கூட்டணி நகர்வுகள் பற்றி தே.மு.தி.க.வின் முக்கியப் புள்ளி ஒருவர் தெரிவிக்கையில்



எங்களின் பலமே தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகளை எதிர்ப்பது தான். அவர்களில் யாராவது ஒருவருடன் கூட்டணி அமைத்தால் எங்களுடைய தனித்தன்மை கெட்டுவிடும். அதோடு விஜயகாந்த் முதல்வர் ஆவதும் கேள்விக் குறியாகிவிடும். எனவேதான் காங்கிரஸ் கூட்டணியை விஜயகாந்த் விரும்புகிறார். அ.தி.மு.க. தரப்பில் இருந்து தொடர்ந்து பேசி வந்த போதிலும் காங்கிரஸுடன் பேசிக் கொண்டிருப்பதற்கும் இதுதான் காரணம்.

ஜெயலலிதா காங்கிரஸ் கட்சிக்கு மறைமுக அழைப்பு விடுத்தபோது, ஜெயலலிதாவை எல்லா மேடைகளிலும் வசைபாடிய கருணாநிதி. ஜெயலலிதா காங்கிரஸை தாக்கத் தொடங்கியதும், ஜெ. - காங்கிரஸ் கூட்டணி அமையாது என்று முடிவெடுத்துவிட்டார். அதே நேரத்தில் காங்கிரஸ் - விஜயகாந்த் கூட்டணி பேச்சுவார்த்தை விஷயங்கள் வெளியில் கசிய ஆரம்பித்ததும் விஜயகாந்தை சகட்டுமேனிக்கு திட்டத் தொடங்கியிருக்கிறார் கருணாநிதி.

இதெல்லாமே தே.மு.தி.க.வுக்கு செல்வாக்கு கூடிக்கொண்டே போவதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

தே.மு.தி.க., காங்கிரஸ் கூட்டணி ஏற்படும் பட்சத்தில் தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் மீது அதிருப்தியில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் எங்கள் கூட்டணிக்கே வந்துசேரும். எனவே, நிச்சயம் இதுவெற்றிக் கூட்டணியாகத்தான் அமையும்'' - என்று கூறி முடித்தார் அவர்.

மொத்தத்தில் வரும் சட்டமன்றத் தேர்தலில் விஜயகாந்தின் தே.மு.தி.க. வெற்றிபெற்று ஆட்சி அமைக்கிறதோ, இல்லையோ வெற்றியை நிர்ணயிக்கும் கட்சியாக உருவாகியிருப்பதால் கூட்டணி பேரங்கள் தொடர்கின்றன.

ஜி.கே.மூப்பனாரின் நினைவு தினத்தையொட்டி, சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அவரது நினைவு இடத்தில் காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

தே.மு.தி.க.தலைவர் விஷயகாந்தை பொறுத்தவரையில் எம்.ஜி.ஆர்., அண்ணா, பெரியார் என முக்கிய தலைவர்களின் பிறந்தநாள், நினைவு நாள் என்றால்கூட அவர்களின் நினைவு இடத்திற்குச் செல்லமாட்டார். மாறாக, கட்சி அலுவலகத்திலேயே அந்தந்தத் தலைவர்களின் படத்தை வைத்து மரியாதை செலுத்துவது வழக்கம். அதே நேரத்தில், ஜி.கே. மூப்பனாரின் நினைவு தினத்தில் மட்டும் அவரது நினைவிடத்திற்கு வந்து மலர்தூவி அஞ்சலி செலுத்துவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்.

ஜி.கே.மூப்பனாரின் 9ஆவது நினைவு தினத்தையொட்டி 30ஆம் தேதி அவரது நினைவு இடத்திற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் முதலில் வந்து அஞ்சலி செலுத்தினார். அப்போது, ஜி.கே.வாசன் உடனிருந்தார். பின்பு முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வந்ததும், திருமாவளவன் அவருடன் நினைவிடத்திற்குச் சென்றார். பத்துநிமிட இடைவெளியில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், மூப்பனாரின் நினைவிடத்திற்கு வந்தார். அவரை ஜி.கே.வாசன் கைபிடித்து வரவேற்றார்.

விஜயகாந்த் தன் கையோடு பெரிய தாம்பூலத் தட்டில் உதிரிப் பூக்கள் மற்றும் மலர்வளையம் எடுத்து வந்திருந்தார். இதனால், மீண்டும் ஒருமுறை விஜயகாந்துடன் ஜி.கே.வாசன், இளங்கோவன், திருமாவளவன் ஆகியோர் சென்று மூப்பாரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். இவர்கள் சென்ற பின்பு துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் மூப்பனாரின் நினைவிடத்திற்கு வந்து அஞ்சலி செலுத்தினார்.

ஏற்கெனவே, தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியில் சிறிய சலசலப்பு உள்ள நேரத்தில், விஜயகாந்த், இளங்கோவனுடன் திருமாவும் இணைந்தது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. *

# பசுமை மக்கள் வேட்டையா?



'30 நாட்களில் இந்தி பாஷை' என்பதைப்போல சாதாரணமானது அல்ல உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் செய்துள்ள அறிவிப்பு. 'மூன்று ஆண்டுகளில் மாவோயிஸ்ட்டுகள் ஒழிக்கப்படுவார்கள்' என்பது அவரது ஆசை. இந்தியாவில் எரியும் பிரச்சினையை எதிர்கொள்ள ப.சிதம்பரம் பயன்படுத்தி வரும் கற்பனைக் குதிரையை நினைத்தால் பயமாக இருக்கிறது.

ஆறு மாநிலங்கள், 65 மாவட்டங்கள் எனத் தனது எல்லைகளை விரித்து வைத்து இருக்கும் மாவோயிஸ்ட்டுகளை ஒழிக்க 'மூன்று ஆண்டுகளே போதும்' என்று அமைச்சர் அறிவித்த மூன்று நாட்களுக்குள் நடந்த நிகழ்வுகளை துணை இராணுவத்தாலும் பொலிஸாராலும் தடுக்க முடியவில்லை. நாளுக்கு நாள் இந்தச் சம்பவங்கள் அதிகரிக்கவே செய்யும். அப்படியானால் ப.சிதம்பரத்தின் கனவு?

மாவோயிஸ்ட்டுகளை எதிர்கொள்ள மூன்று காரியங்களை இந்திய மத்திய அரசாங்கம் உடனடியாகச் செய்தாக வேண்டும்.

காட்டுக்குள் இருந்து வெளியேறுங்கள்!

சதீஸ்கர், ஜார்கண்ட், ஒரிஸா, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், ஆந்திரா ஆகிய மாநிலங்களின் 60 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் எல்லைப் பகுதிதான் இன்று எரிந்துகொண்டு இருக்கிறது. 'பசுமை வேட்டை' என்கிறது இந்திய மத்திய அரசு. 'இது மக்கள் வேட்டை' என்கிறார்கள் மனித உரிமை ஆர்வலர்கள்.

இந்தப் பகுதிகளில் இறக்கிவிடப்பட்ட இந்தியப் படைகளின் முழுமையான எண்ணிக்கையை அரசு வெளியிடவில்லை. ஆனால், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணை இராணுவப் படையினர், சி.ஆர்.பி.எப். வீரர்கள், பி.எஸ்.எப். படையினர் இந்த எல்லைக்குள் உள்ளார்கள். நாகா பட்டாலியன் உள்ளே சென்று உள்ளது. வேட்டை நாய்கள், கருநாகங்கள், தேள்கள் எனப் பெயரிடப்பட்ட பல்வேறு படைகள் உள்ளன. மேலும், 'முள்ளை முள்ளால் எடுக்கும்' நடவடிக்கையாக அரசால் உருவாக்கப்பட்ட பழங்குடி மக்களைக் கொண்ட ப்டைப் பிரிவான 'சல்வாஜுடும்' என்ற அமைப்பினரும் மாவோயிஸ்ட்டுக்களைத் தேடி அலைகிறார்கள். இவை அனைத்தையும் கூட்டிப் பார்த்தால் இரண்டு லட்சம் எண்ணிக்கையைத் தொடலாம். எனவேதான் 'இந்தக் காடுகளில் நடப்பது உள்நாட்டுப் போர்' என்கிறார் எழுத்தாளர் அருந்ததி ராய்.

இரும்புத் துப்பாக்கிகளுக்கு எதிராக கம்பு, கட்டை ஆகியவற்றைத் தூக்கிப் போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.

'மாவோயிஸ்ட்டுகள் ஆயுதங்களைக் கீழே போடத் தேவையில்லை. வன்முறையைக் கைவிட்டால் போதும்' என்கிறார் ப.சிதம்பரம். மாவோயிஸ்ட்டுகள் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக வெடிக்கக் காத்திருக்கும் துப்பாக்கிகளுக்குப் பின் நின்று இதைச் சொல்வதுதான் தவறு. எனவே, காட்டுக்குள் இருக்கும் படைகளைத் திரும்பப் பெற்று, அதன் பிறகு மாவோயிஸ்ட்டுகள், பழங்குடி மக்கள் குழுக்களை நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அழைப்பதன் மூலமான முதல் படியை இந்திய அரசு செய்தாக வேண்டும்.

அரசு அதிகாரிகளைக் கடத்திப் போய், மூன்று தீவிரவாதிகளை விடுவிக்கச் சொல்லும் - சம்பவங்கள் அல்ல இந்த ஆறு மாநிலங்களில் நடப்பவை. ஊரே சேர்ந்து நிற்கிறது - ஒரு மாவட்டத்துக்குள் பொலிஸாரை வரவிடாமல் தடுக்கக் குறைந்தது 30 ஆயிரம் பேர் வேண்டும் - என்று அறிவித்தால், முழு மக்களுமே திரண்டு விடுகிறார்கள்.



இந்த யதார்த்தத்தை எதிர்கொள்ள வேட்டை நடத்த முடியாது. அவர்களது விருப்பங்களை அறிய மத்திய அரசு இறங்கி வரவேண்டும்.

ஒப்பந்தங்களை முறியுங்கள்!

இந்தச் சண்டை நடந்துகொண்டு இருக்கும் இடங்கள் பொட்டல் காடுகள் அல்ல. பொலிவும், வளமும், செழிப்புமான கனிம வளங்கள் நிறைந்த பகுதிகள். சதீஸ்கர், ஒரிஸா, ஜார்கண்ட் மாநிலங்கள் உள்ளடங்கிய தண்டகாரண்ய வனப் பகுதியைப் பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் கழுகுக் கண்களால் வட்டமிட்டுக்கொண்டு இருக்கின்றன. நிலக்கரி, அலுமினியம், பாக்சைட், மாங்கனீஷ், சிலிக்கான், குவார்ட்ஸ், புளோரைட், கிரானைட் மற்றும் இரும்புத் தாதுக்கள் நிறைந்த பகுதிகள் இவை.

இந்தியாவில் அதிக அளவு இரும்புத் தாது இங்கு தான் இருக்கிறது. 3,500 கோடி தொன் நிலக்கரியும், 234 கோடி தொன் இரும்புத் தாதும், 3,550 மில்லியன் தொன் சுண்ணாம்புக் கல்லும் இங்கு இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. டாடா, எஸ்ஸார், வேதாந்தா, 'ஜிண்டால்' பிரபல நிறுவனங்கள் இந்த இடங்களில் தமது கிளைகளைத் திறக்கத் துடிக்கின்றன.

இவ்வளவு கனிம வளங்கள் உள்ள இடங்களில்தான் கோண்டு, முண்டா, கோல், ஓரான், சந்தால் உள்ளிட்ட பழங்குடி மக்கள் பல நூறு ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள். இத்தகைய கனிமங்களை எவரும் கொள்ளையடித்து விடாதபடி இத்தனை ஆண்டுகள் பாதுகாத்தவர்களும் இவர்கள்தான். ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியாவை ஆண்ட போது இந்த இடங்களுக்குள் நுழைந்து விடாதபடி தடுத்ததும் பழங்குடி மக்களே.

லட்சக்கணக்கான இந்த மக்களை அங்கே இருந்து துரத்தி அடிக்க இந்த நிறுவனங்கள் துடிக்கின்றன. தாங்கள் வாழ்ந்த இடத்தை இழக்க முடியாமல் மக்கள் தவிக்கின்றனர்.

விவசாயிகளின் எதிர்ப்புக் காரணமாக நந்தி கிராமில் அமைய இருந்த இரசாயனத் தொழிற்சாலை கைவிடப்பட்டது. ஒரிஸ்ஸாவில் ஸ்டீல் ஆலையும், சிங்கூரில் கார் தொழிற்சாலையும் கைவிடப்பட்டன. ஜார்கண்ட், ஒரிஸாவில் அமைய இருந்த ஸ்டீல் தொழிற்சாலை நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. இப்படி அமைய இருக்கும் நிறுவனங்கள், ஒப்பந்தங்கள், தேர்ந்தெடுத்துள்ள இடங்கள், மக்கள் காலி செய்ய வேண்டிய கிராமங்கள் குறித்து வெளிப்படையான விளக்கங்களை அரசு தர மறுக்கிறது. அந்தப் பகுதியில் அமைய வேண்டிய திட்டங்களை வரையறுக்க வேண்டும்.

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியோடு இந்த நிறுவனங்கள் தொடர்புடையவை தான். ஆனால், மக்களை விரட்டிவிட்டு வளர்க்கப்படும் தொழிலால் ஒரு நாடு எப்படி மேம்பாடு அடைந்ததாகப் பெருமை அடைய முடியும்? லட்சம் தொழிற்சாலைகளை நிறுவலாம். ஆனால், ஒரு மலையைக் கூட உருவாக்க முடியாது!

அந்த மக்களைப் பாருங்கள்!

சத்னம் என்ற எழுத்தாளர் மாவோயிஸ்ட் எல்லைக்கு உட்பட்ட பகுதிக்குப் பயணம் போனார். "அவர்களின் வாழ்விடங்களில் வெட்டி எடுக்கப்படும் கனிம வளங்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் அம் மக்களின் முன்னேற்றத்துக்கு என எதுவும் செய்யப்படவில்லை. நாடு சுதந்திரம் அடைந்து 62 ஆண்டுகளுக்குப் பிறகும், ஏழை மக்கள், பரம ஏழைகளாகவே ஆக்கப்பட்டுள்ளனர். பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் அவர்களது வாழ்க்கைத் தரம் பரிதாப நிலையில் கிடக்கிறது. தான் வைத்திருக்கும் வில்லுக்கு பொருத்த மட்டுமே இரும்பு பயன்படும் என்ற அளவுக்குத்தான் அவர்களின் கல்வித்தரம் இருக்கிறது" என்று சொல்கிறார் சத்னம். கல்வி இல்லை. மருத்துவம் கிடையாது. சட்டப்படி கிடைத்திருக்க வேண்டிய நிவாரணங்கள் தரப்படுவது இல்லை. ஆனால் வட்டிக்காரர்களாலும், சிறு வியாபாரிகளாலும் இவர்கள் சுரண்டப்படுகிறார்கள். பொலிஸாரும், வனத்துறை அதிகாரிகளும் வைத்தது தான் சட்டம். தட்டிக் கேட்கும் பழங்குடி ஆண்களைக் கொலை செய்வதும், பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்வதும் கேட்பாரற்றுத் தொடர்ந்தது. எவ்வளவோ கோரிக்கைகள் வைத்தார்கள். எந்த வசதியும் செய்து தரப்படவில்லை. ஆனால், இன்று பன்னாட்டு கம்பனிகள் வரப்போவது தெரிந்ததும் தந்தேவாடாவின் இரண்டு காடுகளுக்கு மத்தியில் பளபளப்பான வீதிகள் போடப்படுகின்றன. அரசின் மனோ பாவம்தான் மக்களை மாவோயிஸ்ட்டுகளை ஆதரிக்கும் நிலைக்குத் தள்ளி இருக்கிறது.

'நக்சல் பாதித்த பகுதிகளில் காடுகளை நிர்வகித்தல்' என்ற கருத்தரங்கம் கடந்த வாரம் டெல்லியில் நடந்தது. இதில் பேசிய மத்திய அமைச்சர் சிதம்பரம், இந்தப் பகுதிகளின் மேம்பாட்டுக்காக 13 ஆயிரத்து 742 கோடி ரூபா செலவிலான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று கூறிஇருக்கிறார். வீதிகள், குடிநீர் வசதி, மின்சாரம், மருத்துவம் ஆகியவற்றைச் செய்து தரப் போகிறார்கள். 1996 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பழங்குடிப் பகுதிகளின் பஞ்சாயத்து நிர்வாகச் சட்டத்தின்படி நிர்வாக நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும் என்று சொல்லும் இவர், 'சிறிய காடுகளில் கிடைக்கும் வளங்களை பழங்குடியினரே பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்கு உரிமை அளிக்கப்படும்' என்றும் கூறிஇருக்கிறார். 'வறுமைதான் நக்சல் தீவிரவாதத்துக்கான அடிப்படை' என்பதும் அவரது கண்டுபிடிப்பு.

சரியான விடயங்களை ஓரளவு உணர்ந்து ஒப்புக்கொள்வதாகவே சிதம்பரத்தின் இந்தப் பேச்சு அமைந்திருக்கிறது. 'இந்த வளர்ச்சித் திட்டங்கள் மக்கள் மேம்பாட்டுக்காகவே செய்யப்படுகின்றன' என்ற நம்பிக்கையை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

மேலும், இரண்டு பக்கங்களும் துப்பாக்கிச் சத்தம் கேட்டுக்கொண்டு இருக்க, இவற்றைச் செய்ய முடியாது. பழங்குடி மக்களையும் உள் இழுத்துத்தான் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். 'இது ஓர் உள்நாட்டுப் போர்' என்பதை ஒப்புக்கொண்டு அரசாங்கம் இறங்கி வருவதில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். இல்லையென்றால், 'மூன்று ஆண்டுகளுக்குள் ஒழித்து விடுவோம்!' என்று காலத்தை நீட்டித்துக் கொண்டேதான் போக முடியும்.

நக்சல்பாரி என்ற கிராமத்தில் 40 ஆண்டுகளுக்கு முன்னால் கேட்ட 'வசந்தத்தின் இடி முழக்கம்' இன்று வரை கேட்பதற்குக் காரணம் நக்சலைட்டுகளின் செல்வாக்கு அல்ல; இந்திய அரசின் அலட்சியமே மிக மிக முக்கியக் காரணமாக அமைந்திருந்தது. அதை இன்றும் உணராவிட்டால் என்றுமே முடியாது!

நன்றி - இணையம்



## சொற்சிலம்பம் போட்டி இல. 433

சொற்சிலம்பம் 433 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் செப்டம்பர் 19 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 431 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

### சொற்சிலம்பம் போட்டி இல. 433



### சொற்சிலம்பம் போட்டி இல. 433

**இடமிருந்து வலம்**

1. ஓர் இறைக் கொள்கை. 5. மரம் 6. பெரிய 7. மனித உடலுறுப்பு/ உடல் 8. தண்ணீர் போன்றவை ஓடாமல் தங்குதல். 9. தண்டனைகளில் முதலாவது வகை 10. வைக்கோலை எரித்து அதன் கரியில் எண்ணெய் சேர்த்துத் தயாரிக்கும் மை 11. உரையாட 13. செல்வம் தருகின்ற வாய்ப்பான நிலை 14. இலங்கை நிர்வாக வசதிகருதிப் பிரிக்கப்பட்ட பெரும் நிலப்பகுதி ரீதியாக 16. கனி 17. லாபம் 18. பளு 19. ஆகாயம்

**மேலிருந்து கீழ்**

1. குற்றம் 2. கதையின் மூலக்கருத்து 3. தெரிய வருதல்/ வெளிப்படுதல் 4. சடுதியான இறப்பு 7. யானைப் பாகன் வைத்திருக்கும் கருவி 8. யாழ்ப்பாணத்தவர்களுக்கே சிறப்பாக உரிய சட்டம் 12. யுத்தம், வழக்கு முதலியன தீர்க்கப்பட்ட அமைதி நிலை சார்ந்த 15. உடல்/ இரத்தம் சிந்துகின்ற புண் 16. பெண் மாடு 17. மொத்தத்தில்/ மிகவும்/ நான்காம் வேற்றுமை உருபுடன் 'பொருட்டு' காரணமாக என்ற பொருள் தருவது.

### சொற்சிலம்பம் போட்டி இல.431

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ம | 3 போ | 4 சி | 5 த | ம் | ■ | 6 அ |
| 7 வ | ழி | கா | ட் | டி | ■ | 8 து | ணி |
| ர் | ■ | 9 ச | ரு | த் | 10 த | ம் | ■ |
| க் | ■ | ன | ■ | 11 த | ம் | பி | ■ |
| 12 கா | 13 த | ல் | ■ | ■ | 14 ம | க் | கு |
| 15 ர | வி | ■ | ■ | 16 உ | வ | கை | ■ |
| ம் | ■ | 17 அ | ற் | ப | ன் | ■ | 18 ம |
| ■ | 19 ஏ | து | ■ | ரி | ■ | 20 ஏ | டு |

### பரிசு பெறுவோர்

1. திருமதி. ரஞ்சினி சிவஞானம்
24, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு.
2. திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி
36, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
3. இந்துமதி வடிவேல்
தமிழ் மகா வித்தியாலயம்,
ஏறாவூர் - 04, செங்கலடி.

### பாராட்டுப் பெறுவோர்


- பா. இராஜேஸ்வரி, வவுனியா.
- பொ. நமசிவாயம், திருநெல்வேலி.
- ச. துஷாரிகன், கல்லடி.
- பி. டெபோறா, இரம்பைக்குளம்.
- எம். பாலகிருஷ்ணன், வெள்ளவத்தை.
- ஐ. தாஜீமன், அட்டாளைச்சேனை.
- ஆர். கார்த்திகேசு, கொழும்பு - 06.
- கோ. சாமினி, திருகோணமலை.
- க. ஜெயலட்சுமி, மாதகல்.
- வி. செல்வநாயகம், புத்தூர்.
- சேரன் அமரலிங்கம், வெள்ளவத்தை.



கே.பி. நிஷா,
கிளிநொச்சி.

**கேள்வி:** வன்னி தற்போது எப்படி உள்ளது? யுத்தத்தின் போதும் நான் உங்களை நினைத்தபடி தான் இருந்தேன்.

**பதில்:** வன்னி இப்போது சின்னாபின்னமடைந்துள்ளது. எங்கும் கவலையும் கண்ணீரும் ஏக்க எதிர்பார்ப்புகளுமே காணப்படுகின்றன. பாழடைந்த கட்டடங்களும் சிதலமான வீடுகளும் தறப்பாள் கூடாரங்களுமே அப்பாவி மக்களின் கதியாகிவிட்டது. இந்த நிலையில் இருந்து மீள இறைவனே அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்திப்பதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? யுத்த சூழ்நிலையிலும் என்னை நினைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.




அ. தவமணி,
வெள்ளவத்தை

**கேள்வி:** மனிதன் பிறக்கிறான். இறக்கிறான். இறுதிக் காலத்தில் அவன் எண்ணியது நடைபெறும் என்று கூறுகிறார்களே, அதெப்படி எனச் சொல்வீர்களா?

**பதில்:** நீங்கள் சொல்வது போல், இறுதிக் காலத்தில் அவன் எண்ணியது நடைபெறும் என்று யார் சொன்னார்கள்? இந்த உலகத்தில் மனிதன் எவ்வளவோ விடயங்கள் நடைபெற வேண்டுமென்று விரும்பத்தான் செய்கிறான். எவ்வளவோ மனக்கோட்டைகளைக் கட்டுகிறான். எப்படியெப்படியோ வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறான். ஆனால், பல ஆசைகள் நிறைவேற முன்பே அவன் இறந்து விடுகின்றான். இது தான் உலக இயற்கை. 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை' என்ற பாடல் வரிகளை நீங்கள் மறந்து விட்டீர்களா?

எம். பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை

**கேள்வி:** மலையக அரசியல்வாதிகள் தேர்தலில் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற பின்னர், அந்த அப்பாவி மக்களை மடையர்களாக்கி வேடிக்கை காட்டுகின்றார்களே?

**பதில்:** இப்படித்தான் எப்போதுமே நடந்து வருகிறது. இந்த அரசியல்வாதிகளை நம்பிப் பயனில்லை என்பதை மலையக மக்கள் இன்னும் உணர்ந்து கொள்ளாதிருப்பது தான் வேதனையாக இருக்கிறது.

தமிழ்,
கிளிநொச்சி.

**கேள்வி:** மக்களின் நிம்மதியான வாழ்வை மனதில் சுமந்து அந்த இலட்சியத்துக்காக விழி மடல் மூடியவர்களின் ஆத்மாக்கள் எப்போது சாந்தி அடையும்?

**பதில்:** பெரும்பான்மை மக்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று நிம்மதியாக வாழும் போது. ஆனால், நாட்டில் நடப்பதைப் பார்த்தால் இது வெறும் கனவாகவே போய்விடுமோ என்ற பயம் தான் எல்லோரையும் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

சுஜன்,
கொழும்பு.

**கேள்வி:** சரத் பொன்சேகாவின் பட்டங்கள் பறிக்கப்பட்டதைப் பற்றி?

**பதில்:** இதனால் அவருடைய புகழ் மேன்மேலும் உயருமே தவிரக் குறைந்து விடாது.

நவீன்,
தம்புலுவில்.

**கேள்வி:** நுவரெலியா மாவட்டத்தில் அபிவிருத்திக்குச் செலவிடப்படும் பணத்தை விட மதுபான வகைகளுக்குச் செலவிடப்படும் பணம் அதிக மாக இருக்கிறதாகக் கூறப்படுகிறதே, அது உண்மைதானா?

**பதில்:** உண்மை தான். நுவரெலியா மாவட்டத்தில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் லீற்றர் மது பானம் வருடமொன்றுக்கு அம்மாவட்ட மக்களால் அருந்தப்படுகிறது என்றும், அதன் பெறுமதி 5 ஆயிரத்து 720 கோடி ரூபா என்றும் சமீபத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். மதுபான விற்பனையால் அரசுக்குப் பெருமளவு வருமானம் கிடைப்பதால், பௌத்த நாடாக இருந்தும் அம்மதத்தின் மூல போதனையை ஆட்சிக்கு வரும் அனைத்து அரசாங்கங்களும் மீறியே செயற்படுகின்றன. இந்த அநியாயத்தை யாரிடம் முறையிடுவது? குடிப்பவர்களாவது திருந்துவார்களா?

பிரதீபன்,
நுவரெலியா.

**கேள்வி:** பெண்களுக்கு அழகு தருவது அவர்களது உடையலங்காரங்களா அல்லது அவர்கள் பாவிக்கும் அழகுசாதனப் பொருள்களா?

**பதில்:** பிறருக்குக் கவர்ச்சி காட்டுவதற்காக ஆடவர் மத்தியில் உலாவித் திரியும் பெண்களின் கற்புக்கு உத்தரவாதமில்லை. அழகு சாதனப் பொருள்களில் இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கியிருப்பதால் அவற்றால் தீமையே தவிர நன்மை இல்லை. உண்மையாகச் சொல்லப் போனால், ஒரு பெண்ணுக்கு அழகு அவளின் ஒழுக்கமே தவிர வேறில்லை.

ரவிச்சந்திரன்,
பண்டாரவளை.

**கேள்வி:** வைராக்கியம் என்ற சொல்லின் பொருளை விளக்குவீர்களா?

**பதில்:** உலக வாழ்க்கையில் சுகம் இருக்கிறது என்று மனிதன் ஆரம்பத்தில் நினைக்கின்றான். மனித மனம் பக்குவமடையும் போது, உலக வாழ்வில் சுகம் இல்லை என்பதை உணர்ந்து, அதில் பற்றின்மை ஏற்படுகிறது. இந்தப் பற்றின்மையைத் தான் வைராக்கியம் என்கிறோம். இதுவே ஆன்மீக வாழ்வின் திறவுகோலாகும்.

சிவா,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** இன்றைய காலகட்டத்தில் எப்படிப்பட்ட பெண்ணை மணப்பது ஓர் ஆணுக்கு நல்லது?

**பதில்:** ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், எந்தக் காலத்திலும், தன்னைச் சமமாக மதித்து அன்பு செலுத்தக்கூடியவரை மணப்பது தான் நல்லது.

நவாஸ்,
அட்டாளைச்சேனை.

**கேள்வி:** அழகான பொய் ஒன்று கூறுங்களேன்?

**பதில்:** உங்களை விட வேறு யாருக்கு இப்படிக் கேள்வி கேட்கும் திராணியிருக்கின்றது?

அகிலன்,
வவுனியா.

**கேள்வி:** திருமணம் சிறையா சொர்க்கமா?

**பதில்:** அது வந்து வாய்ப்பவ(ளை)ரைப் பொறுத்தது.

சரவணன்,
அவிசாவளை.

**கேள்வி:** அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு மக்களிடம் அங்கீகாரம் கேட்டு வாக்கெடுப்பு நடத்துவது நல்ல முடிவாக அமையுமா?

**பதில்:** அந்த வாக்கெடுப்பு முடிவுகள் நேர்மையான முறையில் வெளிப்படுத்தப்படுமா என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது?

# ஏழைகளின் அன்னை திரேசா



அன்னை தெரேசா... அன்புக்காக ஏங்கியவர்களை அரவணைத்துக்கொண்டவர்.

★ பிரார்த்தித்த உதடுகளைவிட பணிவிடை செய்யும் விரல்களுக்குச் சொந்தக்காரர். தொழுநோயாளியையும் தெய்வமாகத் தொழுதவர். பச்சையாக எச்சிலையும் ஏந்தியவர்.

★ ஆகஸ்ட் 26, 1910 பிறப்பு. செப்டம்பர் 5, 1997 இறப்பு. இடைப்பட்ட காலங்கள் முழுக்க மானுட சேவை மட்டுமே வாழ்க்கைப் பிடிப்பு!

★ பிறந்த திகதி ஓகஸ்ட் 26. எனினும், ஞானஸ்நானம் பெற்ற ஆகஸ்ட் 27 ஆம் திகதியைத்தான் தன்னுடைய உண்மையான பிறந்த நாள் என்பார்!

★ இயற்பெயர், ஆக்னஸ் கோன்ஸா பொஜாக்சு.



அப்பா, நிகோலோ பொஜாக்சு. அம்மா, ட்ரானாபைல் பெர்னாய். அக்கா, அண்ணன் என்று அன்னை தெரசாவுடன் பிறந்தவர்கள் இருவர். வீட்டில் இவரை ஆக்னஸ் என்றே அழைப்பார்கள். ஆக்னஸ் என்றால், அல்பேனிய மொழியில் 'ரோஜாவின் அரும்பு' என்று அர்த்தம்!

★ தன் 18 ஆவது வயதில் 'லோரெட்டோ சகோதரி'களின் மிஷனரியில் சேர்ந்தார். அதற்குப் பிறகு, தன் வாழ்க்கையின் இறுதி வரைக்கும் அவரின் தாய் மற்றும் சகோதரியைப் பார்க்கவே இல்லை!

★ இந்தியாவுக்கு வருகை தந்தது 1929 இல். கன்னியாஸ்திரியாகப் பயிற்சி பெற்றது டார்ஜிலிங்கில். மே 24, 1931 அன்று கன்னியாஸ்திரியானார். அருட்கன்னியாகப் பலருக்குச் சேவை செய்து, தன் 24 வயதில் காச நோயால் இறந்து, பிரான்ஸ் தேசத்தையே துயரத்தில் ஆழ்த்திய தெரசாமார்ட்டினின் நினைவாகவைத்துக் கொண்ட பெயர்தான் 'தெரசா.'

★ பிறப்பில் அல்பேனியர். குடியுரிமையில் இந்தியர். நம்பிக்கையில் கத்தோலிக்கர். சேவையில் உலகத்துக்குப் பொதுவானவர். அன்பில், இயேசுவுக்கு உரித்தானவர். இப்படித்தான் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்வார்!

★ டிசம்பர் 9, 1948 அன்று கொல்கத்தா வந்தார். 'உள்ளிருந்து வந்த ஓர் அழைப்பு' என்று கொல்கத்தாவுக்கு வந்ததைப்பற்றிக் குறிப்பிடுவார்!

★ நோயின் பிடியில் இறந்துகொண்டு இருக்கும் ஆதரவற்றவர்களுக்கு 'கோளிகட் இல்லம்' என்ற பெயரில் ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். பின்னாளில் 'நிர்மல் ஹிருதய்' என்று பெயர் மாற்றினார். 'அன்னை இல்லம்' என்றுதான் அங்கு உள்ள நோயாளிகள் குறிப்பிடுகிறார்கள்!

★ தொழுநோயாளிகளுக்காக இவர் ஆரம்பித்தது 'சாந்தி நகர்' நலவாழ்வு மையம். ஆதரவற்ற சிறார்களுக்காக, 'நிர்மலா சிசு பவன்' என்ற இல்லத்தை ஆரம்பித்தார் அன்னை!

★ ஆசிரியை, செவிலித் தாய்... இவை இரண்டும் அன்னைக்கு மிகப் பிடித்தமான பணிகள். இறுதி வரைக்கும் இந்த இரண்டு பணிகளையும் கைவிடவில்லை!

★ அக்டோபர் 7, 1950 இல் அன்னை தெரசா தொடங்கிய 'மிஷனரிஸ் ஒப் சாரிட்டி'க்கு அனுமதி அளித்தது வத்திக்கன். தற்போது 5,450 பேருடன், 123 நாடுகளில், 610 மிஷனரிகள் இயங்கி வருகின்றன!

★ 1992 இல் நவின் சாவ்லா எழுதிய அன்னை தெரசா பற்றிய புத்தகம்தான் இன்று வரை இது அதிகாரபூர்வ வாழ்க்கைச் சரித்திரமாக இருக்கிறது. 14 இந்திய மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது!

★ பத்மஸ்ரீ, ஜவஹர்லால் நேரு விருது, பாரத ரத்னா, ராமன் மகசேசே, கென்னடி சர்வதேச விருது, யுனெஸ்கோ அமைதி விருது, 23 ஆம் போப் ஜோன் அமைதி விருது, டெர்ரிஸ் பாசேம் விருது, பால்சன் பரிசு, ஆல்பர்ட் சுவிட்சர் சர்வதேசப் பரிசு. இவற்றுடன் கிழக்கிலும் மேற்கிலும் பல்வேறு பல்கலைக் கழகங்கள் அளித்த கௌரவ டாக்டர் பட்டங்கள்... எல்லாவற்றுக்கும் மேலாக நோபல் பரிசு. இவை அன்னை பெற்ற 50க்கும் மேலான விருதுகளில் முக்கியமான சில விருதுகள்!

★ அன்னையின் நூற்றாண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு ஓகஸ்ட் 26, 2010 இல் அன்னையின் பெயரால் 'மதர் எக்ஸ்பிரஸ்' என்று புதிய ரயிலை அறிமுகப்படுத்தியது, இந்திய ரயில்வே துறை.!

★ 27 புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இவரைப்பற்றி ஆங்கில மொழியில் மட்டும் 70க்கும் மேற்பட்ட புத்தகங்கள் வெளிவந்து இருக்கின்றன. 15க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் வந்திருக்கின்றன!

★ 1964 இல் இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் வந்த போப்பாண்டவருக்கு அன்றைய அமெரிக்க அதிபர் லிண்டன் ஜோன்சன் விலை உயர்ந்த கொன்டினென்டல் காரைப் பரிசாக அனுப்பி வைத்தார். அதை அன்னை தெரசாவுக்குப் பரிசாக வழங்கினார் போப். அந்தக் காரை ஏலத்தில்விட்டு, அதில் வந்த தொகை முழுவதையும் அறக்கட்டளைக்கான கணக்கில் சேர்த்தார் அன்னை!

★ 1948 இல் இருந்து நீலக் கரையிடப்பட்ட சாதாரண வெண் புடைவைதான் இவர் உடுத்திய உடை. இறுதி வரைக்கும் வேறு உடைகளை உடுத்தியதே இல்லை!

★ 'சேவை என்ற பெயரில் மதமாற்றம் செய்தார்' என்பது இவர் மீது வைக்கப்படும் பரவலான குற்றச்சாட்டு. இது இந்தியாவில். 'கருக்கலைப்பு உலக சமாதானத்தை அழிக்கும் மிகப் பெரிய காரணி' என்று சொன்னவர் என இவர் மீது வைக்கப்படுகிறது விமர்சனம். இது உலக நாடுகளில்!

★ நோபல் பரிசு பெறுபவர்களுக்காகக் கொடுக்கப்படும் பாரம்பரிய விழா விருந்தை மறுத்த அன்னை, அதற்கு செலவழிக்கப்படும் தொகையான 1,92,000 டொலர்களை இந்தியாவில் உள்ள ஏழைகளுக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்!

★ 'சம்திங் ப்யூட்டிபுல் பார் காட்' என்ற படம் இவரின் புகழை உயர்த்தியது. 'மதர் தொஸா. டைம் பார் சேஞ்ச்' இவர் புகழை அசைத்துப் பார்த்த படம்!

★ தன்னைச் சார்ந்தோருக்கும், தன் அறக் கட்டளைகளில் இருப்போருக்கும், கிறிஸ்துவ மத குருமார்களுக்கும், இன்ன பிற நண்பர்களுக்கும், 66 ஆண்டுகாலமாகத் தான் எழுதிய கடிதங்களை அழித்துவிடச் சொன்னார். அதற்கு இவர் சொன்ன காரணம், 'மக்கள் இந்தக் கடிதங்களை அறிய வரும் பட்சத்தில், இயேசுவை விட என்னை மேலாக எண்ணிக்கொள்வார்கள்.' இவரின் மறைவுக்குப் பிறகு, இவர் எழுதிய கடிதங்கள் தொகுக்கப்பட்டு 'மதர் தெரசா - கம் ப மை லைட்' என்ற பெயரில் வெளிவந்தது!

★ அக்டோபர் 19, 2003 இல் இவருக்கு 'ஆசீர்வதிக்கப்பட்டவர்' என்ற பட்டம் வழங்கப் பட்டது. அவர் 'புனிதர்' பட்டம் பெற இரண்டாவது அற்புதம் ஒன்று நிகழ்த்தப் பெற வேண்டும்!

★ 'ஒவ்வொரு மனிதரிடத்திலும் நான் கடவுளைக் காண்கிறேன்; ஒரு தொழுநோயாளியைத் தொடும்போது இறைவனையே தொடுவதுபோல் உணர்கிறேன்' என்பது இவரின் புகழ் பெற்ற வாசகம்!

★ சகோதரி சுபாஷினி என்பவர் அன்னையின்




முதல் சிஷ்யை. அன்னைக்குப் பின் அறக்கட்டளைப் பணிகளை மேற்கொள்ள அன்னையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சகோதரி நிர்மலா!

★ ஒரு கூட்டத்தில், 'அன்னை தெரசாவுக்குப் பின் என்ன?' என்று ஒரு பெண்மணி கேட்க, அதற்கு அவர் தந்த பதில், 'தெரசாவுக்குப் பின் மிஷனரீஸ் ஒப் சாரிட்டி!'


காணி விற்பனைக்கு

யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 5 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.



மேலதிக விபரங்களுக்கு :- 0049 203 410 3458.

# ராசி-பலன்

## 05 - 09 - 2010 முதல் 11 - 09 - 2010



### அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

பிறருக்கு உதவும் குணம் கொண்ட மேஷ ராசி அன்பர்களே!

நண்பர்களின் உதவியோடு செய்ய வேண்டிய பணிகளைச் செய்து முடிக்க முற்படுவீர்கள். வெற்றிகளைப் பெறுவீர்கள். தென்திசையிலிருந்து வரும் கடிதம் ஒன்று உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகளின் விருப்பப்படி அவசர வேலை ஒன்றை உடனே செய்து முடிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். சுயதொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கக் கூடும். செலவுகள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகலாம். கூட்டுத்தொழில் சிறப்பாக நடைபெற்று, எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் தம்பதிகளின் ஒற்றுமை அதிகரிக்கும். சுபகாரியம் நடைபெற முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் நன்கு நடைபெற்று எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். புதிய பங்குகள் வாங்க வாய்ப்புகள் உண்டு.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்



### கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2

பிரதிபலன் பாராமல் நண்பர்களுக்கு உதவும் ரிஷப ராசி அன்பர்களே!

வளம் மிகுந்த வாழ்க்கை அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் திட்டமிட்டு செயல்படுவீர்கள். நீண்ட நாள் நண்பர் ஒருவரை சந்திப்பதன் மூலம் மகிழ்ச்சி ஏற்படலாம். தாய் வழி உறவில் சிறு விரிசல் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் இருந்த மந்தநிலை மாறி சுறுசுறுப்படைவர். எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் வந்து சேரும். பிரிந்து இருந்த குடும்பம் ஒன்று சேரும் நிலை ஏற்படும். சுயதொழில் சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி வரும். திட்டமிட்ட சுபகாரியங்கள் சிறப்பாக நடைபெறும். புதிய மாற்றம், பொருள் வளர்ச்சியும், புகழ்ச்சியும் வந்து சேரும். பங்குச்சந்தையில் முன்னேற்றமும் லாபமும் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9 அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்



### மிருக சீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்

முன்னெச்சரிக்கையுடன் செயல்படும் மிதுன ராசி அன்பர்களே!

சிக்கலான செயல்களையும், சிந்தனையுடன் செயல்பட்டுச் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். வடக்குத் திசையிலிருந்து வரும் தகவல் இனிமையான செய்தியைக் கொண்டு வரும். நீண்ட நாள் எதிர்பார்த்த ஓர் ஆன்மிகப் பெரியவரைச் சந்திக்கும் வாய்ப்பு உண்டாகும். உத்தியோகத்தில் நல்ல திருப்பம் வரும். நீண்ட காலம் எதிர்பார்த்த காரியம் ஒன்று எளிதாக நிறைவேறும். சுயதொழிலில் முன்னேற்றம் காணப்படும். பணவசதிகள் பக்கபலமாக இருக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் இருந்த சிக்கல்கள் தீரும். பிரபல நிறுவனத்தில் இருந்து அழைப்பும், பொருளும் வந்து உற்சாகம் அளிக்கும். பங்குச்சந்தை வியாபாரம் பலன் தரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 6,8,9 அதிர்ஷ்ட நிறம்: கருநீலம் அதிர்ஷ்டக்கிழமை: சனி




### புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

கண்ணியமான தோற்றம் கொண்ட கடக ராசி அன்பர்களே!

கடுமையான பணிகளையும் முயற்சியோடு செய்து முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போடுவீர்கள். தாமதங்களைக் கண்டு கலங்காமல் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். தள்ளிப் போய் வந்த பணவரவும் உங்களைத் தேடி வரும். சுயதொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த ஓய்வில்லாமல் பணிபுரிய வேண்டிய நிலை ஏற்படும். கூட்டுத்தொழில் செய்பவர்கள், வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பர். கொடுக்கல், வாங்கலில் இருந்து வந்த சிக்கல்கள் தீரும். குடும்பம் சிறுசிறு பிரச்சினைகளைச் சந்தித்தாகலாம். தடைநீங்கி சுபகாரியங்கள் நன்கு நடைபெறும். குல தெய்வ வழிபாடு செய்தால் குதூகலமான வாழ்க்கையைத் தேடிக் கொள்ளலாம். பங்குச்சந்தை வியாபாரம் நல்ல லாபம் தரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,8,9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்



### மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

எதையும் ஆராய்ந்து பார்க்கும் அறிவு பெற்ற சிம்ம ராசி அன்பர்களே!

முயற்சிகளில் சிறுசிறு தடங்கல்கள் இருந்தாலும், தீவிரமாக உழைப்பீர்கள். சில காரியங்களில் வெற்றி கிடைக்காவிட்டாலும், சோர்வு அடையாமல் அடுத்த காரியத்திற்குச் சென்று விடுவீர்கள். பழைய கடன் சிறு மனவருத்தங்களை உண்டாக்கலாம். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கலாம். சுயதொழிலில் உற்சாகம் காணப்படும். புதிய தொழிலாளர்களை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். கூட்டுத்தொழிலில் பணியாளர்களின் ஒத்துழைப்பால் நல்ல லாபம் பெறுவீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் சுமாரான லாபம் கொண்டு வரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,3,6 அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்




### உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

ஒருவரைப் பார்த்ததும் புரிந்து கொள்ளும் கன்னி ராசி அன்பர்களே!

நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் பல இருந்தாலும் சிறுசிறு தடைகள் ஏற்படும். பழைய நண்பர்கள் சரியான நேரத்திற்கு கைகொடுப்பார்கள். நினைத்தபடி பயணங்கள் இனிதாக அமையும். நீண்ட தூரப் பயணங்களைத் தள்ளி வைக்கலாம். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக இருக்க வேண்டும். வெளி விவகாரங்களை அலுவலகத்தில் பேசாமலும், வம்பு பேசுபவர்களுக்குப் பதில் அளிக்காமலும் இருப்பது அவசியம். சுயதொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். செலவுகள் ஏற்படும். கூட்டுத்தொழிலில் வியாபாரம் சுமாராக இருந்தாலும், எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். பணப்பொறுப்பில் உள்ளவர்கள் பணத்தைக் கையாளும்போது கவனமாக இருப்பது நல்லது. பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9 அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு



### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

எந்தச் செயலையும் சுலபமாக முடித்து வெற்றிபெறும் துலாம் ராசி அன்பர்களே!

கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்து, தடை தாமதங்களை உடைத்தெறிந்து வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போது கவனமாக இருக்க வேண்டும். ஆவணங்களைக் கையாளும்போது பொறுமை அவசியம். வாகனங்களால் பொருட்செலவு ஏற்பட வாய்ப்புண்டு. உத்தியோகஸ்தர்களின் வேலைப்பளு அதிகரிக்கும். பிறகு செய்யலாம் என்று தள்ளி வைத்த செயலை உடனடியாகச் செய்யும்படி நேரலாம். சக நண்பர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். சுயதொழில் செய்பவர்கள் பணிகளில் உற்சாகமாகச் செயல்படுவர். கூட்டுத்தொழிலில் வியாபாரம் பரபரப்பாக இருக்கும். லாபமும் சுமாராக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருப்பது அவசியம்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,6,9 அதிர்ஷ்ட நிறம்: நீலம் அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி



### விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

தெளிவான சிந்தனையோடு செயல்படும் விருச்சிக ராசி அன்பர்களே!

உழைப்பில் உற்சாகமாகப் பாடுபட்டு திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். விருந்தினர் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள பணத்தைக் கையாளும் போதும் கணக்குகளிலும் கவனமாக இருக்க வேண்டும். சுயதொழில் செய்பவர்கள் பணிகளில் கவனமாக இருத்தல். கூட்டுத்தொழில் செய்பவர்கள் போட்டியாளர்களின் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படும். குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகளும் வரக்கூடும். சுபகாரியங்கள் நடைபெற சிறு தடைகள் ஏற்படலாம். நீண்ட காலம் எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி பெண்களைத் தேடிவரும். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் அளவு லாபம் இருக்காது.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9 அதிர்ஷ்ட நிறம்: பச்சை அதிர்ஷ்டக்கிழமை: புதன்



### மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

கற்பனை வளமும் எழுத்தாற்றலும் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!

அவசியமாகச் செய்து முடிக்க வேண்டிய செயல்கள் பற்றிச் திட்டமிடுவீர்கள். பணவரவுகள் கைகளுக்குக் கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படும். நீண்ட காலமாக வேண்டிக்கொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் விருப்பப்படி முக்கிய காரியம் ஒன்றைச் செய்யும்படி நேரலாம். வேலைப்பளு அதிகரிக்கலாம். சுயதொழிலில் பொருள் வரவும், அதற்கேற்ற செலவும் உண்டாகும். கூட்டுத்தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் இருக்கலாம். கடன்களை வசூலிக்க முற்படுவீர்கள். பணப்பொறுப்பில் உள்ளவர்கள் பணிகளை அடிக்கடி கண்காணிப்பது அவசியம். குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டாலும். பங்குச்சந்தை வியாபாரத்தில் நண்பர்களின் ஆலோசனைகளால் நல்ல லாபம் உண்டாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,9 அதிர்ஷ்ட நிறம்: வெண்மை அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்




### உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

அன்பு செலுத்துபவர்களை ஆதரிக்கும் மகர ராசி அன்பர்களே!

காரியங்களைத் திட்டமிட்டு உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். வெற்றியைத் தேடும் நீங்கள், தடைகளைத் தகர்த்தெறியத் தயங்க மாட்டீர்கள். வழக்கு விசாரணைகள் உங்களுக்குச் சாதகமாக முடியும். நீண்ட நாட்களாக இருந்து வந்த கடன்தொகை வசூலாக வாய்ப்புண்டு. உத்தியோகஸ் தர்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேற மேலதிகாரிகளிடம் கோரிக்கை வைப்பீர்கள். சுயதொழில் சுறுசுறுப்பாக நடைபெறும். நவீன முறையில் பொருட்களைத் தயாரிக்கும் உங்கள் முயற்சிக்கு வரவேற்புக் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் சுமாராகவே இருக்கும். கூட்டாளிகளுக்குள் சிறு மனக்குழப்பம் ஏற்படலாம். குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகள் வந்து விலகும். சிலருக்கு பட்டமும் பதவியும் கிடைக்கும். பங்குச்சந்தையில் சுமாரான லாபம் உண்டாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9 அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு




### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

கருணை மனதோடு பழகும் கும்ப ராசி அன்பர்களே!

நண்பர்களும், உறவினர்களும் உங்கள் செயல்களுக்குப் பக்கபலமாக இருந்து உதவுவர். புதிய முயற்சிகளில் வெற்றியும், மனதிற்குச் சந்தோஷமும் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு எதிர்பார்த்த சம்பள உயர்வும், இடமாற்றமும் ஏற்படும். சிலருக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் தொகை கிடைக்கும். சுயதொழில் சுறுசுறுப்பாக நடைபெறும். பணப்புழக்கம் சரளமாகும். புதிய வாடிக்கையாளர் ஒருவர் உங்கள் தொழில் முன்னேற்றத்துக்கு உதவி செய்வார். குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகள் வந்து போகும். சுபகாரியங்கள் சிறு தடங்கலுக்குப் பின் நடைபெறும். பங்குச்சந்தையில் சுமாராக நடைபெற்றாலும், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,7,9 அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை அதிர்ஷ்டக்கிழமை: புதன்



### பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

தெளிவான எண்ணம் கொண்ட மீன ராசி அன்பர்களே!

பணம் சம்பந்தமாக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். இதுவரை பார்த்த வேலையை விட்டுவிட்டு வேறு தொழிலுக்குச் செல்லும் எண்ணம் வெற்றி பெறும். வீட்டில் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை ஆரம்பமாகும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். சிலர் சம்பள உயர்வுகள் பெற்று, தங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து வாழும் நிலையைப் பெறலாம். சுயதொழிலில் உற்சாகம் இருக்கும். கூட்டுத் தொழில் வியாபாரம் நன்கு நடைபெறும். தந்தைவழி உறவுகளில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிக்கு குடும்பத்துடன் சென்று கலந்து கொள்வீர்கள். புதிய ஆபரணங்கள் வாங்கவும் வாய்ப்புண்டு. பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,6,9 அதிர்ஷ்ட நிறம்: நீலம் அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி



# சூதாட்ட சர்ச்சையில் சிக்கியது பாகிஸ்தான்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து ஸ்கொட்லாந்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த 4 ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 74 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தது. இங்கிலாந்து அணிக்கு எதிராக அந்த அணி வீரர்கள் அதிக அளவில் அகலப் பந்துகளை (நோ போல்) வீசியது சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

இதனிடையே லண்டனில் பிடிபட்ட சூதாட்ட தரகர் பசீர் என்பவர் பாகிஸ்தான் வீரர்களுக்கு கோடிக்கணக்கில் பணம் கொடுத்து சூதாட்டத்தில் ஈடுபடுத்தியதாக வாக்கு மூலம் கொடுத்துள்ளார்.

சூதாட்டத்திற்கு பாகிஸ்தான் அணித் தலைவர் சல்மான் பட் மூளையாக செயற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சல்மான் பட்டிடம் கோடிக்கணக்கில் பணம் கொடுக்கப்பட்டதாகவும், அவர் மூலமாக கம்ரான் அக்மல், முகமது யாசிப், முகமது ஹமீது ஆகிய வீரர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். இதன் அடிப்படையிலேயே லோர்ட்ஸ் டெஸ்ட்டில் அதிக அளவு அகலப் பந்து (நோ போல்) வீசப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் வீரர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு சென்ற ஸ்கொட்லாந்து பொலிஸார் சல்மான் பட் உள்ளிட்ட வீரர்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

அணியின் மேலாளர் ஹமீதும் பொலிஸாரின் விசாரணையை உறுதிப்படுத்தியுள்ளார்.

விசாரணையின் முடிவில் சல்மான்பட், கம் ரான் அக்மல், முகமது யாசிப்,ஹமீது ஆகியோர் கைது செய்யப்படலாம் என்று தெரிகிறது.

# சிறந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர்



இன்றைய கிரிக்கெட் உலகில் ஒரு தொடக்க வீரராக ஒருநாள், டெஸ்ட், இருபது ஓவர் கிரிக்கெட் என்று ஆச்சரியப்படும் வகையில் சிறப்பாக விளையாடி வரும் மிகச்சிறந்த வீரர் சேவாக் ஒருவரே என்று அவுஸ்திரேலிய முன்னாள் தொடக்க வீரர் மத்தியூ ஹெய்டன் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில்:

"தொடக்க வீரர்களில் ஒரு சிலர் மட்டுமே சிறப்பாக ஆடி வருகிறார்கள். அதில் சேவாக்தான் முன்னணியில் இருக்கிறார். அதாவது கிரிக்கெட் உலகிலேயே சிறந்த தொடக்க வீரராக சேவாக் திகழ்கிறார்.

ஒவ்வொரு போட்டியிலுமே அவர் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார், டெஸ்ட், ஒரு நாள் போட்டி, 20 ஓவர் போட்டி என அனைத்திலுமே சிறப்பாக ஆடுகிறார். அதிலும் முதல் பந்திலேயே அவர் அதிரடியாக ஆடுவது ஆச்சரியமாக இருக்கிறது. தொடக்கத்தில் இருந்தே எந்தவித பதற்றமும் இல்லாமல் அவர் ஆடுவது இயற்கையிலேயே அவருக்கு அமைந்துள்ளது மிகப்பெரிய பலமாகும். அதிலும் அவர் கிரீஸ் எல்லைக்கு வெளியே வராமலே பந்தை விளாசுவது மிக சிறப்பானது. அவர் திறமைகளில் இதுவும் முக்கியமான ஒன்று. இது எல்லா வீரர்களாலும் முடியாது. போட்டி எந்த சூழ்நிலையில் இருந்தாலும் அவர் பந்தை எதிர்கொள்ள தயங்குவதே இல்லை. எந்த பந்தையும் அடித்து நொறுக்குவது அவருடைய தனி திறமையை வெளிப்படுத்துகிறது. டெஸ்ட் போட்டி இப்போதும் உயிர் வாழ்கிறது என்றால் சேவாக் போன்ற வீரர்கள்தான் இதற்கு காரணம்.

இந்திய அணியில் டெண்டுல்கர் முன்னணி வீரராக திகழ்வது போல சேவாக்கும் முன்னணி வீரராக இருக்கிறார். அடுத்ததாக சுரேஷ் ரெய்னாவும் இந்திய அணியில் சிறப்பாக ஜொலித்து வருகிறார். அவர் முதல் டெஸ்ட் போட்டியிலேயே சதம் அடித்தது சிறப்பான தொடக்கம் ஆகும்.

அவர் டெஸ்ட், ஒரு நாள் போட்டி, 20 ஓவர் போட்டி அனைத்துக்குமே பொருத்தமாக இருக்கிறார். அவர் சிறந்த சகலதுறை ஆட்டநாயகனாக வர வாய்ப்பு உள்ளது. அது மட்டும் அல்ல அவர் இந்திய ஒரு நாள் அணி தலைவராகவும் வர வாய்ப்பு இருக்கிறது. அதற்கான தகுதிகளும் அவரிடத்தில் உள்ளன.

என்று தனது கருத்தைக் கூறியுள்ளார் ஹெய்டன்.

# சானியா முன்னேற்றம்



யு.எஸ். ஓபன் கிராண்டஸ்லாம் டென்னிஸ் பிரதான ஒற்றையர் சுற்றுக்கு இந்தியாவின் சானியா மிர்சா தகுதி பெற்றார்.

கொலம்பியாவின் கேடாலினா கேஸ்டானோவை 6-1, 1-6, 6-3 என்ற செட்களில் போராடி வீழ்த்தினார் சானியா மிர்சா.

முதல் செட்டில் இருமுறை கேடாலினாவை முறியடித்தார் சானியா. ஆனால் கேடாலினா அபாரமாக விளையாடி இரண்டாவது செட்டைக் கைப்பற்றினார். 2005 இற்குப் பிறகு சானியா மிர்சா இப்போதுதான் தகுதிச் சுற்று போட்டிகளில் விளையாடி கிராண்ட் ஸ்லாமுக்குள் நுழைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



பாத்திரத்தில் ரத்தம்...

# இணையத்தால் ஏற்பட்ட விபரீதம்!

சூர்யாவுக்கு எல்லாமே இணையம் (இன்டர்நெட்)தான். நியூ டிஸைன் சுடிதாரில் ஆரம்பித்து, காய்கறிகள் வரை எல்லாவற்றையும் அலசித் தேடுவது இணைய தளங்கள் வாயிலாகவே. கணினியின் எதிரே இறுக்கமாக அமர்ந்தவள், கூகுளின் 'தேடல்' பகுதியில் அடித்த வாக்கியங்கள் 'தற்கொலை செய்யும் வழிகள்!'

சில நொடிகளில் கணினித் திரையில் தற்கொலை செய்து கொள்ளும் அத்தனை வழிமுறைகளும் விரிந்து பரவ, அவற்றை ஒவ்வொன்றாகக் குறிப்பெடுத்தாள் சூர்யா. சில மணி நேரங்களில் தன் அம்மா இந்திராணியுடன் இணைந்து அவற்றைச் செயல்படுத்தவும் செய்தாள். யார் இந்த சூர்யா?

திருச்சியில் நகைக் கடை நடத்தி வருபவர் பால்ராஜ். இவர் மனைவி இந்திராணி. இந்த தம்பதியரின் மூத்த மகள் நர்மதா. இரண்டாவது மகள் சூர்யா. நர்மதா, காதல் திருமணம் செய்து கொண்டவர். இதனால் பால்ராஜுக்கு கடுமையான மன வருத்தம். இந்த காதல் விவகாரம் தன் மனைவிக்கு முன்னமே தெரியும் என்பதை அறிந்ததும், அவரது மன உளைச்சல் இன்னும் அதிகமானது. இந்த நிலையில், கல்லூரிப் படிப்பை முடித்துவிட்ட இரண்டாவது மகள் சூர்யாவும் காதல் வயப்பட்டுவிட்டார் என்பதை அறிந்ததும் தவித்துப்போனார் பால்ராஜ். இதனால் வீட்டுக்குள் விரிசல் ஏற்பட்டது.

தொடர் பிரச்சினைகள் ஏற்பட்டதும், இந்திராணியும் சூர்யாவும் இரண்டு வருடங்களுக்கு முன்பு தனியே கோவை சாய்பாபா காலனி ஏரியாவுக்கு வந்து வாடகை வீட்டில் குடியேறினர். அம்மாவுக்கு அடிக்கடி உடல நலமில்லாமல் போகும். ஆகவே, சூர்யா வீட்டில் இருந்தே கணினியில் 'ஜொப் வேர்க' செய்து சம்பாதித்தார்.

இந்த நிலையில், கடந்த 19 ஆம் திகதி காலையில் சூர்யாவின் வீட்டுக்கு கூரியர் தபால் கொண்டுவந்தவர் அழைப்பு மணியை அழுத்தியபோது, அந்த வீட்டுக்குள் இருந்து கட்டடமே அதிரும் அளவுக்கு அபாய ஒலி கேட்டது. வீட்டுக்குள் ஆங்காங்கே தீப்பிடித்து எரிய ஆரம்பிக்க... கூடவே பெண்களின் கதறல் ஒலியும் கேட்டது. அக்கம்பக்கத்தினர் ஓடி வந்தனர். தீயணைப்பு அலுவலகத்துக்குத் தகவல் பறந்தது. மீட்புப் படை வீட்டுக்குள் நுழைந்தபோது அலங்கோலமாகக் கிடந்த சமையலறையில் ரத்தம் வழிய வழிய அம்மாவும் மகளும் துடித்தபடி கிடந்தனர்.

சாயிபாபா காலனி பொலிஸார், இருவரையும் மெல்ல விசாரித்தனர். வேதனையோடு அவர்கள் கூறிய சில விடயங்கள் பொலிஸையே புரட்டிப் போட்டன. சூர்யாவுக்கு சமீபத்தில் ஒரு வரன் பார்த்திருந்தார்கள். கூடிய சீக்கிரமே கல்யாணமாகி, நிம்மதியாக வாழலாம் என்று அந்தப் பெண் நினைத்திருந்தார். நோயாளியான தனக்குப் பிறகு, தன் மகள் வாழ்க்கை என்னாகுமோ என்று பயந்த இந்திராணிக்கும் இதனால் பெரும் மனநிறைவு. இந்த நேரத்தில், திடீர் என்று அந்த வரன் தட்டிப்போய்விட்டது. இடிந்துபோய் விரக்தியாக இருந்த சூர்யா, ஒரு கட்டத்தில் தற்கொலை செய்யலாமா என்று முடிவெடுத்தார். அம்மாவிடம் இதை சொல்லி இருக்கிறார். சூர்யாவுக்குப் பிறகு தனக்கு எந்தத் துணையும் இல்லை என்று இந்திராணியும் தற்கொலைக்குத் துணிந்திருக்கிறார்.

எப்படி தற்கொலை செய்யலாம் என்று அலசி... முதலில், கத்தியால், இரண்டு பேரும் தங்களுடைய இடது கை மணிக்கட்டின் நரம்புகளை அறுத்திருக்கிறார்கள். ரத்தம் பீய்ச்சியடித்து ஓட... பயந்துபோய் ஒரு பாத்திரத்தில் அதைப் பிடிச்சிருக்கிறார்கள். நேரமாக ஆக கடுமையான வலி மட்டுமே வந்திருக்குதே தவிர, உயிர் பிரியவில்லை.

கொஞ்ச நேரம் மயக்கமாகி இருந்திருக்கிறார்கள். பின்பு சுதாரித்து அடுத்த ஐடியாவை யோசித்து, காஸ் சிலிண்டரைத் திறந்து இருக்கிறார்கள். கிட்டத்தட்ட நாலு கிலோ அளவுக்கு காஸ் வெளியேற, மணம் மூச்சை முட்டினதும், நெருப்பைக் கொளுத்தி இருக்கிறார்கள். அப்பவும் இருவருக்கும் தீக்காயமாச்சே தவிர சாவைத் தொடவில்லை. இதுக்குள்ளே விடயம் வெளியே தெரிந்துவிட்டது.

கோவை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. சாவை வலிய சந்திக்கச் சென்று தொடர்ந்து தோற்ற இருவரில் இந்திராணியின் உயிரை மட்டும் மருத்துவர்களால் காப்பாற்ற முடியவில்லை. அவர் உயிர் மறுநாள் பிரிந்துவிட... சூர்யாவுக்கு சிகிச்சை தொடர்கிறது. விடயத்தைக் கேள்விப்பட்டு வந்த அப்பா பால்ராஜ், தாள முடியாத வருத்தத்தில் தலை தாழ்த்திக் கொண்டார். இதற்கிடையில், தான் இப்படி ஒரு முடிவை எடுக்கக் காரணமானவர்கள் எனக் கூறி சுமார் 20 பேரின் பெயர்களைப் பட்டியலிட்டு இருக்கிறாராம் சூர்யா. பட்டியலில் உள்ளோரை வளைத்து விசாரிக்கத் தொடங்கி இருக்கிறது பொலிஸ்.

சாவை நோக்கி இவ்வளவு வெறித்தனமாக தொடர் நடை போடும் குணம் பெண்களுக்கு எப்படி வருகிறது?

மன நல ஆலோசகர் அசோக் கூறுகையில், "சாவைத் தேடி ஓடிய இந்த இரண்டு பெண்களும், வாழ்க்கையில் செய்த மிகப் பெரிய தவறு, தங்களுக்கு என்று ஒரு குறுகிய வட்டத்தை வரைந்து, அதில் இறுக்கமாக இருந்ததுதான். எப்பவுமே மனசை லேசாக வைத்திருக்கப் பழகுங்கள். பிரச்சினை இல்லாத உயிரினம் என உலகத்துல எதுவுமே இல்லை. மனக் குறைகளையும், மனத் தாங்கல்களையும் வீட்டில் உள்ளவர்களிடமும், நண்பர்களிடமும் பகிர்ந்து கொள்ளப் பழகுங்கள். கவலைகளை வெளிப்படுத்தாமல் உள்ளுக்குள் அடக்கி வைத்திருந்தால், ஒரு நாள் திடீர் என்று இப்படித்தான் வெடித்துச் சிதறும்!" என்றார் பொறுப்போடு.

# "இந்த உலகம் ஒரு மலர்ப்படுக்கையல்ல, யதார்த்த உலகில் முரண்பாடுகளும் நெருக்கடிகளும் தவிர்க்க முடியாதவை!"

நெருக்கடிகள் மனிதர்களினாலேயோ அல்லது விபத்துக்கள் போன்ற இயற்கையான திடீர் நிகழ்வுகளாலேயோ ஏற்படலாம்.

முரண்பாடுகளும், நெருக்கடிகளும் பெரும்பாலும் இணைந்தே இருக்கும். பொதுவாக இவை எதிர்மறை சக்தியாக வும் எதிர்மறைக் கொள்கையாகவும் பொருள்படும். எவ்வாறாயினும் இவற்றில் பெரும்பாலானவற்றை முரண்பாடுகள், நெருக்கடிகள் என்பவற்றின் தன்மையை பரிசீலனை செய்வதன் மூலமும் - சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகள் மூலமும் - உடன்பாடான சக்தியாகவும் சந்தர்ப்பங்களாகவும் மாற்றிக்கொள்ளமுடியும்.

இத்தகைய முரண்பாடுகளும் நெருக்கடிகளும் எமக்குக் கூறுவது என்னவெனில், இந்த உலகமானது ஓர் உன்னதமான உலகமல்ல - நிச்சயமாக அது ஒரு மலர்ப்படுக்கையுமல்ல என்பதே ஆகும்.

யதார்த்தமான உலகில் முரண்பாடுகளும் நெருக்கடிகளும் தவிர்க்க முடியாதவை. முரண்பாடுகளுக்குக் காரணம், சிலர் அதிகாரமுள்ளோர், சிலர் அதிகாரமற்றோர், சிலர் வளமிக்கோர், சிலர் வளமற்றோர், சிலர் தொழிலுள்ளோர், சிலர் தொழிலற்றோர், சிலர் நிலமுள்ளோர்; ஏனையோர் நிலமற்றோர் என்ற வகையிலான ஏற்றத்தாழ்வுகளே!

பாதுகாப்பின்மை, சந்தேகம், சமத்துவமின்மை, அநீதி, சகிப்புத்தன்மையின்மை, வெறுப்பு, மதவெறி என்பன சமூக ரீதியிலான முரண்பாடுகளும் நெருக்கடிகளும் ஏற்படக் காரணமானவற்றுள் சிலவாகும். சுருக்கமாகக் கூறின் முரண்பாடுகளும் நெருக்கடிகளும் எதிர்மறையான உணர்வுகளாலும் எதிர்மறையான சக்திகளாலுமே ஏற்படுகின்றன.

சில வேளைகளில் இத்தகைய முரண்பாடுகள் இயற்கை இடர்களான சுனாமி, சூறாவளி, வெள்ளம், வரட்சி, புவிநடுக்கம், எரிமலைச் சீற்றம், நோய்கள் போன்றவற்றால் மேலும் முனைப்படையச் செய்யப்படுகின்றன.

இயற்கைக் கூறுகளால் ஏற்படுத்தப்படும் நெருக்கடிகளை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. நெருக்கடிகளுக்கும் பேரழிவுக்குமான முகாமைத்துவம் மற்றும் தயார் நிலையில் இருத்தல் என்பவை வேறு விடயங்கள் என்பதுடன் இவை நிறுவன நெருக்கடிகளுக்கு உட்பட்டவையல்ல. எனினும், முரண்பாடுகளும் நெருக்கடிகளும் அதில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டுமல்ல மனித இனத்திற்கே அழிவுதரக்கூடியவை என்பதை உணர்ந்திருத்தல் அவசியம்.

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழக்கற்றுக்கொள்ள வேண்டும். இது ஒரு கடுமையான சவாலாக இருப்பினும் மனித சமூகம் இந்தச் சவாலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கும், எப்படி ஒத்து வாழ்வது என்பதற்குமான வழிவகைகளை அறிதல் அவசியமாகும். எந்த நாட்டினராக இருந்தபோதும் முரண்பாட்டுத் தீர்வு முக்கியமான தொன்றாகும்.

முரண்பாடுகளையும் நெருக்கடிகளையும் தீர்ப்பதற்கு எந்த விதமான மாயக்கோலும் இல்லை என்பதையும் நாம் அறிவோம்.

அநேகமான முரண்பாடுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் நடைமுறையில் தீர்வுகள் தென்படுவதாக இல்லை. இத்தகையதொரு நிலை நம்மை அநாதரவான நிலைக்கு கொண்டு சென்று விடுகின்றது. இருப்பினும் நாம் நம்பிக்கையற்றுப் போய்விடில் இவ்வுலகம் வாழமுடியாத நரகமாகிவிடும். இதனாலேயே நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுதல் அவசியமாகின்றது. எத்தனையோ விரும்பத்தகாத விடயங்கள் இவ்வுலகில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அவற்றுக்கு அரசாங்கங்களும் சமூகங்களும் பேச்சுவார்த்தைகளின் மூலமும், சாதகமான மனோபாவத்தின் மூலமும் தீர்வு காண முயன்றுகொண்டுதான் இருக்கின்றன.

ஆயுத முரண்பாடுகளும் இராணுவத் தீர்வுத் தெரிவுகளும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதும், அவை பரந்த சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தரமாட்டா என்பதும் எமக்குத் தெரிந்ததே.

மனிதர்கள் முரண்பாடுகளுக்கும், நெருக்கடிகளுக்குமான தீர்வை அறிவுபூர்வமாக தேடவேண்டுமே தவிர பலப்பிரயோகத்தின் மூலம் அல்ல.

முரண்பாடுகள் ஏனைய காரணங்களால் மட்டுமன்றி மனிதனால் ஏற்படுத்தப்படும் காரணங்களாகிய கௌரவம், அதிகாரம் என்பவற்றின் இழப்பு, தெளிவற்ற பாத்திரப்பங்கு, குறிக்கோள்கள் என்பன வற்றாலும் ஏற்படுகின்றன. குறைவான சுய மதிப்பாலும், எதிர்பார்ப்புக்களை அடைய முடியாதிருத்தல், பாரபட்சம், பிழையான கணிப்புத் தவறான தீர்மானம் என்பனவற்றாலும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

வளங்கள் குறைவாக இருக்கின்றன என மக்கள் உணரும் போதும், அவற்றிக்காகப் போட்டியிடும்போதும் முரண்பாடுகள் ஏற்படும். கலாசார மற்றும் விழுமிய வேறுபாடுகளாலும் முரண்பாடுகள் உருவாகும். அதிகாரப் போராட்டம் உட்பட அநீதி, பேராசை, தான் என்ற மமதை என்பவற்றாலும் ஏற்படலாம். நிதி, பதவி, சொத்து என்பனவற்றைச் சரியாக முகாமைத்துவம் செய்யாவிடிலும் முரண்பாடுகள் தலைதூக்கும். போதிய தொடர்பாடல், நிறுவன முகாமைத்துவம் ஆகியவை இன்மையாலும், செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்ட தோல்விகளாலும் நினைப்பதற்கும் செயலுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளாலும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. ✱

- ஏ.எச்.ஏ.ஹுஸைன் -

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள்,
சந்தேகங்கள் தொடர்பான
கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்
உளநல ஆலோசகர்

ஏ.எச்.ஏ.ஹுஸைன்.

கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:

**"A.H.A. HUSSEIN**
**KAYAR ROAD,**
**ERAVUR.**

ஈமெயில்:
abdulhussein525@gmail.com

# மூத்தவள் இருக்க இளையவளுக்குத் திருமணம்! குடும்பத்தில் பிரச்சினை ஏற்படுத்துமா?

கேள்வி :

நான் உயர்தரம் எழுதிவிட்டுப் பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மாணவி. எனது பிரச்சினை என்னவென்றால், நீண்ட காலமாக எனது வகுப்பு மாணவன் ஒருத்தர் என்னைக் காதலிக்கின்றார். குறைவில்லாமல் அன்பு செலுத்துகின்றார். இவற்றில் எந்தக்குறையையும் நான் காணவில்லை. அதேவேளை எனது தோழியான ஒருத்தியின் மீதும் அவர் நட்பாக இருக்கிறார். அவளுக்கும் அவர் போதியளவு உதவுகிறார். என்னைப் போலவே அவளும் அவரது வகுப்பு மாணவிதான். என் காதலன் என்தோழி மீதும் அன்பாய் இருப்பது சில நேரங்களில் எனக்கு மனச் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. இந்த நிலைமையில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

பதில் :

பிரச்சினை உங்கள் நண்பருடையதோ, தோழியினுடையதோ அல்ல என்பது உங்கள் நீண்ட கடிதத்தைப் பார்க்கும்போது புரிகின்றது. உங்களை அவர் விரும்புவது அவளுக்கு நன்றாகத் தெரியும். அதேவேளை நீங்களும் அவரைக் காதலிக்கிறீர்கள் என்பதும் தெளிவாகத் தெரியும்.

உங்களுக்குள் எழுந்துள்ள சந்தேகப் பார்வையினால் உண்டாகும் வெறுப்பை உங்கள் தோழி மீது பிரயோகிக்கமுற்பட வேண்டாம். ஏனென்றால், இந்த இடத்தில் தோழி மூன்றாம் பட்சத்தில்தான் இருக்கிறாள். நீங்கள் தோழி மீது வெறுப்புக்காட்டி - சந்தேகப்பட்டு மேலும் மேலும் பிரச்சினைகளை வளர்க்காமல் இருப்பதுதான் நல்லது. இந்த விடயங்களை முதலில் உங்கள் காதலனுடன் மனம்விட்டுப் பேசுங்கள்.

கடந்தகால வரலாறுகளைப் புரட்டிப் போட்டு மீளப் புதுப்பித்து, நிகழ்காலத்தையும் பழுதாக்கி அதன் பின்னர் எதிர்காலத்தையும் நாசமாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எட்டாம் தரத்திலிருந்து வகுப்புத் தோழனாகவும், இப்பொழுது உங்களது காதலனாகவும் நட்புறவை வளர்த்துக் கொண்ட நீங்கள் இந்த விடயத்தையும் தயக்கமின்றி மனம்விட்டுப் பேசித்தான் ஆக வேண்டும்.

அன்பை அன்பினால்தான் வெல்ல வேண்டுமே தவிர அதிகாரத்தாலோ, அகங்காரத்தாலோ அல்லது வெறுப்பினாலோ அல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.



கேள்வி :

மழைக்காலம் ஆரம்பிக்கப் போகிறது. இந்த நிலையில் முகாம்களில் உள்ள மக்கள் எதிர்கொள்ளப்போகும் துயரங்களை எப்படிச் சமாளிக்கலாம்? இதனை மானசீக உணர்வுடன் எப்படிப் பார்க்கலாம்?

பதில் :

இலங்கை மக்களின் கதியற்ற அகதி வாழ்க்கை தொடங்கியது இன்று நேற்று அல்ல. இந்தியாவிலுள்ள எமது நாட்டவர்கள் அகதி என்ற பட்டத்தோடு கடந்த முப்பது வருடங்களாகக் காலம் கழிக்கிறார்கள்.

வடபகுதியிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் அகதிகள் கடந்த 20 வருடங்களாக நாட்டில் நாலாபுறங்களிலும் அலைக்கழிகிறார்கள்.

திருகோணமலை - சம்பூர் அகதிகள் இனிமேல் தமது சொந்த இடத்திற்குத் திரும்புவதற்கான எந்த ஒரு துளி நம்பிக்கையும் இல்லாமல் அகதி முகாம்களுக்குள் முடக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த அகதிகள் பட்டியலில் இப்போது கடந்த ஒரு வருடமாக வன்னி மக்களும் சேர்ந்திருக்கிறார்கள்.

அகதி முகாம்களிலேயே பிறந்து வளர்ந்து அங்கேயே திருமணம் முடித்து அதே அகதி முகாம்களிலேயே குடித்தனம் நடத்துபவர்களுக்கு இப்போது முப்பது வயதாகிறது. எனவே, கிட்டத்தட்ட முப்பது வருட மாரிமழைக்காலங்களை இவர்கள் அகதி முகாம்களிலேயே சேறு, சகதியுடன் கழித்திருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு இத்தகைய வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்ட அகதி மக்களோடு சேர்ந்துதான் தீர்வு காண வேண்டும்.

கேள்வி :

நான் வீட்டில் மூன்றாவது இளைய பெண் பிள்ளை. எனக்கு வயது 26. மூத்த அக்காவுக்கு முப்பது வயது. என்னை ஒருவர் நேசிக்கிறார். அவரது வீட்டாருக்கும் முழுச் சம்மதம். எங்கள் வீட்டாருக்கு, முழு விருப்பம். என்ன பிரச்சினை என்றால், எனது அக்காமார் இருவரும் இருக்க நான் இளையவள் எப்படி முன்கூட்டியே திருமணபந்தத்தில் நுழைவது. சமூக ரீதியில் இதனை வேறு மாதிரியான கண்ணோட்டத்தில் பார்ப்பார்களே! இந்த நிலைமையால் நான் பெரிதும் மனக்கவலையில் உள்ளேன். எனக்கு ஒரு வழி சொல்லுங்களேன்!

பதில் :

திருமணம் என்று வந்தாலே அதில் சமூக, கலாசாரம், பாரம்பரிய விழுமியங்கள் என்று பல விடயங்கள் செல்வாக்குச் செலுத்தும். எனினும், இவற்றையும் மீறி தற்போதைய இன்றைய யுகத்தில் பல விடயங்கள் நடந்தேறுகின்றன.

மனப்பொருத்தம் என்று வரும் போது மணவாழ்க்கையை முன்னெடுக்க வேண்டியதுதான். இதிலே சமுதாயத்திலுள்ள பாதகமான, யதார்த்தமில்லாத வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. சமுதாயம் கெட்டது நடந்தால் மட்டும் தூற்றும் என்றில்லை. நல்லது நடந்தாலும் தம் விருப்பப்படி வியாக்கியானம் செய்து கொண்டு செல்லும் ஒரு கூட்டம் இருக்கிறது.

மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்காத அதேவேளை நன்மை தரக்கூடிய எந்த விடயத்துக்கும் சமுதாய வழக்கங்களை உடைத்துக் கொண்டு போவதில் பாதிப்பெதுவுமில்லை.

இரு வீட்டாரும் நடைமுறை விடயங்களை நல்ல முறையில் கலந்துபேசி நல்ல காரியத்துக்காக முடிவெடுங்கள். வாழ்த்துக்கள். ✱



# பிரசவத்திற்கு பின் பராமரிப்பு தேவை

### மார்பகங்கள்

பெண்களின் மார்பகங்கள் சாதாரணமாகவே பிரசவத்திற்குப் பின் சற்றுத் தொய்வாகிவிடும். மேலும் நீண்டகால நோய்களின் காரணமாகவும் சில பெண்களின் மார்பகம் சரியத் தொடங்கும். கர்ப்ப காலத்திலும், பிரசவத்திற்கு பின்னர் குழந்தைக்கு பாலூட்டும் காலங்களிலும் மார்பகங்கள் அளவில் பெருக்கும். ஒழுங்காக வராத மாதவிடாயும் மார்பகங்களைச் சரியச் செய்வதுண்டு. முலைகள் சரிய ஆரம்பித்தவுடன், மேலே உள்ள தோல் நீட்சி அடையும். ஓர் அளவுக்கு மேலாக நீண்டுபோன தசை நார்கள் தங்கள் சுருங்கி விரியும் தன்மையை இழக்கின்றன. இதனால் மார்பகங்கள் சரிந்து தொங்கி அழகற்றுப் போய்விடுகின்றன. மேலும் தாங்கிப் பிடிக்கும் தசைநார்கள் மார்பகங்களின் பாரத்தை தாங்கமுடியாமல் கிழிந்து போகும்போது, தோலின் மேற்பரப்பில் சிவப்பு நிறத்தில் புள்ளிகள் தோன்றும்.

குழந்தைக்கு பாலூட்டுவதை நிறுத்தியதும் பெண்களின் மார்பகங்கள் பழைய நிலைக்குத் திரும்பும். ஆனால் இது எல்லாப் பெண்களுக்கும் ஒரே மாதிரியாக நடப்பதில்லை. வயது, போஷாக்கு, பரம்பரை ஆகியவற்றைப் பொறுத்தே இவை அமையும். பல பெண்களுக்கு பிரசவம் மற்றும் குழந்தைக்குப் பாலூட்டுவது ஆகியவற்றுக்குப் பின்னர் ஏறக்குறைய பழைய கவர்ச்சியும், பொலிவும் கிடைக்கிறது. ஆனால் சில பெண்களின் கவனக் குறைவினால் முலைகள் பழைய பொலிவை, கவர்ச்சியை அடையாமல் சரிந்து அழகற்ற நிலையில் நின்றுவிடுவதும் உண்டு.

பிரசவ காலத்தில் மார்பகம் சரியாமல் தடுக்க விரும்பும் பெண்கள் நல்ல தரமான பிராக்களை வாங்கி அணிந்து மார்பகங்களைப் பராமரிக்கவேண்டும். பகலும், இரவும் அவர்கள் பிராக்களை அணிந்திருப்பது அவசியம். அதேபோல நேரம் கிடைக்கின்றபோது தினமும் பத்து நிமிடங்களை உடற்பயிற்சி செய்வதற்கு ஒதுக்கி மார்பகங்கள் சரியாமல் தடுக்க வேண்டும்.

**சத்தான உணவுகள்**

கர்ப்ப காலத்திலும், நாள்பட்ட நோயினாலும் பெண்களின் மார்பகங்கள் சரியத் தொடங்கும்போது அவர்களுக்கு சத்தான உணவு தேவைப்படும். புரதச்சத்து, கொழுப்பு, விட்டமின்கள், கல்சியம், மாச்சத்து மற்றும் தாது உப்புக்கள் ஆகியவை சரியான அளவில் அவர்களது உணவில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். குழந்தை பிறந்த பின்னர் பெண்களின் முலைகளுக்கு பிரத்தியேகமான பராமரிப்பு அவசியம். இந்த நேரத்தில் உடற்பயிற்சிகளை மருத்துவர்கள் பரிந்துரை செய்வதில்லை. எனவே மிக எளிதான உடற்பயிற்சிகளை அவர்கள் மேற்கொள்ளலாம்.

இரண்டு கைகளையும் மார்பிற்கு நடுவே குவித்துக் கொண்டு நமஸ்காரம் செய்வதைப்போல நன்றாக மூச்சை இழுத்து சிறிது நேரம் நிறுத்தி அதன்பிறகு வெளியே விடவேண்டும். இவ்வாறு செய்வதால் மார்பகளின் தசைநார்கள் வலிமை பெறும் சில உடற்பயிற்சிகளைத் தெரிந்துகொள்வோம்.

**பயிற்சி : 1**

பெண்களே உங்களுடைய பிறப்பு உறுப்பை மூன்று நொடிப்பொழுது இறுக்கிக்கொள்ளுங்கள். பின்னர் விட்டு விடுங்கள். மறுபடியும் இறுக்குங்கள். பின்னர் விட்டு விடுங்கள். கால்களை அசைக்காமல் தசைகளின் இயக்கத்தினால் மட்டுமே இதைச் செய்யவேண்டும். இவ்வாறு மூன்று முதல் ஆறு நொடிகளுக்கு இந்தப் பயிற்சியை செய்யுங்கள். ஒரு நாளைக்கு காலை, மாலை, இரவு ஆகிய பொழுதுகளில் ஐம்பது முதல் அறுபது தடவைகள் இந்தப் பயிற்சியை செய்யவேண்டும். இந்த உடற்பயிற்சியின் காரணமாக இளகி, தொய்ந்துபோன தசைநார்கள் வலுப்பெறும். உடல் பழைய நிலைக்கு விரைவில் திரும்பும்.

**பயிற்சி : 2**

படுக்கையில் வசதியாக படுத்துக் கொள்ளுங்கள். இரண்டு கால்களையும் நீட்டி ஒன்றுசேர வைத்துக் கொள்ளுங்கள். இப்போது பாதங்களை பின்னுக்கு நகர்த்துங்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு பாதங்களை பின்னுக்கு நகர்த்திய பின்னர் பழைய நிலைக்குக் கொண்டு வாருங்கள். பின்னர் பாதத்தின் முன்பகுதியை வளைத்து விரல்களினால் படுக்கையைத்தொட முயற்சி செய்யுங்கள். இதுபோல எட்டு முதல் பத்து தடவைகள் செய்யுங்கள். அதன் பின்னர் பாதங்களை கடிகார சுழற்சியாக பலமுறை சுற்றுங்கள்.

**பயிற்சி : 3**

படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொள்ளுங்கள். கால்களை மடக்கி முட்டியை உயர வைத்து, பாதங்களை படுக்கையில் நன்றாக ஊன்றிக் கொள்ளுங்கள். மூச்சை நன்றாக இழுத்து வயிற்றை உப்பச் செய்யுங்கள். பின்னர் மெதுவாக மூச்சை வெளியிட்டு வயிற்றை இயல்பு நிலைக்குக் கொண்டு வாருங்கள்.

**பயிற்சி : 4**

மேற்கூறியபடியே படுத்துக் கொள்ளுங்கள். உள்ளங்கால்களை படுக்கையில் நன்றாக அழுத்திப் பதிய வையுங்கள். இதன் காரணமாக படுக்கையில் முதுகு அழுந்தும். அதன் வளைவு நீங்கி கிடைமட்டமாக இருக்கும். ஒன்று முதல் பத்து எண்ணும் வரையில் இந்த நிலையிலேயே உடலை வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் இயல்பு நிலைக்கு வாருங்கள். மேலே சொன்ன இந்த நான்கு வகையான பயிற்சிகளையும் பிரசவித்த மறுநாளில் இருந்து செய்யலாம்.

**பயிற்சி : 5**

மல்லாந்து படுத்து முட்டியை உயரே தூக்கி உள்ளங்கால்கள் தரையில் ஊன்றி இருக்குமாறு செய்யுங்கள். வயிற்றுத் தசைகளை இறுக்கி, வலது கையை உயரே தூக்கி உடலுக்குக் குறுக்கே கொண்டு வந்து மறுபுறத்திலுள்ள தரையைத் தொடுவதற்கு முயற்சி செய்யுங்கள். பின்னர் கையை பழைய நிலைக்கு கொண்டு வந்து தரையில் வைத்துக்கொள்ளுங்கள். இதன் பின்னர் இடதுகையை மேலே தூக்கி மேற்சொன்ன பயிற்சியை செய்யுங்கள். இவ்வாறு ஐந்து முதல் ஏழுமுறை செய்யுங்கள். இதனால் மார்பகங்கள் வலிமை பெறும்.

**பயிற்சி : 6**

தரையில் மல்லாந்து படுத்து, கைகளை ஒன்றின் மீது ஒன்றாக மார்பின் மீது வைத்துக்கொள்ளுங்கள். பாதங்களை மேலே தூக்கி எதிரே உயரமாக உள்ள நாற்காலி அல்லது சோபாவின் மீது வைத்துக் கொள்ளுங்கள். கால்களை உறுதியாகப் பதிக்கும்போது உடலின் பின்பகுதி இறுக்கம் அடைவதை உணரலாம். இவ்வாறு பலமுறை செய்யுங்கள். இந்தப் பயிற்சிகளை பிரசவித்த இரண்டு வாரங்களுக்குப் பின்னர் செய்யத் தொடங்குங்கள்.

**உடற்பயிற்சியின் அவசியம்**

பெண்கள் குழந்தை பெற்ற பின்னர் அவர்களது உடல் வடிவத்தையும், அழகையும் இழந்துவிடுகிறது. முன்பு இருந்த உடல் அழகை அவர்கள் திரும்பப்பெற வேண்டுமானால் சில உடற்பயிற்சிகள் அவசியம் தேவை. இந்தப் பயிற்சிகளின் மூலமாக உடல்தசைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வரமுடியும்.

குழந்தை பெற்றெடுத்த பெண்கள் வயிறு, இடுப்பு ஆகிய பகுதிகளுக்கு உடற்பயிற்சி செய்தல் அவசியம். மேலும் குழந்தை பிறந்த காரணத்தினால் அவர்களது பிறப்பு உறுப்பில் உள்ள தசைகள் தளர்வடைந்திருக்கும். அவற்றை இறுகச் செய்யவும் உடற்பயிற்சி தேவைப்படும். முறையான உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமாக பெண்கள் பிறப்பு உறுப்பில் உள்ள தசைகளை புதுப்பித்துக் கொள்ளவும், வலிமையாக்கிக் கொள்ளவும் முடியும்.

குழந்தை பிறந்த சிலநாட்களில் மேற்சொன்ன உறுப்புக்களில் வலி இருக்கலாம். அதைப் பொருட்படுத்தாமல் எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அறுவை சிகிச்சை மூலமாக குழந்தை பெற்ற பெண்கள், குறைந்தது ஆறுமாத காலத்திற்கு எந்தவிதமான உடற்பயிற்சியிலும் ஈடுபடாமல் இருக்க வேண்டும். இயல்பான முறையில் சுகப்பிரசவமான பெண்கள் மட்டுமே உடற்பயிற்சி செய்யலாம்.

**யோகாசனம் செய்யுங்கள்**

மார்பகத் தசைகள் உறுதி பெறுவதற்கும், மார்பகங்கள் சரிவதை தடுக்கவும் சில யோகாசனப் பயிற்சிகள் பெரிதும் உதவும். அவைகளைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

**கோமுகாசனம்: 1**

இந்த ஆசனம் தோள் மற்றும் மார்புப் பகுதிகளை வலுவடையச் செய்யும். மார்பகம் சரிவதை குறைக்கும். மார்பகம் உறுதி பெறவும், எடுப்பான தோற்றம் பெறவும் உதவும்.

**காகாசனம்: 2**

இந்த ஆசனத்தைச் செய்வதால் முதுகுத் தண்டு நேராக அமையும். தேவையற்ற வளைவுகள் அகலும், கைகள், தோள் ஆகியவற்றின் தசைகள் வலுவடையும், மார்பகங்கள் உறுதியாகும்.

காக்கை உட்கார்ந்திருப்பதைப்போன்ற நிலை காசனம் எனப்படும். கால்களுக்கு இடையில் கைகளை வைத்துக்கொண்டு குத்துக்காலிட்டு அமரவும். உள்ளங்கால் பகுதி உயர்ந்திருக்கட்டும். உள்ளங்கைகளை சமநிலையில் முன்புறத் தரைமீது வைக்கவும். முடிந்தவரையில் கைகளையும் தோள்களையும் வெளியே நீட்டிக்கொள்ளவும். இப்போது விரல்களைக் காக்கையின் வளைந்த நகங்களைப்போல வைத்துக் கொள்ளவும். பின்னர் உடம்பைக் கால் விரல்களின் மீது உயர்த்த, கீழே கைகளில் அழுத்தம் ஏற்படும். முப்பது வினாடி முதல் ஒரு நிமிடம் வரையில் அப்படியே இருக்கவும். இந்தப் பயிற்சியை வெறும் வயிற்றில் செய்யவும். இவ்வாறு மூன்று முதல் நான்கு முறை ஒரே மூச்சில் செய்யவும்.

**தோலாசனம்: 3**

வடமொழியில் ஊஞ்சலை தோல் என்பார்கள். இந்த ஆசனத்தை செய்வதால் கைகளுக்கு இழுவைத்தன்மை அதிகமாகும். உறுதியும், வலிமையும் கிடைக்கும். மார்பகங்கள் சுருங்கிப் போகாமலும், தொய்வடையாமலும் காப்பாற்றப்படும். எடுப்பான தோற்றம் ஏற்படும். ★



# 40 வயதானாலும் பரவாயில்லை...

*40* வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு

பிரா என்ன மாதிரி இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்பவர்களுக்கு, ஓர் ஆச்சரியம் இருக்கிறது இந்த விடயத்தில். பெண்களுக்கு இந்த வயதுகளில் மார்பகங்கள் பெருத்தும், தளர்ந்து போயும் இருக்கும். இந்த வயதில் இந்தப் பிரச்சினையை சரிசெய்யும் வகையில் மார்பகங்களை உறுத்தாமல் மிருதுவாக தாங்கிப் பிடிப்பதற்கென்றே வடிவமைக்கப்பட்டிருக்கும் பிராக்களின் அணிவரிசை இதோ!

''காட்டன், சாட்டின், லைக்ரா, ஸ்பன்டெக்ஸ்'' என்று பல்வேறு 'மெத்தென்ற' துணிகளில் வரும் இந்தப் பிராக்களின் விலைகள் அதிகம்.

பெருத்த, சற்று தளர்ந்த மார்பகங்களைத் தாங்கக்கூடிய அளவுக்கு திக் ஸ்டிராப், கீழே பட்டையாக ஒரு பட்டியும் இருப்பது இதன் ஸ்பெஷல். 'ஜிம்'முக்குச் செல்லும் பெண்களுக்கான முழு 'கவரேஜ்' மற்றும் இரண்டு மடங்கு 'சப்போர்ட்' தரும் பிரா. தளர்ந்த மார்பகங்களுக்கு 'சப்போர்ட்' கொடுக்க கீழே பட்டிக்கு பதில் 'அண்டர் வயர்' பிரா இது.

'அண்டர் வயர்' பிடிக்காதவர்களுக்கான பிரா இது. ஆனால் 'அண்டர் வயர்' பிராவைப் போலவே பெரிய மார்பகங்களுக்கு நல்ல 'சப்போர்ட்' கொடுக்கும். பிராவின் நடுவில் தையல் இருக்காது. மேலும், கண்ணை உறுத்தாத அதே நேரம் பெருத்த மார்பகத்தையும் தாங்கக் கூடியது.

இது 'என்சர்கிள்' பிரா. 'கப்'பின் அடியில் இருந்து ஸ்டிராப் வரை வரிசையாக போடப்பட்டிருக்கும் தையல்கள், தளர்ந்து கொண்டிருக்கும் மார்பகங்களை நன்றாக தாங்கிப் பிடித்துக் கொள்ளும். மார்பகத்தைத் தாங்கிப் பிடிக்கும் அண்டர் வயர் இல்லாதபோதும், அதே வேலையை இந்தத் தையல்கள் செய்து விடுவதால் இதன் பெயர் வயர்லெஸ் அண்டர் வயர் பிரா. தளர்ந்துகொண்டிருக்கும் மார்பகங்களைத் தாங்கிப் பிடிக்கும் அண்டர் வயர் மற்றும் திக் பட்டி உள்ள பிரா.

பெண்களுக்கு 40வயதுகளில் மார்பகங்கள் தளர்வது போலவே பின்புறமும், தொடையும் வயிறும் பெருக்க ஆரம்பிக்கும். இது பெண்களின் ஷேப்பை பாதிக்கும். தொப்பையை மறைக்கவும், 'ஷேப்'பாக இருக்கவும் இந்த பேன்டீஸ்கள் உதவும். இவற்றை ஜீன்ஸிலிருந்து புடைவை வரை எதற்கு வேண்டுமானாலும் அணியலாம். இவை சிறிது, நடுத்தரம், பெரியது போன்று ஏழு அளவுகளில் கிடைக்கின்றன.



## சொல்லி விடு!

நானோர் எழுத்தாளன்
நல்லபுது கவியாளன்
தேனார் தமிழ்த்தேடி
தெரிந்துமே தீட்டுபவன்!

ஊருக்கே உபதேசம்
உனக்கல்ல பெண்ணே
பேருக்கும் புகழுக்கும்
பேராசை கொள்ளுபவன்!

மனத்துக்கண் மாசுடையோன்
மறவா -மறதியுளோன்
இனத்துக்குத் தொண்டாற்ற
எண்ணுகிறேன், சரிதானே!?

பண்புடைமை நூறினிலே
பத்தாய்க் கிடக்கட்டும்
நண்பனாய் வாழுவதில்
நான்பெரிய மேதாவி!

பெற்றால் வழங்கிடுவேன்
பெரியபொய் சொல்வதில்லை
கற்றபடியே நடப்பேன்
களவெனக்குத் தெரியாது!

ஆருக்கும் இங்கேயான்
அடிமைப் படமாட்டேன்
ஊருக்கு உழைத்துவரல்
ஒன்றுதான் என்கடமை!

எந்தப் புலவனுமே
எனைவெல்ல முடியாது
சொந்தச் சரக்குண்டு
சொரியச் சொரியவரும்!

என்னோடு மோதியவர்
எவருமே தப்பவில்லை
சொன்னேன் துணையாளே
சொல்லிவிடு எல்லோர்க்கும்!

-சுதந்திரன்- ஈச்சந்தீவு,
கிண்ணியா.

### குறிஞ்சிக் கோவில்கள்

## பள்ளக்கால் ஸ்ரீ அருட்காளி

கருக்கல் தீய்ந்து மாய்ந்துவரும்
கங்குல் மறைந்து வான்வெளிரும
அருக்கன் வருகைக் குறியறிந்து
கூவி நவிலும் ஊர்ச்சேவல்!
பெருக்கிக் கோயில் வெளிமுற்றம்
பூண்பர் பக்தர் திருத்தொண்டு
உருக்கிச் செக்கர் பொற்குழம்பை
வார்ப்பான் கிழக்கில் எழுகதிரோன்!

ஆர்க்கும் துர்க்கை அருட்கோயில்
மணிகள்; சங்கு, முரசொலிக்கும்
சேர்க்கும் விரைவாய் பெருங்கூட்டம்
சிறப்புப் பூசை நிறைவெய்தும்
ஈர்க்கும் எம்மை என்றென்றும்
இலங்கும் அம்மைத் திருக்கோயில்!
தீர்க்கும் பிணிகள் அருளம்மை
அமர்வு பள்ளக் கலையூரில்!

வீசுந் தென்றல் இதமூட்டும்
விரிப்பான் வெய்யோன் விரிசுடரை
மூசும் அளிகள் மலர்மீது
மாந்தித் தேறல் இசைமிழற்றும்
பேசும் தென்னம் பெருந்தோப்பில்
பச்சைக் கிளிகள் களிகூர்ந்து
கூசும் நோக்கின் வெண்கலசம்
கூப்பித் தொழுவர் கோபுரமும்!

மேட்டுக் குன்றில் வெகுஅண்மை
விட்ணு கொண்டார் சிறுகோயில்
கூட்டுப் பஜனை நிகழ்ந்தேறும்
கூடிப் பாடி அடிதொழுவர்
காட்டும் பளிங்குக் கண்ணாடி
பட்டுக் கதிரும் எதிர்வாவி
வாட்டுந் துயரைத் தீய்த்திடுவார்
வழுத்தும் விட்ணு என்றென்றும்!

(தொடரும்)

- கவிஞர் ஸி.எஷ். காந்தி -

## ஆறடி மண்ணே!

மண்ணில் பிறப்பவர் இறப்பது முடிவு
மனிதப் பெருமையை சேர்ப்பது பெரிது
மரண எல்லையைத் தொட்டவர் மண்ணில்
மறையா மலர்களாய் வாழ்கிறார் எம்மில்!

நாதி யற்றுநாம் ஊர்பிரிந்து ஓடி
நாளுக் கோரூராய் பூமியில் வாடி
அங்கு லம்பிறழ்ந்தும் சண்டியர் ஆகி
அகதி வாழ்வில்யாம் குறுகினோம் இன்று!

கருத்து விண்டவர் கைவிரித்து மாயம்
வழுத்தும் தெய்வமும் கண்மூடித் தூக்கம்
வருகை நற்காலம் இடரினில் முடக்கம்
வாழ்வில் எங்கணும் மரணத்தின் கரணம்!

சாவை அணைத்தவர் காட்டினர் பாதை
சந்ததி மடிவினால் சமூகத்தில் ஓலம்
வாழும் போதுதம் வாழ்வினைத் துறந்தார்
வாழ்விட மின்றியே பாரினில் அவலம்!

வஞ்சம் நெஞ்சகம் கொண்டவர் வாழ்வு
மிஞ்சிப் பெருமையில் நிலைத்ததும் இல்லை!
கொஞ்சக் காலத்தில் வீழ்ச்சியில் உழன்று
வீழ்ந்து உக்குவார் ஆறடி மண்ணுள்!

- எம்.எஸ். நிலவன் -

## இலட்சியப் பயணம்

துள்ளித்திரியும் என்மகனை
தூரவுள்ள பெரியபள்ளிக்கு
துணிவுடன் கொண்டுசென்று
நாலெழுத்து நல்லதாக
நவின்றறிதல் என்கனவு!

ஏனிந்த தொலைசேர்த்தாய்
ஏனிந்த சுமையுனக்கு
கேள்விகளும் பாசமுடன்
கேலிகளும் மோசமுடன்!

நானெதற்கும் அஞ்சவில்லை
வன்னிப்போர் துண்டித்த
கல்வியவன் பெற்றிடவும்
சின்னமனம் பட்டதுயர்
சிறுகமாறி ஆறிடவும்
பெரியபள்ளி சேர்ந்ததனால்
பெரும்மகிழ்வு அவன்நெஞ்சில்!

பூவிசையின் சுழற்பந்தில்
நாவசைவில் தெள்ளுதமிழ்
சுடர்ந்தெழுந்து பரப்பிடவும்
கணிதமுடன் விஞ்ஞானக்
கலைகளவை பெற்றிடவும்
தேவையுடன் வேறுபல
பாஷைகளும் பெற்றெந்தன்
பாசமகன் உயரவேண்டும்!

பள்ளித்தலம் நோக்கித்தினம்
துள்ளுதையா துவிச்சக்கரம்!
பாதைநன்கு தெரிவதனால்
பள்ளங்கள் தடுப்பதில்லை!

-வன்னிமகள் எஸ்.கே. சஞ்சிகா-








## செத்த பின்தான் நடக்கும்!

கேட்டதெலாம் கிடைக்குமென்றும்
கெடுப்பவர்கள் இல்லையென்றும்
நாட்டமுள்ள செயலெல்லாம்
நல்லாயினி வருமென்றும்
தோட்டவளத் துரவுகள்
சொத்தாக சேருமென்றும்
சாத்திரியார் நாகமணி-என்
சாதகத்தில் சொன்னார்கள்!


போனதெலாம் திரும்பிவரும்
போகும்வழி துலக்கமாகும்
தானதர்மம் செய்திடுக!
தனவானாய் ஆகிடுவீர்!
தலைநிமிர்ந்து ஓங்கிடுவீர்
மகிமைச்செயல் நிகழ்ந்துவரும்
தேனான வாழ்வதுவும்
தித்திக்கும் நித்தமென்றார்!

அங்கர்மா கேட்டிங்கு
அழுகுதுகாண் கடைக்குட்டி
ஆட்டாமா புட்டினையும்
ஆணமும் தாவென்று
போட்டென்னை ஆட்டுகிறான்
பொல்லாத மூத்த மகன்!

பொங்கலும் சித்திரையும்
போனபின் எனக்குவேணாம்
தங்கச்சி சட்டைபோல
தரணுமென அடம்பிடித்து
எங்களது மூத்தமகள்
எம்மையிங்கு வாட்டுகிறாள்!

கொத்தரிசு முப்பது
கொள்ளி கட்டிருபத்தைந்து
அர்த்த மத்தியானத்தில்
அங்கு மிங்குந் திரிந்து
அரை வயிறை நிரப்ப
ஆடுகின்ற ஆட்டமெல்லாம்
ஆடி முடிந்து நிலம்
ஆறடி சென்றதுமே
சோதிடரின் குறிப்பில்
சொன்ன படி நடக்கும்

தம்பிலுவில்
- தயா -



# முட்கம்பி வேலியூடே மூன்று முடிச்சு!



கதிர்காமர் நலன்புரி நிலையத்தில், 'ஈ' புளொக்கில் உள்ள தனது கூடாரத்தில் இருந்த கல்யாணி அன்று காலை நேரத்துக்கே எழும்பியதற்கு காரணம் இருந்தது. முஸ்லிம் மகாவித்தியாலய புனர்வாழ்வு மையத்திலே இருக்கும் தன் கணவன் கண்ணதாசனைப் பார்க்க இன்று போக வேண்டும். செட்டிக்குளத்திலிருந்து அங்குசென்று வருவதற்கான பயணச் செலவு என்பது, இன்று அவள் வாழும் நிலையில் வெளிநாட்டுக்குச் சென்றுவரும் செலவு போலத்தான்.

கடந்த மாதம் கண்ணதாசனைப் பார்ப்பதற்கு புனர்வாழ்வு நிலையம் சென்றபோது அவன் சொல்லியிருந்தான், தேவையற்ற செலவு என்பதால் மாதத்தில் ஒரு முறை வந்து பார்க்கும்படி. என்னதான் அவன் சொன்னாலும், அப்பாவைத் தேடும் தனது பிள்ளையின் ஆறுதலுக்கும், தன் மன நிம்மதிக்கும் அவள் அவனிடம்தானே போகவேண்டும்.

மேலதிகமாக இருந்த நிவாரணப் பொருட்களை இரவே அடுக்கி வைத்திருந்தாள் கல்யாணி. இந்த நிவாரணப் பொருட்களை விற்றுத்தான் அதில் கிடைக்கும் சிறு தொகையை எடுத்து கணவருக்குத் தேவையான சில பராமரிப்புப் பொருட்களை வாங்கிச்செல்லவேண்டும். உணவு ஒன்றைத்தவிர வேறு எதுவும் புனர்வாழ்வு நிலையத்திலே அவனுக்குக் கிடைக்காது. தன்னைப் பார்க்கவரும் பிள்ளைக்குக் கொடுப்பதற்கு என்று சில பொருட்களை எடுத்து வைத்திருப்பான். ரொபி, சிறிய பிஸ்கட் பை என்பன அவன் சேமிப்பில் இருக்கும்.

காலை ஏழு மணிக்கு செட்டிகுளத்தில் இருந்து வவுனியாவுக்கு ஒரு பஸ் உண்டு. அந்தப் பஸ்ஸில் ஏறிச்சென்றுவிட்டால் வவுனியா ஆஸ்பத்திரியடியில் இறங்கி அங்கு ஓரிடத்தில் வைத்து இந்தப் பொருட்களை விற்றுவிட்டு, காசை எடுத்துக் கொண்டு கணவனைப் பார்க்கப்போகலாம். இரண்டு வயது மகள் லோஜினியை வீட்டில் இருக்கச்சொல்லிவிட்டு பஸ் வந்து நிற்கும் இடம்நோக்கி சாமான்களை தூக்கத் தொடங்கினாள். முதலில் பதினைந்து கிலோ அரிசியை நானூறு மீற்றர் தூரத்திலே உள்ள அந்த வீதியில் பஸ் தரிப்புக் கருகில் கொண்டுபோய் வைத்தாள். அங்கே அவளுக்குத் தெரிந்த தங்கச்சியம்மா அக்கா பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள். ''இஞ்சே தங்கச்சியம்மா அக்கா இந்த அரிசியை ஒருக்கா பார்த்துக்கொள்ளுங்கோ. நான் மாவையும், மரக்கறி எண்ணெய்ப் போத்தலையும் எடுத்திட்டு வாறன்'' எனச் சொல்லியவாறே முகாம் நோக்கி நடந்தாள். பதினைந்து கிலோ மாவும், மூன்று மரக்கறி எண்ணெய் ரின்னும் சேர்த்து மூன்றுவித சாமான்கள்.

பஸ் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எதிரே நின்றது. அது சிறிய பஸ் தரிப்பிடம். அருகில் உள்ள ஒரு மரத்தடியில், தான் கொண்டு சென்ற பொருட்களை இறக்கி வைத்தாள் கல்யாணி. சிறிய உரப்பை ஒன்றை விரித்து அதிலே லோஜினியை இருக்கச் செய்தாள். வியாபாரம் ஒன்றும் அவளுக்கு பழக்கமல்ல. சொல்லப்போனால் வியாபாரம் என்ற சொல்லுக்கே அர்த்தம் தெரியாதவள் அவள். ''அண்ணை வாங்கோ மலிவு. அக்கா வாங்கோ மலிவு'' என்று எல்லாம் சொல்லி அவளுக்கு விற்கத் தெரியாது. இன்றைய கஷ்டம் கல்யாணியை இப்படி மாற்றிவிட்டிருக்கிறது. அவள் வாழ்ந்த வாழ்க்கைக்கு இப்படி ஒரு நிலைமை வரும் என்று கனவில்கூட அவள் நினைத்திருக்கமாட்டாள்.

கல்யாணியின் சொந்த ஊர் யாழ்ப்பாணம் மானிப்பாய். கண்ணதாசன் சாவகச்சேரியைச் சேர்ந்தவன். கண்ணதாசனிடம் இரண்டு ஹயஸ் வாகனங்கள் சொந்தமாக இருந்தன. தினமும் இரு வாகனங்களும் வாடகை சேவையில் ஈடுபடும். ஒரு வாகனத்துக்கு அவனே சாரதி. இரண்டு வாகன உழைப்பினாலும் கைக்கு தாராளமாய் பணம் வந்தது. வெளிநாட்டு உறவுகளின் பண உதவி அவனுக்கு இருந்தபோதும் அவர்களிடம் ஒரு ரூபா கூட அவன் வாங்கியது இல்லை. ஒரு தடவை மானிப்பாயில் நடந்த திருமண நிகழ்வு ஒன்றுக்கு ஆட்களை ஏற்றிக்கொண்டு போனபோது அங்கு அறிமுகமானவள்தான் கல்யாணி. அதன் பின்னரான சந்திப்புகளின் பின்னர் இருவரும் காதலர்கள் ஆனார்கள்.

சில நாட்களில் இந்தக் காதல் இரு வீட்டாருக்கும் தெரியவரவே இரு வீட்டாருமே போர்க்கொடி தூக்கிவிட்டார்கள். இரண்டு தரப்பினர்களுக்கும் இந்த ஜோடிகளைச் சேர்த்துவைக்க துளிகூட விருப்பம் இல்லை. இருவரின் வீடுகளிலும் வேறு வேறு திருமணப் பேச்சுக்கள் தொடங்கிவிட்டன. அப்போது எடுத்த சுயமுடிவின்படி, அந்த யுத்த நிறுத்தக் காலத்தில் கல்யாணியையும் கூட்டிக்கொண்டு கிளிநொச்சிக்குச் சென்றுவிட்டான் கண்ணதாசன். இரு வீட்டாரும் இவர்களை கண்ணால்கூட பார்க்க விரும்பாத எதிர்ப்புநிலை. இருவரும் அங்கே புதுவாழ்வு தொடங்கினார்கள். ஹயஸ் வாகன வாடகை வேலையோடு அவ்வப்போது பெரிய வியாபார வேலைகளிலும் ஈடுபட்ட கண்ணதாசன் தாராளமான பணவரவு பெற்றான். கல்யாணியை ஒரு மகாராணி போலவே அவன் வைத்திருந்தான். சொல்லப்போனால் வீட்டிலே கல்யாணி சமைக்கவோ, கூட்டவோ கூடத் தேவையில்லை. ஒரு நடுத்தர வயதுப் பெண்ணை வீட்டுவேலைக்கென அமர்த்தி கல்யாணியின் சுமையைக் குறைத்தான் அவன். சொந்தமாக காணி, வீடு எல்லாம் இரணைமடுவிலே வாங்கிவிட்டார்கள். சொர்க்கமான வாழ்வு. அழகாய் ஒரு பெண் குழந்தை. லோஜினி எனப் பெயர். கல்யாணியைப் பார்த்து அயலவர் பலரும் இப்படித்தான் சொல்வார்கள் '' நீ குடுத்து வைச்சவள். இப்படி ஒரு புருசனும், வாழ்க்கையும் கிடைக்க முற்பிறப்பில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' என்று. இந்தச் சந்தோச வானிலே மிதந்துகொண்டிருந்தபோதுதான் யுத்தப் பறவையின் பறப்பு கிளிநொச்சி நோக்கியும் வரத் தொடங்கியது.

எல்லோரோடும் சேர்ந்து இவர்களும் இடம்பெயர்ந்தார்கள். ஓர் இடம், வேறு இடம் என மாறிமாறி நகர்ந்துகொண்டே இருந்தார்கள். பணமும் சொத்தும் வற்றிக்கொண்டே போயின. இப்போது தேவிபுரத்தில் சென்று ஒரு மரத்தின் கீழே குடிகொண்டார்கள். அங்கும் இருக்கமுடியாது என மக்கள் எல்லோரும் தீர்மானித்து இரணைப்பாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது கண்ணதாசனும் தன் மனைவி, பிள்ளையை ஹயஸில் ஏற்றிக்கொண்டு இரணைப்பாலைக்கு நகர்ந்தான். அங்கு சென்றபின் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு. தேவிபுரத்திலே - ஒரு களஞ்சியத்திலே ஷெல் விழுந்து களஞ்சியம் எரிவதாகவும், அங்கு போனால் அரிசி எடுக்கலாம் என்றும் சொல்லி இரணைப்பாலையில் இருந்து பலரும் தேவிபுரம் நோக்கி விரைந்தனர்.

அப்போது இருந்த பொருள் கஷ்டத்தில் கண்ணதாசனும் ஷெல் ஆபத்தை பொருட்படுத்தாது, ஹயஸ் வாகனத்தை எடுத்துக்கொண்டு தேவிபுரம் நோக்கிப் புறப்பட்டான். அங்கே போனபோது அரிசி மூடைகள் முடிந்திருந்தன. சிறிது எரிந்த நிலையில் மூன்று அரசி மூடைகள் இருக்கவே அவற்றை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இரணைப்பாலை நோக்கிப் புறப்படத்தொடங்கினான். விக்கி குடியிருப்பு வீதியடியால் சென்றுகொண்டிருந்த வாகனத்தின் வலப்பக்கமாக திடீரென வீழ்ந்தது ஒரு ஷெல். அதிலிருந்து கிளம்பிய ஒரு சிறுதுண்டு ஹயஸின் வலப்பக்கவாட்டுக் கண்ணாடியையும் உடைத்துக்கொண்டு அவனின் கையைப் பதம் பார்த்தது. அவனின் வலதுகை முழங்கையுக்கு சற்றுக்கீழாக துண்டிக்கப்பட்டு சிறு சதைத்துண்டில் தொங்கியது.

அதீத குருதிப் பெருக்கத்தில் அவன் மயங்கிவிட்டான். அந்தத் தெருவில் ஒரு மாட்டுவண்டியை ஓட்டிச்சென்ற ஐயாவும், அவரின் மகனும் கண்ணதாசனை புதுமாத்தளன் வைத்தியசாலையில் சேர்த்து இருந்தார்கள். ஒரு சில மாதங்களில் அவலம் சுமந்து அரச பகுதிக்கு வந்தபோதிலே கண்ணதாசன் புனர்வாழ்வு நிலையத்துக்கு உள்வாங்கப்பட்டான். விரும்பாவிட்டாலும் கூட வன்னியில் சில கட்டுமானங்களில் கட்டாயமாகவே செயற்படவேண்டிய நிலைமை இவனுக்கு இருந்தது. அதன் காரணமாக அவன் புனர்வாழ்வு என்று சொல்லப்படும் இடத்துக்கு அனுப்பப்பட கல்யாணியும் லோஜினியும் தனியாக நலன்புரி நிலையத்துக்கு சென்று வாழவேண்டிய நிலை.

நேரம் பிற்பகல் 3 மணி. இதுவரையில் அரிசியும், மரக்கறி எண்ணெயும் விற்றாகிவிட்டது. கல்யாணி இன்னும் மதியம் சாப்பிடவில்லை. பிள்ளை லோஜினிக்கு ஒரு பனிஸ் வாங்கிக் கொடுத்தாள். அதைச் சாப்பிட்ட லோஜினி, ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள மரத்தின் கீழே விரிக்கப்பட்ட உரைப்பையின் மேலே படுத்துவிட்டாள். வேகமாக மாவையும் விற்றுவிட்டால் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உள்ள தனது கணவனிடம் சென்றுவிட்டு முகாம் திரும்பலாம் என மனதுக்குள் நினைக்கிறாள் கல்யாணி. நேரம் நான்கு மணி ஆகிறது. இன்னும் மாவை விற்கவில்லை. கல்யாணிக்கு அருகிலே அரிசி விற்பதற்காக வந்திருந்த அம்மா அரிசியை விற்றுவிட்டார். அவளின் மகனும் முஸ்லிம் மகா வித்தியாலய புனர்வாழ்வு மையம்தான். நான்கரை மணிக்கு பிறகு அங்கு சந்திப்பு நடைபெறாது. அந்த அம்மா விரைவாக செல்லப்போகிறாள். கல்யாணியோ என்ன செய்வது எனத் தெரியாது தவித்தாள். உடனேயே அரிசி விற்ற பணத்தில் இரண்டு சோப்பும், ஒரு பிக்ரேசரும் பக்கத்து சின்னக்கடையில் வாங்கி அந்த அம்மாவிடம் கொடுத்தாள். ''அம்மா... இந்தச் சொப்பிங் பேக்கை கண்ணதாசன் என்றவரிட்ட குடுத்துவிடச்சொல்லி உங்கட மகனிட்டக் குடுத்துவிடுங்கோ. நான் நாலரை மணிக்குள்ள வரமுடியுமோ தெரியேல்லை'' - அவசரமாகவே அந்த அம்மாவிடம் சொன்னாள் கல்யாணி. அந்த அம்மா உடனடியாக பஸ் ஏறிப்புறப்பட்டாள்.

பத்து நிமிடம் கழிந்திருக்கும். ஒருவர் வந்தார். ''மா என்ன விலை தங்கச்சி போகுது....''

''வெளிக்கடைகளில் எழுபது ரூபா போகுது நான் நாற்பது ரூபாவுக்கு தாறன், ஐயா.... பதினைஞ்சு கிலோ கிடக்கு, எடுங்கோவன்...''

''பிள்ளை... பதினைஞ்சு கிலோவையும் எடுக்கிறன். முப்பந்தைந்து ரூபா போட்டு தாங்கோ...''

பாவம் அவள் என்ன செய்வாள். இவ்வளவு விலைக்குறைப்புச் செய்தும், அதுவும் போதாது என்று கஞ்சத்தனம் காட்டும் சிலரிடம் பேசி என்ன பயன். அவள் இருக்கும் நிலையில் பேரம் பேசவா முடியும்? கிலோ முப்பத்தைந்து ரூபாப்படி மாவை விற்றாள். பணத்தைப் பெற்றுவிட்டு. லோஜினியையும் எழுப்பிக்கொண்டு வேகமாக அடுத்த பஸ் ஏறி முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு முன்னால் இறங்கினாள். நேரம் நான்கே முக்கால் மணி. கணவனைச் சந்திப்பதற்குச் சென்று சந்திப்புப் பீடத்தில் அனுமதி கேட்டாள். ''நான்கரை மணிக்கு பின்னர் சந்திப்பு இல்லை.'' - வாயிலில் வைத்தே அவளை திருப்பியனுப்பினார்கள். லோஜினியையும் தூக்கிக் கொண்டு கண்ணீரோடு செட்டிகுள பஸ் ஏறுகிறாள் கல்யாணி.

இரண்டு வாரங்கள் கழிந்திருக்கும். கல்யாணியிடமிருந்து கண்ணதாசனுக்கு ஒரு கடிதம்.

''உங்களை ஆறு மாதத்தில் விடுவதாகச் சொல்லி இன்னும் விடவில்லை. எந்த முடிவும் இல்லை. நீங்கள் வெளியில் வந்தாலும் கை இல்லாத நிலையில் உடனே தொழில் செய்து முன்னேறுவது கஷ்டம். என்னை மகாராணிபோல வைத்திருந்த வள்ளல் நீங்கள். அப்படியான உங்களை உழைத்து பார்க்கவேண்டிய நிலை எனக்கு வந்ததை எண்ணி நான் சந்தோசப்படுகிறேன். துளிகூட கவலைப்படவில்லை. இங்கே நான்கு குடும்பப் பெண்களுடன் சேர்ந்து நானும் குவைத்திற்கு பணிப்பெண் வேலைக்குப்போகத் தீர்மானித்துவிட்டேன். எனக்கு இது சரியாகப்படுகிறது. நான் தனியே வன்னி சென்று மீள்குடியேறவும் முடியாது. நீங்கள் வெளியே வந்ததும் வவுனியாவில் உள்ள லசிக்குமார் வீட்டில் இருக்கலாம். அவர்களுடன் கதைத்துவிட்டேன். நான் வேலைசெய்து உங்கள் வங்கிக் கணக்குக்கு காசு அனுப்புவேன். இரண்டு வருடம் உழைத்தால் போதும், அந்த மூலதனம் மூலம் சிறு வியாபாரம் தொடங்கலாம், நீங்கள் வெளியே வந்தாலும் எந்த வழியிலும் சரி உழைத்து பழைய வாழ்க்கையைத் திரும்பவும் தருவீர்கள் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. எம்மை ஒதுக்கிய பெற்றோரிடம் உதவி கேட்டுப் பலனில்லை. எனக்கு ஒரே கவலை, மூன்று வருடம் உங்களோடு வாழ்ந்தும், சம்பிரதாயபூர்வமாக எனக்கு நீங்கள் தாலி கட்டவில்லை என்று. இப்போது புனர்வாழ்வு முகாமில் பலரும் செய்வது போல எனக்கு தாலி கட்டிவிடுங்கள். நான் தாலி வாங்கி வருகிறேன். அதன் பின்புதான் நான் குவைத் செல்வேன். என் மன நிம்மதிக்கு இந்த இரண்டிற்கும் சம்மதியுங்கள்'' - கடிதத்தைப் படித்த கண்ணதாசனின் விழிகள் நீரால் நிறைந்தன.

நேரம் காலை 10.45 மணி. பஞ்சாங்கப்படி இந்த நேரம் சுபநேரமோ, எமகண்டமோ எதுவும் அவர்களுக்குத் தெரியாது. முஸ்லிம் மகாவித்தியாலய புனர்வாழ்வு நிலைய சந்திப்பிடம். முட்கம்பி வேலியின் குறுக்கே தடை போட சந்திக்க வந்தவர்கள் ஒரு பக்கம். முகாமில் உள்ளவர்கள் மறுபக்கம், சந்திப்பு நடக்கிறது, கல்யாணியின் அந்த ஆசை நிறைவேறப் போகிறது. மேளதாளம் இல்லை, மந்திர ஒலிகள் இல்லை, உறவினர்களின் வாழ்த்தொலி இல்லை, அக்கினி குண்டம் இல்லை. அந்த முட்கம்பி வேலிகளுக்குள்ளாக தனது கையை வெளியே நீட்டி கல்யாணியின் கழுத்திலே தாலியைக் கட்டுகிறான் கண்ணதாசன். அவனின் வலதுகை, முழங்கைக்கு சற்றுக்கீழே துண்டிக்கப்பட்டு இருந்ததனால் ஒருவாறு சமாளித்தே தாலியை கட்டினான் அவன். பலரும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். பிள்ளை லோஜினி அருகே நிற்கிறாள். கல்யாணியின் கண்கள் நீரைச் சொரிகின்றன; கண்ணதாசனின் கண்களும்தான்.

(விடியுமா?)

-யோ.புரட்சி-

# முற்போக்கு எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளை

உலக இலக்கிய மேதைகள் வரிசையிலே மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளை முகிழ்ந்து நிற்கின்றார். மலையாள இலக்கியம் வளர உழைத்த தகழியின் படைப்புகள், உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டமையால் ஏராளமான வாசகர்களைச் சென்றடையக் கூடிய வாய்ப்புக் கிட்டியது. தன் தலைமுறை எழுத்தாளர்களோடு போட்டியிட்டதோடு, தனக்குப் பின் வந்த மேலும் இரண்டு தலைமுறை எழுத்தாளர்களோடும் ஈடுகொடுத்து, மூன்று தலைமுறைகளிலும் நிகரற்று நின்ற தனிப்பெரும் படைப்பாளி தகழி சிவசங்கரப்பிள்ளை ஒருவரே. மக்களுக்காக இலக்கியம் படைத்த யதார்த்த படைப்பாளி என்ற வகையில் தகழி சிறப்புப் பெறுகின்றார்.

1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி தகழி என்னும் இடத்தில் பிறந்த சிவசங்கரப்பிள்ளை, கல்வி கற்பதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். சட்டப்படிப்பை முடித்து 1939 முதல் சில ஆண்டுகள் வழக்கறிஞர் தொழிலையும் மேற்கொண்டார். ''நான் ஒரு கிராமத்தவன்' என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்ளும் தகழி, ஒரு கிராமத்தில் பிறந்து கிராமத்தவனாகவே வாழ்ந்தார். கிராமத்தின் மொழியிலும், செயலிலும் கதைகள் சொன்னார். தான் வாழ்ந்த கால கட்டத்திற்கும் சமூகத்திற்கும் முன்னே, அவர் பிரதிஷ்டை செய்த அர்ப்பணங்களாகவே அக்கதைகள் இருந்தன. எனவேதான் சாதாரண மக்கள் மத்தியிலும் இவருடைய கதைகள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தன.

மண்ணினுடையதும் மனிதனுடையதுமான கதைகளைப் பெற்று இலக்கியத்தை மக்கள் இலக்கியமாக்கிய தகழி சிவசங்கரப்பிள்ளை, மலையாள இலக்கியத்தின் ஒளிமயமான யுகத்தினைக் காட்டியவருமாவார். விவசாயக் குடும்பத்தில் பிறந்த தகழி கற்றதால் வழக்கறிஞராகவும், ஆர்வத்தால் எழுத்தாளராகவும் ஆனவர். உலக இலக்கியத்தில் மலையாள மொழியின் தனிச் சக்தியாகவும் இருந்தார். நாடு, மொழி, இன எல்லைகளுக்கப்பால் உலக இலக்கியத்தின் விசாலமான தளத்தில் தன் இருப்பை நிலைநிறுத்திக் கொண்டார்.

தகழியின் படைப்புகள் மக்கள் மனங்களைக் கவர்ந்தது மட்டுமன்றி அவர்களை உத்வேகம் கொள்ளவும் வைத்தன. 'குட்டநாட்டு' விவசாயிகள் உரிமையோடு ஒன்றுபட்டுப் போராடுவதற்கான உறுதியான ஓர் உணர்வை ஏற்படுத்திய படைப்பே இவரின் 'ரண்டிடங்கழி'. நிலச்சுவான்தார்களுக்கு எதிராக வர்க்க உணர்வுள்ள தொழிலாளத் தோழர்களை ஒன்று திரட்டவும், அவர்களின் ஒற்றுமைக்குப் பலம் சேர்ப்பதற்குமான ஓர் ஆவேசம் மிக்க எழுத்தோவியத்தை 'ரண்டிடங்கழி'யில் காணலாம். 'ஆலப்புழை' நகரத்திலுள்ள தோட்டித் தொழிலாளர்களின் துன்பம் நிறைந்த கதைகளையும், அவர்களின் ஒற்றுமையால் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் 'தோட்டியுடே மகனி'ல் யதார்த்தமாக வெளிக்காட்டியிருப்பதை அவதானிக்க முடிகிறது. இக்கதையை எழுத்தாளர் சுந்தர ராமசாமி தமிழில் 'தோட்டியின் மகன்' என்று மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அந்தச் சமூக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும், அவர்களின் அவல வாழ்க்கையையும் இந்நாவல் சித்திரித்துக் காட்டுகின்றது.

தகழியை உலகப் புகழுக்குக் கொண்டு சென்ற நாவல் 'செம்மீன்'. இந்த நாவலை எழுதுவதற்கு முன் கடற்றொழிலாளர்கள் வாழுகின்ற கிராமத்துக்குச் சென்று அவர்களுடன் தங்கியிருந்து அவர்களின் பேச்சு மொழி, அவர்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, பழக்க வழக்கங்கள், தொழில் முறை போன்ற இன்னோரன்ன விடயங்களையும் நன்கு தெரிந்து கொண்டு தமது 'செம்மீன்' படைப்புக்கு அணிசேர்த்தார். காதலை மையப்படுத்திய நிலை இருந்தாலும், சமுதாயத்தைப் பற்றிய காட்சிகளில் சமூகக் கட்டுக்கோப்பை மீறிய எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் அப்படியே கதையைக் கொண்டு சென்றுள்ளார். கடலை அண்டி வாழும் மக்களின் சுக துக்கங்களையும், நேசத் துவேஷங்களையும் தமக்கே உரித்தான மொழிநடையில் இதயத்தைத் தொடும் விதமாக எடுத்துக் காட்டியுள்ளார். 'செம்மீன்' கதையை வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம், மலையாளத்தில் பேசப்பட்டதுடன், வேற்று மொழியினரும் விரும்பி ரசித்த படமாகும்.

சமுதாயக் கட்டமைப்பில் வந்த மாற்றம் தனி மனித உறவுகளையும், அதன் மூலம் ஏற்பட்ட வாழ்க்கைப் போராட்டங்களையும் எவ்வாறு பாதிக்கின்றது என்பதை 'கயிறு' என்னும் நாவல் மூலம் படம் பிடித்துக் காட்டியுள்ளார். சமுதாயத்தின் செல்லரித்த முகங்களைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் எழுதப்பட்ட 'ஏணிப்படிகள்' அன்றைய சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டும் நாவலாக அமைந்துள்ளது. மேலும் தகழி சிவசங்கரப்பிள்ளையின் 'தலையோடு', 'தெண்டிவர்க்கம்', 'ஔசேப்பின்டே மக்கள்' ஆகிய படைப்புகள் மண்ணுக்கும் மனிதனுக்குமுள்ள உறவைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. எல்லோரும் படித்து அதன் உண்மையான தாற்பரியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோககில் சின்னச் சின்ன வாங்கியங்களில் கிராமிய மண் வாசனையுடன் தந்துள்ளார். வாழ்க்கையின் விளிம்பு நிலையில் இருந்து அல்லல்படும் மக்களின் கண்ணீரும் வேதனையுமே அக்கதைகளில் நிறைந்துநின்றன. தோட்டிகள், வயல் பணியாளர்கள், நன்றியுள்ள நாயும் என்பனவற்றுக்குக் கூட அவர் கதைகளிலே உயிர்கொடுத்தன. முப்பத்தொன்பது நாவல்களும், இருபது சிறுகதைத் தொகுதிகளும், மூன்று நாடகங்களும், இரண்டு பயணநூல்களும், ஆறு தன்வரலாறுகளும் எழுதி மலையாள இலக்கியத்தின் சிறப்புக்குப் பெரும் பங்களிப்பைத் தகழி வழங் கியுள்ளார்.

தமது படைப்புகள் மூலம் பெருமை பெற்ற தகழிக்குப் பல விருதுகள் தேடி வந்தன. பத்மபூஷன், ஞானபீடம் போன்ற உயர் விருதுகளோடு சாகித்ய அக்கடமி விருதுகளும், வேறும் பல விருதுகளும் பெற்ற பெருமைக்குரியவர்.

அவருடைய எழுத்துலக வாழ்க்கைக்கு உறுதுணையாகத் தூண்டுகோலாக இருந்தவர் அவருடைய துணைவியார் காமாட்சி என்னும் காத்தம்மா. தகழி தனது இருபத்திரண்டாவது வயதில் காமாட்சியை திருமணம் செய்துகொண்டார். திருமணம் செய்த காலம் முதல் இறுதி வரை தமது கணவருக்குச் செய்யும் பணிவிடைகளைச் சிறப்பாக ஆற்றிவந்துள்ளமையை அவதானிக்க முடிந்துள்ளது என்று குறிஞ்சி வேலன் என்னும் எழுத்தாளர் தமது கட்டுரை ஒன்றில் தெளிவுபடுத்தியுள்ளார்.

கேரளத்தின் முற்போக்கு இலக்கிய வெளிப்பாட்டின் சக்தி மிக்க பிரமுகர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தகழி. கேசவ தேவ், பொன்குன்னம் வர்க்கி என்பவர்களோடு இணைந்து, முற்போக்கு இலக்கியச் செயற்பாட்டின் நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் அதன் வளர்ச்சிக்கு தம் மேலான பங்களிப்பினை வழங்கியுள்ளார். கேரளத்தின் முற்போக்கு எழுத்தாளராக அவர் முகிழ்ந்து நின்றார். எனவேதான் அவரது எழுத்துக்கள் மக்கள் பிரச்சினை சார்ந்ததாகவும், வர்க்க முரண்பாடுகளை எடுத்துக் காட்டுவனவாகவும், போராட்ட உணர்வைத் தூண்டுவனவாகவும் இருந்தன.

''மலையாள இலக்கியமும் கேரள மக்களின் வாழ்வும் ஒன்றோடொன்று முட்டி மோதி தடைபட்டு நின்ற ஒரு சந்தர்ப்பமும் கேரள மண்ணில் ஏற்பட்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் ஜீவிதமும் இலக்கியமும் புதியதொரு நீரோட்டத்தின் வழியாகப் பிரவகிப்பதற்காகவே தன்னம்பிக்கையோடு செயற்பட்டவர்களில் தகழி சிவசங்கரப்பிள்ளையும் ஒருவர் என்று, எதிர்கால வரலாற்றின் பக்கங்களில் எங்கோ ஒரு மூலையில் என்னைப் பற்றிக் குறிப்பிட முடிந்தால், அதுவே எனக்குக் கிடைத்த அதிஷ்டமாகக் கருதுவேன்'' என்று தமது திடமான நம்பிக்கையைத் தெரிவித்திருந்தார்.

''நான் எந்த ஒரு மொழியிலும் புலவனில்லை. எந்தவொரு விடயத்திலும் ஞானியுமில்லை. கேரளத்தின் குட்டநாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஒரு அப்பட்டமான ஒரு கிராமத்தவன் நான்'' என்றவர், ஜப்பான், தாய்லாந்து, வியட்நாம், சோவியத் யூனியன், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, மலேசியா ஆகிய நாடுகளுக்கு சென்று வந்தாலும் தமது இறுதி நாட்களில் தாம் பிறந்த தகழி மண்ணில் வந்திருந்து 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி தமது 87 ஆவது வயதில் மலையாள இலக்கிய வரலாற்றின் பல பக்கங்களை தமது இலக்கியத்தால் நிரப்பிவிட்டு மறைந்துவிட்டார்.




# சங்கீதம் பழகப்போன கழுதையின் கதை

**பாரதியார் கதை**

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

''புண்ணைத் தீர்க்க மூலிகையும் மண்ணைச் சேர்க்க நாகரத்தினமும் கொடுப்பேன்'' என்று திண்ணன் சொன்னான்.

அரசன் அவ்விரண்டையும் காட்டும்படி சொன்னான். திண்ணன் காட்டினான். வேட்டையிலே புண்பட்ட மானுக்கு அந்த மூலிகையை அரைத்துப் பூசினார்கள். உடனே புண் தீர்ந்துவிட்டது.

இந்தத் திண்ணனுடைய தவப்பெருமையும், அதனாலே கைகூடிய தெய்வ அருளும் அவன் முகத்திலும், விழியிலும், சொல்லிலும், செய்கையிலும் விளங்குவது கண்டு பாண்டியன் மனமகிழ்ச்சியுடன், அவனுக்கே தனது மகளை மணஞ்செய்து கொடுத்தான். ஆதலால், ''எதிர்பார்க்க முடியாத பயன் உலகத்தார் கண்டு வியக்கும் வண்ணமாக ஒருவனுக்குக் கைகூட வேண்டுமானால் அதற்கு தெய்வ பக்தியே உபாயம்'' என்று பருந்து சொல்லிற்று.

அப்பொழுது அந்தச் சபையில் சேனாதிபதி அக்நிகோபன் மகனாகிய ரணகுமாரன் என்ற இளம்புலியும், தந்திரஸேனன் மகன் உபாயவஜ்ரன் என்ற நரியும், வேறு பல புலி, நரிகளும், தம்முடன் உடம்பு முழுவதும் புண்பட்டு இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்த சிங்கமொன்றை இழுத்துக்கொண்டு ராஜசபையில் உத்தரவு பெற்றுக் கொண்டு வந்து வணங்கி நின்றன.

அந்தப் புண்பட்ட, கைதிச் சிங்கம் யாரென்றால், அதுதான் பேய்க் காட்டரசனாகிய தண்டிராஜன்!

இந்த ஆச்சரிய விளைவைக் கண்டு வீரவர்மன் புன்னகை செய்தது. விகாரன் என்ற பேய்க்காட்டு நரி மூர்ச்சை போட்டு விழுந்தது. புரோஹிதர், சேனாதிபதிகள் வீரவர்மனை வாழ்த்தி அவனுடைய சத்ரு இத்தனை நாளாகக் கைதிப்பட்டு வந்த மகிழ்ச்சியை விழியினாலே தெரிவித்தன.

**உபாயவஜ்ரன் என்ற நரியின் திறமை**

அப்பொழுது வீரவர்மன் ரணகுமாரனையும் அவன் தந்தையாகிய சேனாதிபதி அக்நிகோபனையும் நோக்கி மிகவும் மகிழ்ச்சி பாராட்டி ரணகுமாரனுக்குப் பதவியும் பட்டமும் மேம்படச் செய்தது. பிறகு உபாயவஜ்ரனை நோக்கிப் ''பிள்ளாய், இனிமேல் நீயும் நமது சபையில் ஒரு மந்திரியாகக் கடவாய்'' என்றது.

அங்கு மேலெல்லாம் இரத்தமொழுக, ஒரு கண்ணிலும் இரத்தம் வழியத் தலை கவிழ்ந்து நின்ற தண்டிராஜனுக்கு உபசார வார்த்தைகள் சொல்லி, உள்ளே அனுப்பி ராஜவைத்தியர் மூலமாகச் சிகிச்சை செய்விக்கும்படி ராஜாக்கினை பிறந்தது.

அப்பால் வீரவர்மன்

# திண்ணன் என்ற மறவனின் கதை

''உபாயவஜ்ரா, நீ புறப்பட்டது முதல் தண்டிராஜனுடன் நமது சபை முன்பு தோன்றிய காலம் வரை நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் ஒன்று விடாதபடி சொல்லு'' என்றது.

உபாயவஜ்ரன் ராஜசபையில் விஞ்ஞாபனம் செய்கிறது -

''சக்திவேல் ராஜேசுவரா! பொன்னங்காட்டிலிருந்து புறப்பட்டு நாகமலைக்குப் போகும்வரை விசேடமொன்றும் நடக்கவில்லை. அங்கு காசுக் குகையில் ரணகுமாரர் தமது பரிவாரங்களுடன் இருப்பதைக் கண்டேன். ராஜாக்கினை இப்படியென்று தெரிவித்தேன். அவர் தமக்கும் அவ்விதமாகவே உத்தரவு கிடைத்திருப்பதாகச் சொல்லி வழித்துணைக்கு யார் யார் வேண்டுமென்று கேட்டார். குடிலப்பன் என்ற குள்ளநரியையும், விளக்கண்ணன் என்ற வேட்டை நாயையும், தொளைச்சாண்டி என்ற மூஞ்சூற்றையும், கிழக்கரியன் என்ற காக்கையையும் அழைத்துக் கொண்டு போனேன்.''

**கோவிந்த நாம சங்கீர்த்தனக் கூட்டம்**

அப்போது வீரவர்மன் தனது சபையில் வந்து நின்ற மேற்படி நால்வரையும் கடைக்கண்ணால் நோக்கிப் புன்னகை செய்தது.

உபாயவஜ்ரன் சொல்லுகிறது - நான் அந்த நால்வரையும் கொண்டுபோய், ஓரிடத்திலே நிறுத்திக் கொண்டு, ''விளக்கண்ணா, தொளைச்சாண்டி, குடிலப்பா, கிழக்கரியா நீங்கள் நாலு பேரும் சிஷ்யர்களாகவும், நான் குருவாகவும் வேஷம் போட்டுக்கொள்ள வேண்டும்'' என்றேன். அப்படியே வேஷம் தரித்துக் கொண்டோம். கோவிந்த நாம ஸங்கீர்த்தனக் கூட்டமாகப் புறப்பட்டோம். பொது எல்லையில் நாக நதியில் ஸ்நானம் பண்ணி ஸந்த்யாவந்தனாதிகளை முடித்துக் கொண்டோம். 'கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்!' என்று நான் கத்துவேன்.''

''கோவிந்தா! கோவிந்தா!'' என்று சிஷ்யர் நால்வரும் கத்துவார்கள். கையிலே ஆளுக்கொரு தம்பூர், கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டே எதிரியெல்லைக்குள் பிரவேசித்தோம். நாகமலையில், குடியன் கோயிலுக்குப் பக்கத்திலே வேதிகை கட்டிக் கரடிச் சாத்தான் ஹோமம் வளர்க்கும் யாகசாலைக்குப் போய்ச் சேர்ந்தோம். பகல் முழுவதும் நாங்கள் கோவிந்த நாமத்தை விடவேயில்லை. கிழக்கரியனுக்குத் தொண்டை கட்டிவிட்டது. எங்களைக் கண்டவுடனே கரடிச்சாத்தான் ''வாருங்கள்.... வாருங்கள்'' என்று உபசாரம் சொல்லிப் பக்கத்திலிருந்த யாக கோஷ்டியாரிடம் அடியேனைக் காட்டி ''இவர் பெரிய பாகவதர். துளஸீ தாஸ், கபீர்தாஸ் அவர்களுடைய காலத்துக்குப் பிறகு இவரைப் போலே பக்தர் யாரும் கிடையாது'' என்று சொல்லிற்று.

மாலையில் யாககோஷ்டி கலைந்துவிட்டது.

தொடரும்...



## ஹிந்தி இதழுக்கு உள்ளாடையுடன் போஸ் கொடுத்தார் திரிஷா

கொலிவூட், டோலிவுட் என சுற்றி வந்த திரிஷா தற்போது தேசிய நடிகையாகிவிட்டார். 'கத்தா மீத்தா' என்ற ஹிந்திப் படத்தில் நடித்ததால் திரிஷாவை தேசிய அளவிலான கவர்ச்சிக்குள் தள்ளிவிட்டார்கள். ஹிந்திக்குப் போன வேகத்தில் 'மேக்ஸிம் இந்தியா' இதழுக்கு கவர்ச்சிகரமாக 'போஸ்' கொடுத்து அமர்க்களப்படுத்தியுள்ளார் திரிஷா.

தமிழ் சினிமா ரசிகர்கள் இதுவரை பார்த்திராத கோணத்தில் விதம் விதமாக போஸ் கொடுத்துள்ளார் திரிஷா. ஜூலை மாதத்துக்கான மேக்ஸிம் இதழில் இந்தக் கவர்ச்சிகரமான படங்கள் வெளியாகியுள்ளன. இந்தப் படங்களைப் பார்க்கும் போது, ஹிந்தியில் எந்த அளவுக்கு திரிஷா கவர்ச்சி யாக நடிப்பதற்கு குறி வைத்திருக்கிறார் என்பது விளங்குகிறது.



## கவர்ச்சியில் கலக்க வருகிறார் பாவனா

இதுவரை காலமும் கவர்ச்சி காட்டாமல் குடும்பப் பாங்கான படங்களில் நடித்துவந்த பாவனா, இப்போது கவர்ச்சியாக நடிப்பதற்கு முடிவுசெய்திருக்கிறார்.

அசல்' படத்திற்குப் பின்னர் தன்னைத்தேடி நிறைய வாய்ப்புகள் வரும் என எதிர்பார்த்திருந்தார் பாவனா. இருப்பினும் எதிர்பார்த்த வாய்ப்புகள் வரவில்லை.

வாய்ப்புகள் வராமல் போனதற்கு பாவனாவும் கூட ஒரு காரணம். முன்னணி நடிகர்களோடு மட்டுமே ஜோடியாக நடிப்பேன் என்று இருக்கிறார். இதனால் புதிய நாயகர்களை வைத்துப் படம் எடுக்கும் இயக்குநனர்கள் பாவனாவைக் கண்டு கொள்ளவில்லை.

இதனால் வருத்தம் அடைந்த பாவனா, இப்படி வராத பட வாய்ப்புக்களைச் சரி செய்ய கவர்ச்சிக்குத் தயாராகிவிட்டார். சினேகாவைப்போல திரைப்படங்களோடு விளம்பரங்களிலும் விறுவிறுப்பாக நடிக்கப் போகிறாராம்.

எனது கவர்ச்சியைப் பார்த்து என்னைத்தேடி படவாய்ப்புக்கள் நிறையவரும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார் பாவனா. இவ்வளவு காலமும் குடும்பப் பெண்ணாக பார்த்த பவனாவை கவர்ச்சி உடையில் பார்க்க ரசிகர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்....



## ரஜினியின் இளைய மகள் திருமணம் செப். 3

ரஜினி தனது இளைய மகளின் திருமண அழைப்பிதழைக் கொடுப்பதற்காக, உலக நாயகன் கமல்ஹாஸன் - கௌதமியை சந்தித்தார். திரையுலகில் ரஜினி - கமல் ரசிகர்களுக்குள் போட்டி இருந்தாலும், ரஜினிக்கும் கமலுக்கும் மிக நெருக்கமான நட்பு உண்டு. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இருவரும் கலந்துபேசிவிட்டே முடிவெடுப்பது வழக்கம். அதேபோல தனது வீட்டின் எந்த நிகழ்வாக இருந்தாலும் அதில் கமல் இருக்குமாறு பார்த்துக் கொள்வார் ரஜினி.

இப்போது தனது இளைய மகள் திருமணம் என்பதால் கமல்ஹாஸன் - கௌதமிக்கு தம்பதி சமேதராக அழைப்பதழ் கொடுத்தார் ரஜினி.

அரசியலில் உயர்மட்டத்தில் உள்ளவர்களுக்கு நேரில் சென்று அழைப்பிதழ் கொடுத்த ரஜினி, இப்போது திரையுலக முக்கிய புள்ளிகளை நேரில் சந்தித்து அழைத்து வருகிறார். கே.பாலச்சந்தர், ஏவி.எம்.சரவணன், கே.ஆர்.ஜி., ராம நாராயணன் போன்றவர்களுக்கு ரஜினி நேரில் அழைப்பிதழ் வழங்கினார். செப்ரெம்பர் 3ஆம் திகதி ராஜா முத்தையா மற்றும் ராணி மெய்யம்மை திருமண மண்டபங்களில் சௌந்தர்யா - அஸ்வின் திருமணம் நடக்கிறது. சௌந்தர்யாவின் திருமண உடைகளை பிரபல ஆடை வடிவமைப்பாளர் மணீஷ் மல் ஹோத்ரா வடிவமைத்துள்ளார்.

## ஒக்டோபர் 8 இல் எந்திரன் வெளியீடு

செப்டெம்பரில் வெளியாகவிருந்த ரஜினியின் எந்திரன் ஒக்டோபர் 8ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'எந்திரன்' இசை வெளியீட்டு விழாவில் வைத்து அடுத்த மாதம் படம் வெளிவிடப்படும் என சன் பிக்சர்ஸ் நிறுவனம் அறிவித்திருந்தது.

இப்படம் ஹிந்தியில் ரோபோ என்ற பெயருடன் வெளிவருகிறது. இதன் இசை வெளியீட்டு விழாவில் பேசிய இயக்குநர் ஷங்கர், செப்டெம்பரில் வெளியாகும் என்று கூறினார்.

ஆனால் இப்போது, படம் வெளிவரும் திகதி மேலும் இரு வாரங்களுக்குத் தள்ளிப் போகக் கூடும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இயக்குநர் ஷங்கருக்கு ராசியான திகதி 8 என்பதால் ஒக்டோபர் 8 அன்றே படவெளியீட்டை வைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக சிலர் செய்தி வெளியிட்டுள்ளனர். ஆனால் அதில் சிறிதும் உண்மையில்லை என்றும், வெளியீட்டுத் திகதியை முடிவு செய்வது சன் பிக்சர்ஸ் நிர்வாகமே என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



## ஸ்லம்டோக் குழுவுடன் மீண்டும் ஏ.ஆர்.ரஹ்மான்

8 ஒஸ்கார் விருதுகளை தட்டிச்சென்ற 'ஸ்லம்டோக் மில்யனர்' படத்தின் குழு, மீண்டும் ஒரு முறை இணைந்திருக்கிறது. படத்தில் மென்மையான காதலை காட்டிய டேனி பாயல் தற்போது வித்தியாசமான திரைக்கதையுடன் மலை உச்சியில் நடக்கும் உணர்ச்சிவசமான கதையைக் கையாண்டுள்ளார். படத்தின் பெயர் '127 ஹவர்ஸ்'. இப்படத்திற்கு இசை அமைத்த ஏ.ஆர்.ரஹ்மான் தனக்கு ஆஸ்கர் கொடுத்தது சரிதான் என்ற அளவிற்கு இசை அமைத்து அசத்தியுள்ளார்.

மலை உச்சியில் நடக்கும் இக்கதையில் பிரபல ஹொலிவூட் நடிகர் ஜேம்ஸ் பராங்கோ கதாநாயகனாக நடித்துள்ளார். ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசை பிரமிக்க வைக்கிறது.

டேனி பாயல் மற்றும் ஏ.ஆர்.ரஹ்மான் மீண்டும் கூட்டணி அமைத்திருப்பது, ரசிகர்களுக்கு கண்டிப்பாக விருந்து படைக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இப்படம் நவம்பர் மாதம் 5ஆம் திகதி திரைக்கு வருகிறது.

## திருணத்திற்கு தயாராகிறார் ஸ்ரேயா

நிஜத்தில் திருமணக் கோலத்தில் மகளைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை ஸ்ரேயாவின் பெற்றோருக்கு அதிகரித்துவிட்டதாம். இப்போது அதற்காக மாப்பிள்ளை பார்த்துவருகிறார்கள்.

மீனா, ரம்பாவுக்கு சில மாதங்களுக்கு முன் திருமணம் நடந்தது. கோபிகா திருமணம் செய்து ஒரு குழந்தைக்கு தாயாகிவிட்டார். நவ்யாவும் திருமணமாகி கர்ப்பமாகவுள்ளார். அடுத்து நயன்தாரா - பிரபுதேவா திருமணத்திற்குத் தயாராகிறார்கள்.

அந்த வரிசையில் இப்போது ஸ்ரேயாவும் திருமணத்திற்குத் தயாராகிறார். பெற்றோர் அவருக்கு தீவிரமாக மாப்பிள்ளை பார்த்துவருகிறார்களாம். தமிழில் தற்போது 'சிக்கு புக்கு', 'ரவுத்திரம்' என்ற படங்களில் நடித்துவருகிறார் ஸ்ரேயா. இப்படங்கள் முடிந்ததும் திருமணம் செய்துகொள்ளவிருக்கிறார்.

தனது திருமணம் குறித்து ஸ்ரேயா கூறுகையில், ''திருமணத்தில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுள்ளது. எனக்கு பொருத்தமானவரை நான் சந்திக்கும்போது நிச்சயம் திருமணம் செய்துகொள்வேன். அந்தப் பொருத்தமானவரைத் தேடும் பணியில் எனது பெற்றோர் தீவிரமாக உள்ளது உண்மைதான். ஆனால் எனக்குப் பொருத்தமான மணமகன் வரும் வரை அவசரப்படமாட்டேன்''- என்றார்.

## மௌனம் கலைத்தார் அஜித்

மூன்று தடவைகள் பத்திரிகையாளர்களிடம் அஜித்தை விமர்சித்து வெளிப்படையாக பேட்டி கொடுத்தார் கௌதம் மேனன். ஆனால் ஒரு முறைகூட அஜித் அதற்குப் பதில் கருத்துத்தெரிவிக்கவில்லை. இப்போதுதான் முதல் முறையாக கருத்துத் தெரிவித்துள்ளார் அஜித். ''கார் பந்தயத்தில் ஆர்வம் இருப்பதால், அதற்காக வெளிநாடு போவதால், சினிமாவில் கவனம் செலுத்துவதில்லை என்று அவர் சொல்லுவது தவறு. நான் எதில் ஈடுபட்டாலும் அதிலேயே மூழ்கிவிடுவேன். அது என் இயல்பு. கார் பந்தயத்தில் நான் ஈடுபடுவதால் ஓர் இடைவெளி ஏற்பட்டது என்பது உண்மைதான். அதற்காக அதிலேயே இருந்துவிடுவேன் என்பது அர்த்தமல்ல. இதோ, நான் மீண்டும் வந்துவிட்டடேன்'' - என்றார்.

## தெலுங்கு படத்தில் கார்த்தி

தெலுங்கு படத்தில் நடிக்கவிருக்கிறார் கார்த்தி. இவர் நடிக்கும் படங்கள் தெலுங்கில் 'டப்' செய்யப்பட்டுவருகின்றன. அப்படங்களில் அவரே 'டப்பிங்' பேசுகிறார். இதையடுத்து தெலுங்கு ரசிகர்களைக் கவர நேரடியாக தெலுங்குப் படத்தில் நடிக்கிறார் கார்த்தி. இவர் நடிக்கும் படத்தை பாஸ்கர் இயக்குகிறார். பிரசாத் தயாரிக்கிறார். இப்போது ராம்சரன் தேஜா நடிக்கும் 'ஆரேஞ்ச்' படத்தை இயக்கிவரும் பாஸ்கர் இதையடுத்து கார்த்தி நடிக்கும் படத்தை இயக்குகிறார். தேவிஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். இந்தப் படம் தமிழிலும் 'டப்' செய்யப்படும் என்று கூறப்படுகிறது.



## படு கவர்ச்சியாக நடிக்கிறார் அனுஷ்கா

மகேஷ்பாபுவை வைத்து 'அத்தடு' என்ற தெலுங்கு படத்தை பிரமாதமாக ரசிகர்களுக்குக் கொடுத்த விக்ரமே அனுஷ்கா நடிக்கும் 'மகேஷ்பாபு' படத்தை இயக்குகிறார். இந்தப் படத்தின் அனைத்துக் காட்சிகளும் படமாக்கப்பட்ட நிலையில், ஒரு பாடல் காட்சி மட்டுமே இன்னும் இருக்கிறது.

இந்தப் பாடல் காட்சியில் திறந்த முதுகுடன் நடிக்கிறார் அனுஷ்கா. செப்டெம்பர் முதல் வாரத்தில் ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் இந்தப் பாடலை எடுக்கவிருக்கிறார்கள். படம் தமிழில் 'டப்' செய்தும் வெளிவரவிருக்கிறது.



## சூர்யாவுடன் நடித்த ஸ்ருதிக்கு படப்பிடிப்பின்போது காயம்

ஏழாம் அறிவு படத்தில் சூர்யாவுடன் கமல்ஹாஸன் மகள் ஸ்ருதி ஹாசன் நடிக்கிறார். இந்தப்படத்தின் படப்பிடிப்பின்போது ஸ்ருதி ஹாசனுக்குக் காயம் ஏற்பட்டது. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் இந்தப் படம்தான் தமிழில் ஸ்ருதிக்கு முதல் படம். இதன் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. வேளச்சேரி தாம்பரம் வீதியில் சண்டைக் காட்சியொன்று படமாக்கப்பட்டது. வில்லன்களுடன் சூர்யா மோதும்போது வில்லன் கூட்டத்தில் ஸ்ருதியும் சிக்கியது போல் காட்சிகள் படமாக்கப்பட்டன. அப்போது எதிர்பாராத விதமாக ஸ்ருதி அடிபட்டு காயமடைந்தார். இதையடுத்து படப்பிடிப்பை ரத்துச்செய்துவிட்டு ஸ்ருதி ஓய்வெடுத்துவருகிறார். சூர்யா சம்பந்தமான காட்சிகள் மட்டும் படமாக்கப்பட்டுவருகின்றன. இத்தகவலை ஸ்ருதி ஹாசனே வெளியிட்டுள்ளார்.

# ராணி துர்காவதி

புத்தாக்கம் : கே.கான்



# உன்னால் முடியும்



மனிதனது வாழ்க்கை குழந்தை போன்றது. அதைச் சிறப்பாக்குவதும் சீர்கெடுப்பதும் அவன் கையில் தான் உள்ளது. தோல்விகள் பல வரலாம். குழந்தை முதலடியிலேயே நடக்கத் தொடங்கி விடுவதில்லையே. முள்ளில்லாமல் ரோஜா இல்லையே. பிரிவுகள் உன்னைப் பொசுக்கலாம். பிரிவு என்பது இன்னொரு சந்திப்பின் ஆரம்பமே - சமூகம் உன்னை வெறுக்கலாம். நீ முத்தென்பதைச் சிப்பிக்குள் இருக்கும் வரை எவரும் அறியமாட்டார்கள். சாதிப்பவனுக்குச் சமூகம் தடையல்ல.

சிந்தித்துப் பார்; நீ பஞ்சு மேகமல்ல. மின்னல் தூங்கும் மலையுமல்ல. குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை! உன்னால் எல்லாம் முடியும்! முடங்கிக் கிடக்காதே, சமூகம் உன்னை முடக்கியே விடும். முன்னேறு! இலட்சியத்தைக் கையில் ஏந்து! கண்முன்னே காணும் வரை கலங்காது பயணி.

நீ வெல்வாய். நிச்சயம் நீ திரும்பும் பாதை வெற்றிப்பாதை தான்.

வெளிவேஷம் வேண்டாம். வீண் வம்பும் வேண்டாம். நீ மனிதனாக இரு. அதுவே உன்னைப் புனிதனாக்கும். ஏச்சுப் பேச்சு உன்னை ஏதும் செய்யாது. அவற்றையெல்லாம் ஒரு காதால் வாங்கி மறு காதால் விடு. உன் திறமையை நீ இனங்கண்டு இன்றே




சாதிக்கத் தொடங்கி விடு. பல வெற்றிகள் உன்னைத் தேடி வருவதை நீ அறிவாய். முத்தாய் ஜொலிப்பாய்!

ஹஸ்னா ஹம்ஸா,
ஆயிஷா ஸித்தீக்கா கலாபீடம்,
மாவனல்லை.

# கேள்வி நேரம்

அண்ணா! சில வேளைகளில் பாடங்கள் மறந்து போகின்றனவே, அதற்குக் காரணம் என்ன?

ஆம், சில வேளைகளில் நீ பாடங்களை மறந்து தான் விடுகிறாய். அதற்கு நான் முதன் முதலாகக் கூறக் கூடிய காரணம், அந்தப் பாடங்களில் உனக்குப் பிரியமில்லை என்பதுதான். எதில் உனக்குப் பிரியமில்லையோ அதை நீ கவனமாகப் படிக்கமாட்டாய். எதை நீ கவனமாகப் படிக்கவில்லையோ, அது உன்னுடைய மனத்தில் தங்கமாட்டாது. ஆதலால் எதையும் மறக்காமல் இருக்க வேண்டுமாயின், அதைப் பிரியத்தோடு கவன மாகப் படிக்க வேண்டும். நீ கதைகளை எப்படிக் கவனமாகப் படிக்கிறாயோ அப்படிப் படிக்க வேண்டும். உன்னுடைய பாடங்களையும் தான், அப்பொழுது அவை மறந்து போகா.

அத்துடன் எதை மறந்தாலும் அதை நினைவில் தங்கும்படி செய்வதற்குச் சில முறைகள் உள. அவைகளையும் நீ அனுசரித்தல் அவசியம்.

அம்மா! நீ எதையும் படித்துவிட்டுச் சும்மா இருந்து விடக் கூடாது; அது மறந்து போகும். அதனால் நீ படித்து முடிந்ததும் அதைச் சுருக்கமாச் சொல்லிப் பார்க்கவும் எழுதிப் பார்க்கவும் வேண்டும். சொல்லிப் பார்ப்பதோடு எழுதியும் பார்த்தால் நீ படிப்பது இரண்டு வழிகளிலும் போய் உன்னுடைய மனத்தில் உறுதியாக நின்று விடும்.

அம்மா! நீ எதைப் படித்தாலும் குருட்டுப் பாடமாக நெருட்டுருச் செய்யலாகாது. அது நீண்ட நாள் தங்காது. படிப்பதைப் பொருள் தெரிந்து படித்தால்தான் மறக்காமல் நிற்கும்.


அப்படி நீ படிப்பதையும் சிறுகச் சிறுகப் படிக்காமல் முழுவதையும் மொத்தமாகப் படிப்பதுதான் நல்லது. நாலு வரிகள் உள்ள பாட்டைப் படிக்கும் போது ஒவ்வொரு வரியாகச் சொல்லிப் பார்க்கக் கூடாது. நாலு வரிகளையும் சேர்த்தே சொல்லிப் பார்க்க வேண்டும். சிரமமாகவும் அதிக நேரம் பிடிப்பதாகவும் தோன்றினாலும் அதுதான் நல்ல பலன் தருவது.

அத்துடன், நீ பாராமல் படிக்கும் போது அவ்விதம் நீண்ட நேரம் படித்துக் கொண்டிராதே, இன்று சிறிது நேரம், நாளை சிறிது நேரம் என்று இடையிடையே படிப்பதுதான், பாடத்தை நன்றாக மனத்தில் பதியச் செய்யும். *

# விந்தைப் பிராணிகள்



துருவக் கரடி பருவத்துக்குத் தகுந்தவாறு இரை தின்னும். மழைக்காலத்தில் மாமிச உணவைத் தின்னும்; கோடை காலத்தில் தாவர உணவைத் தின்னும்.



விரியன் பாம்பு தன் குட்டியுடன் இருக்கும் போது, ஏதாவது ஆபத்து வரும் என்று தெரிந்தால் உடனே தன் குட்டியைக் கௌவி எடுத்து வாய்க்குள் அடக்கிக் கொண்டுவிடும்.

# அபூர்வ மூலிகையைத் தேடி... 4

வசந்தனின் தூக்கம் கலைந்து விட எழுந்து சுற்றும் முற்றும் நோக்கினான். பின்னர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த சந்தோஷிகனைத் தட்டி எழுப்பினான். உறங்கியவன் உடனே எழுந்தான். பனிக் குளிரில் உடல் கொஞ்சம் நடுங்கவே செய்தது. பைகளைத் தூக்கிச் சுமந்தபடி பாலத்தினூடே இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

''வசந்த்! இன்னும் எவ்வளவு தூரம் போக வேணும்...?'' நடந்து கொண்டே கேட்டான் சந்தோஷ். ''இன்னும் ஒரு பகல் நடக்க வேணும். இன்று பின்னேரம் தான் மண்கிண்டிமலை அடிவாரத்தை அடையலாம். ஏன் நடக்கச் சிரமமாக இருக்கா...?'' என்று பரிவோடு கேட்டான்.

''சேச்சே! நான் சும்மா தான் கேட்டேன்.... இனி வரப்போகும் ஆற்றை எப்படிக் கடக்கிறது? ஆழமாக இருக்குமே...'' சந்தோஷிகன் கேட்ட போதுதான், வசந்தனுக்கு ஆற்றின் நினைவு வந்தது. சிறிது நேரம் நின்று யோசித்தான்.




இவர்கள் நின்ற இடத்திலிருந்து ஒரு பத்தடி தூரத்தில் பாதையை மறைத்தபடி ஆற்று நீர் ஓடிக்கொண்டிருந்தது.

''தண்ணி இனி கடலை நோக்கித்தான் பாயும். அதனால பையைத் தலையிலே வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு தடியை எடுத்தால் ஆழத்தை பார்த்துப் பார்த்துப் போகலாம். அதோட... இது ஏற்கனவே பாதையாக இருந்த இடம் என்கிறதால ஆழம் மிகக் குறைவாகத் தானிருக்கும். நீ பயப்படாதே.. என்னைப் பிடித்துக் கொண்டே வா!'' வசந்தனுக்கும் உள்ளூர பயம் தொற்றிக் கொண்டாலும், எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற வெறி அவனுக்கு இருந்தது.

இருவரும் ஆற்றிலே இறங்கத் தயாரானார்கள். வசந்தன் நீளமான கம்பு ஒன்றை எடுத்து நீரின் ஆழத்தை அளந்தவாறு நகரத் தொடங்கினான். பின்னால் சந்தோஷிகன் தொடர்ந்து நடந்தான். ஆறு முழங்காலுக்குக் கீழாகவே ஓடிக் கொண்டிருந்து.

இப்போது நீர் மட்டம் முழங்காலுக்கு மேலே ஏறிவிட்டது. இருப்பினும்.... ஆழமானதாகத் தெரியவில்லை.

திடீரென்று, ''வசந்த்...!'' என்றபடி, இடறி நீருக்குள் விழுந்தான் சந்தோஷிகன். ''ஏய்...! சந்தோஷ்...! இதைப் பிடிச்சுக் கொள்... கவனம்!'' பதறியபடி கையில் கிடந்த கம்பைக் கொடுத்தான். நீர் சாதாரணமாக ஓடிக் கொண்டிருந்தமையால், சந்தோஷிகன் அதிக தூரம் போய்விடவில்லை. ஆனால்.. கையிலிருந்த பையைத் தவறவிட்டு விட்டான். வசந்தன் கொடுத்த கம்பை எட்டிப் பிடிக்க முயன்று தோற்றுப் போனான். ஆனால் வசந்தன் எப்படியோ பையைப் பிடித்துக் கொண்டான். வசந்தன் ''சந்தோஷ்..., கம்பைப் பிடி..., டேய் பிடடா....'' குரலை உயர்த்திக் கத்தினான்.

தண்ணீருக்குள் விழுந்து விட்டேனே என்ற பயத்தினால், கம்பைப் பிடிக்கமுடியாமல் திணறினான் சந்தோஷிகன். பின்னர் ஒருவாறு பிடிபட்டது. ஓடி வந்து வசந்தனை பற்றிக் கொண்டான் இளையவன்.

''அப்பாடா! கடவுளே...'' வசந்தன் நன்றி தெரிவித்துக் கொண்டான்.

''ஒரு தடையைக் கடந்து விட்டோம். இன்னும் எத்தனை விதமான தடைகள் வரப்போகின்றனவோ...?'' கேட்டான் சந்தோஷ்.

''எதையுமே முடியாது என்று பயப்படுவதை விட, முடியும் என்று முயற்சி செய்து பார்க்க வேண்டும். நம்பிக்கையோடு முயன்றால்... நிச்சயம் வெற்றி கிடைக்கும். இவ்வளவு தூரம் வந்த நாங்கள் அந்த மூலிகையோடுதான் போவோம்!'' அவன் கூறி முடிக்க இருவரும் கரையை அடைந்தார்கள்.

''பரிகாரி சொன்னதை வைத்துப் பார்த் தால் இந்த நேர் பாதையால் இரண்டு மைல் தூரம் நடந்து தான் பிறகு மேற்காக மலையடிவாரத்தை நோக்கி நடக்க வேண்டும். அப்படித் தானே!'' நடந்த படியே கேட்டான் வசந்தன்.

இராமசாமி ரமேஷ்

''ம்! இனிப் பயமில்லாமல் போகலாம். வேகமாக நடந்தால் பொழுது சாயிறதுக்குள்ள மலையடிவாரத்தை அடைந்து விடலாம். இதோ! இந்தப் பாதைதான்...''

இருவரும் அந்தப் பாதையில் நடக்கத் தொடங்கினார்கள். நீண்ட காலம் பாவனையில் இல்லாத பாதை சருகுகளால் நிறைந்திருந்தது.

சிறிது நேரம் ஓய்வெடுத்து களைப்பைப் போக்கிக் கொண்டார்கள். உடல் பழையபடி பயணத்திற்குத் தயாராக, மீண்டும் தமது பயணத்தை ஆரம்பித் தார்கள். பள்ளமான இடங்கள், பாறைகள், கரடுமுரடான பற்றைகள் அனைத்தையும் கடந்து, பரிகாரி சொன்ன கோயிலடியை அடைந்து மலையடிவாரத் திசையான மேற்கை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.




இரு மலைகளை ஊடறுத்துப் பாயும் நதி போல இவர்கள் சென்று கொண்டிருந்த பாதையைத் துண்டாடியபடி ஒரு காட்டாறு பாய்ந்து கொண்டிருந்தது. எப்படியும் இருபதடி அகலம் வரை வரும். இதை எப்படிக் கடப்பது? இருவரின் மூளைகளும் வேகமாய் சிந்திக்கத் தொடங்கின.

''சந்தோஷ்! இப்படிச் செய்தால் என்ன?'' அவனை அருகில் அழைத்துச் செய்ய வேண்டியவற்றைக் கூறினான். அப்போது.... சந்தோஷிகனின் முகம் பிரகாசமடைந்தது.

(தொடரும்)

# பரதநாட்டிய அரங்கேற்றம்



கனடாவின் ரொரண்டோவில் வசிக்கும் அஷானா - றொஷானா சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் ரொரண்டோ சீன கலாசார நிலையத்தில் இடம்பெற்றது.

மனோகரன் - சிறி யோகானந்தி தம்பதிகளின் புதல்விகளான அஷானா - றொஷானா சகோதரிகள் நாட்டியச் செல்வன் ஸ்ரீ சரவணபவ குகேந்திரனின் மாணவிகளும் வாசு சின்னராசாவின் முன்னாள் மாணவிகளும் ஆவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த கந்தசாமி - யோகபாக்கியம் தம்பதியரின் பேரப்பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது

# புதிய ஐ - போன் வருகிறது

ஐ - போன் 4 எனப்படும் புதுவகை கையடக்க இணைய பேசி மலேசியாவில் அறிமுகமாகவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஆங்கிலத்திலும் சிறப்பாகத் தமிழ்மொழியிலும் செயல்படும் ஆற்றல் கொண்டது என அறியப்படுகிறது.

ஆப்பிள் நிறுவனம் தனது மேம்படுத்தப்பட்ட 'ஐ போன்' புதிய பதிப்பை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது. ஐ- போன்- 4 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கையடக்க இணைய பேசி எல்லா வகையான ஏந்துகளையும் உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. 4 எனும் இயங்குதளத்தில் மிகவேகமாக இயங்கும் ஆற்றல் கொண்ட இந்த புதிய கையடக்கப்பேசியில், வீடியோ அழைப்பு, உயர்தரமான கணினித்திரை, 5 மெகா பக்சல் படக்கருவி, லெட் ப்ளாச், உச்ச திறன் கொண்ட வீடியோ பதிவு, கம்பியில்லா இணையச் சேவை என ஏராளமான நவீனமய சிறப்புத் தன்மைகள் உள்ளன.

இத்தனைக்கும் மேலாக, தமிழர்கள் அனைவரும் பெருமைபடும் வகையில் ஐ- போன் 4 தமிழில் உள்ள வரிகளை அப்படியே தமிழில் கொடுக்கும் வகையில் உருவாக்கம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

4இல் இயல்பாகச் சேர்க்கப்பட்டுள்ள தமிழ் இயக்கத்திற்கு மேலும் மெருகூட்டும் வகையில் மலேசியக் கணிஞர் முத்து நெடுமாறன் செல்லினம் எனும் தமிழ்ச் செயலியை வடிவமைத்துச் சாதனைப் புரிந்திருக்கிறார்.


www.laugfs.lk




சிலிண்டரின் விலை ரூ-1,000/- குறைவு!

சிலிண்டரின் விலை ரூ. 3,600/- மாத்திரமே!

தற்போது 12.5 கி.கி லாப்ஸ் கேஸ் சிலிண்டர் ஒன்றை கொள்வனவு செய்யும் உங்களுக்கு ரூ. 1000/- விசேட விலைக்குறைவு

LAUGFS Gas

TRIAD 23147

TIEFSTE PREISE!



2180.- statt 3150.- Sofa 2-plätzig



1760.- statt 2295.-

Möbel Ferrari

Kleine Preise

Grosse Auswahl

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40

Montag bis Freitag 9 bis 20 Uhr
Samstag 9 bis 17 Uhr

Direkt-Kedit -
6 Monate ohne Zins